
கல்கி

ஸ்வீட்டா...ஸ்டைலா...ஸ்மார்ட்டா...



KALKI ● 14.06.2009 ● ரூ.10.00 ● 96 பக்கங்கள்




சுவை ஆறு வகை! சமையல் நூறு வகை!
Anantha
Family Pack
குட்டி
குக்கர் ப்ரீ!
Anantha
Winning Combo
ஆனந்தாவில் மட்டுமே
அற்புதமான
இரண்டு பேக்குகள்.
Pressure Cooker + Deep Pan (without lid) + 3 lt. Cooker
3 Ltr Pressure Cooker + Pan
www.anantha.info

யார் அந்த மூவர்? கெஸ்ஸிங் போட்டி

ஹாய் ரீடர்ஸ்!

கல்கி ஜூலை இதழிலிருந்து ஸ்வீட்டா, ஸ்டைலா, ஸ்மார்ட்டா மூன்று தொடர்களை மூன்று ஜாம்பவான்கள் எழுத இருக்காங்க. அந்த மூணு பேரு யாராக இருக்கும்ன்னு கெஸ் பண்ண முடியுமா? ஒவ்வொரு தொடருக்கும் இரண்டு பேரைக் கொடுத்திருக்கிறோம். அவற்றுள் சரியான பெயரை 'டிக்' (✓) அடித்து கூப்பனைப் பூர்த்தி செய்து இந்தப் பக்கத்தைக் கத்தரித்து அனுப்புங்க. மூணு பேரையும் சரியாக 'கெஸ்' பண்றவங்கள்ல இருந்து குலுக்கலில் தேர்வாகும் ஐந்து பேருக்குப் பரிசு உண்டு. ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது. உறையின் மீது 'கெஸ்ஸிங் போட்டி' என்று குறிப்பிடவும்.

விடைகள் வந்து சேர
கடைசித் தேதி: 20.6.09

அட்டகாசமான சினிமா தொடர்


அனுஹாசன் ☐


கே.வி.ஆனந்த் ☐

அதிரடியான த்ரில்லர் தொடர்


ராஜேஷ்குமார் ☐


பி.கே.பி. ☐

அசத்தலான ஹாஸ்யத் தொடர்


☐ பாரதி பாஸ்கர்


☐ கு.ஞானசம்பந்தன்

கல்கியில் மிகவும் பிடித்த பகுதி...

நிச்சயம் தவிர்க்க வேண்டிய பகுதி ....

நான் கல்கியின்... சந்தாதாரர் ☐

கடையில் வாங்குபவர் ☐

பெயர்: .... வயது : ....

விலாசம் : ....

....

....

செல்: .... ஈமெயில்:..............................

நியூஸ்பாய்



சினிசிப்ஸ்

ஹிந்திக்குப் போகிறார் சூர்யா. அயனில் அவர் நிகழ்த்திக் காட்டிய ஆக்ஷன் அட்டகாசத்தில் மயங்கித்தான் ராம்கோபால் வர்மா இவரை ஹிந்திக்குக் கூப்பிட்டிருக்கிறார். இதில் ஜோதிகாவுக்கு ஏகப்பட்ட சந்தோஷமாம்.

(அப்ப ஹிந்தியிலயும் ஒளிமயமான எதிர்காலம்தான்!)

வித்தியாசமான கதையோடு வந்து வாகை சூடிய படம் 'பசங்க'. அது கொடுத்த தெம்பில், நல்ல கதையோடு வரும் புதுமுக இயக்குநர்களுக்கு வாய்ப்பு வழங்கப்படும் என்று தயாரிப்பாளர் கம் இயக்குநர் சசிக்குமார் அறிவித்திருக்கிறாராம்!

(தலைப்பும் ஒரு வார்த்தையிலதான் இருக்கணுமா...?)

அருந்ததி கொடுத்த வெற்றி ப்ளஸ் வசூல் மயக்கத்திலிருந்து அதன் தயாரிப்பாளர் இன்னும் மீளவில்லையாம். ஸார் எப்போதும் அருந்ததியில் நடித்த அனுஷ்கா புகழ் பாடிக் கொண்டிருக்கிறாராம். இதைக் கேள்விப்பட்ட அம்மணி அலுங்காமல் சம்பளத்தை உயர்த்தி விட்டாராம்.

(காற்றிருக்கறப்பவே தூத்திக்கோ!)

ஜெயா டீ.வி.யில் 'ராஜாதி ராஜா' படத்தை சுஹாசினி தாறுமாறாக விமர்சிக்க இயக்குநர் ஷக்தி சிதம்பரம் கொதிநிலையில் இருக்கிறார். அம்மணி தம் கருத்தை வாபஸ் வாங்கவில்லையெனில் கோர்ட் போவது குறித்து தம் நலம்விரும்பிகளுடன்

மீண்டும் நடிக்க வந்து விட்டார் ராம்கி. கூடவே டைரக்ஷனும் செய்கிறாராம். இதனால் தெலுங்கில் பட்டையைக் கிளப்பிய படம் ஒன்றின் உரிமையை வாங்கிப் போட்டிருக்கிறாராம்.

(அப்ப ஹீரோயின் நிரோஷான்னு சொல்லுங்க...?)

முதன்முதலாக ரெட்டை வேடம் கட்ட வருகிறார் வித்தியாசமாக நடித்துப் பழக்கப்பட்ட ஜீவா. ஒன்று அப்பா. மற்றொன்று மகன். ரெட்டை வேட யோசனை சொன்னது வீட்டு அம்மணியாம். அப்பா சௌத்ரியின் ஆசிர்வாதமும் கிடைத்துவிட்டதில் ஏக சந்தோஷமாம்.

(வாழ்க்கையில எப்ப அப்பா ரோல்?)

ஆலோசனையில் இருக்கிறாராம்.

(கோடம்பாக்கத்துக்கும் கோட்டுக்கும் தொடர்பு விட்டுப் போகாம இருக்கணுமில்ல)

பொக்கிஷம் படத்தின் கதையை வெளியே கசிய விடாமல் பொக்கிஷமாகப் பாதுகாத்து வருகிறார் சேரன். ஆனால், படத்தின் கதை ஒரு கொரியப் படத்தின் கதை என்று கோடம்பாக்கம் முழுக்க கசிந்திருக்கிறது.

(காத்து புகாத இடத்துலயும் கிசுகிசு புகுந்துடும்)

வேட்டைக்காரன் படத்துல விஜய்யோட சேர்ந்து ஜூனியர் விஜய்யும் ஒரு பாட்டுக்குக் குத்தாட்டம் போட்டிருக்கிறாராம். இது இளையதளபதி ரசிகர்களோட தனிப்பட்ட விருப்பத்தை நிறைவேற்றும் முயற்சியாம்.

(அப்ப குட்டி தளபதியும் ரெடியா...)



கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடுபவர் : லக்ஷ்மி நடராஜன்

கல்கி பில்டிங்க்ஸ், 47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 32

ஆசிரியர் : சீதா ரவி

உதவி ஆசிரியர்கள் : கதிர்பாரதி, அமிர்தம் சூர்யா

வடிவமைப்பு : எஸ்.ஸ்டீஃபன், எம்.மோகன், பா.கோபால்

தொலைபேசி : 044 - 4343 8888 (30 lines)

தொலைநகல் : 044 - 4343 8899

மின்னஞ்சல் - ஆசிரியர் குழு : kalki@kalkiweekly.com

விளம்பரப் பிரிவு : marketing@kalkiweekly.com

சந்தா பிரிவு : subscription@kalkiweekly.com

பிற தகவல்கள் : info@kalkiweekly.com

கல்கி இன்டர்நெட் முகவரி : www.kalkionline.com

சந்தா விவரம் - உள்நாடு :

ஒரு வருடம் : ரூ. 500/-

ஆறு மாதம் : ரூ. 270/-

வெளிநாடு (விமானத்தபால்) :

ஒரு வருடம் : ரூ.3,800/-

Bharathan Publications Private Limited,

Kalki Buildings, 47-NP, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 032.

"நம்ம தலைவர் படம்னா அது இப்படித் தாங்க இருக்கணும்" என, தங்கள் செல்லத் தளபதிக்கு ஏற்ற திரைக்கதையையும் காட்சி அமைப்புகளையும் அழகாக அடுக்கிக்கொண்டே போனார்கள் சென்னை தி.நகர் அரீனா அனிமேஷன் செண்டருக்கு வந்த கல கல கல்லூரி ஸ்டூடண்ட்ஸ்:

பரத் (எஸ். ஆர். எம். கல்லூரி): முதல்ல விஜய்யோட படம் ஒரு மசாலா படமா இல்லாம க்ளீன் அண்ட் நீட் படமா இருக்கணும்.

ஸில்வியா (இன்டீரியர் டிசைனிங் மாணவி): கரெக்ட், விஜய் படம் பார்க்க தியேட்டர் பக்கம் போனாக்கூட மசாலா நெடி தாங்காம ஒரே இருமலா வருதுன்னு புலம்பலா இருக்கு.

எஸ்.லோகேஷ்(சக்ரா கல்லூரி): ஏதோ கொஞ்சம் கொஞ்சம் அங்கங்கே படத்துல கிராஃபிக்ஸ் தூவினா பரவாயில்ல.. ஒரே யடியா, ஐஸ் க்யூப்லேர்ந்து விஜய் வெளில வர்றா மாதிரி காட்டறது, அவரு கார் பிளாஸ்ட் ஆனாக்கூட ஒரு சின்ன அடிகூட படாம தப்பிச்சு வர்றது எல்லாம் ரொம்ப ஓவர் பில்டப்... இதெல்லாம் தேவையே






VIJAY-in தசாவதாரம்!



இல்ல.

எஸ்.ஷிவா(எஸ். ஆர். எம். கல்லூரி): ஒரு சூப்பர் ஹிட் ஃபார் முலா கம் கதையை அனி மேஷன் மாணவ மாணவி





களாகிய நாங்க தயாரிச்சு இப்ப சொல்றோம் பாருங்க...இத மட்டும் அவர் அப் படியே யூஸ் பண்ணினா படம் சூப்பரா ஓடும்.

பிரகாஷ் (பி.சி.ஏ. படிக்கும்): எங்க ஓடும்... தியேட்டரை விட்டுட்டு ஒரேயடியா ஓடிடும் தானே???

எஸ்.ஷிவா: ஏய் கதையை முதல்ல கேளு... ஓப்பனிங் ஸீனே இப்படித் தாங்க. விஜய் ஒரு காலேஜ் ஸ்டூடண்டா இருப்பாரு...

மாதவன் (திருவள்ளூர் பொறியியல் கல்லூரி): ஆனா அது ஒரு கோ-எட் கல்லூரியா இருக்கணும்..

க்ருத்திகா (எஸ். ஐ. இ. டி. கல்லூரி): முக்கியமான விஷயம். விஜய், பிங், ப்ளூ, மஞ்சள், பச்சை பாண்ட் இப்படி சம்பந்தா சம்பந்தமில்லாத கலர்ல எல்லாம் ட்ரெஸ் போட்டு எங்களை மாதிரி யூத்களை அலற விடக்கூடாது...

பரத்: சரி கதைக் களத்துக்கு வருவோம். நண்பர்களே, நண்பிகளே... விஜய் இப்படி காலேஜ் ஸ்டூடண்டா வருவாரா... அவருக்கு அடிக்கடி கனவு வந்துக்கிட்டே இருக்கு



- ரவுண்டு கட்டும் ரகளை

மாம். (அப்போ தானே பாட்டு ஸீன் எல்லாம் இன்க்ளூட் பண்ண முடியும்!) கனவு கண்டுக்கிட்டே இருக்கறதால படிப்புல சுமாரான பார்ட்டியா





மாறிடுவாராம் அவரு.

ஷரண்யா (எஸ்.ஐ.இ.டி): இப்போதான் ஒரு அழகான, நம்மை அழவைக்காத ஹீரோயின் என்ட்ரி ஆகறாங்க... நிச்சயமா அது நயன்தாராவா இருக்கவே கூடாது சாமி... (என்றபடி கன்னத்தில் போட்டுக் கொள்கிறார்)

பிரகாஷ்: ஹீரோயின் பேசிப் பேசியே நிறைய நீதிக் கதைகளா சொல்லிச் சொல்லி (பாடிப் பாடி) ஹீரோவைத் திருத்திடறா...

ஷிவா: இதுல என்ன ப்யூட்டினா படம் முழுக்க ஃபைட் ஸீனே கிடையாது... அப்பப்போ ஹீரோவும் ஹீரோயினும்தான் சும்மாவாச்சும் சண்டை போட்டுப்பாங்க

லோகேஷ்: ஏனுங்கண்ணா, போங்கண்ணா போன்ற டயலாக்ஸுக்கும் தடா...

ஸில்வியா: அதேபோல சும்மா ஒரே ஒரு பாட்டுக்கு வெளிநாட்ல போய் ஷூட்டிங் செய்யற வேலை எல்லாம் நிறுத்திடணும்... உள்ளூர்லேயே எவ்வளவோ அழகான ஸ்பாட்ஸ் இருக்கே!

பரத்: ஸோ மொத்தத்துல விஜய் திருந்திடறாரு... நல்ல காலேஜ் பையனா மாறி, சமர்த்துப் பிள்ளையா வலம் வர்றாரு... இவ்வளவு தான் கதையே. ஓ.கே.வா?





ஒட்டுமொத்தமாக: விஜய்யோட பஞ்ச் டயலாக்ஸ் கூட ரொம்ப பஞ்சராகிப் போச்சு. ஸோ நாங்க கொடுக்கற இந்த டயலாக்ஸை எல்லாம் பஞ்சமே இல்லாம தலைவரை யூஸ் பண்ணிக்கச் சொல்லுங்க:

"விஜய்யோட பஞ்ச் டயலாக்ஸ் கூட ரொம்ப பஞ்சராகிப் போச்சு!"

சூரியனைத் தொட்டவனும் இல்ல,
என்னால கெட்டவனும் இல்ல...

தோனி அடிச்சா போகுது ஃபோர்
நா சும்மா பாத்தாலே பறக்குது கார்

எப்படி எங்க டயலாக்ஸ்... அனிமேஷன் மாணவர்களாச்சே சும்மாவா? நாங்களே விதவிதமான கெட் அப்களை விஜய்க்குக் கொடுத்திருக்கோம். விஜய்யின் தசாவதாரம்னு எடுத்தா பிச்சுக்கிட்டு ஓடும்'' என்றார்கள்.

- நளினி சம்பத்குமார்



ஸ்டாலின்: ஏற்றமும் எதிர்பார்ப்பும்

அண்ணா முதலமைச்சராக இருந்த காலகட்டம் அது. கோபாலபுரத்தில் இளைஞர்கள் சிலர் ஒன்று சேர்ந்து தி.மு.க. மன்றம் ஒன்றைத் துவக்க முடிவு செய்தார்கள். ''மன்றத்தைத் துவக்கி வைக்க முதல்வரை அழைக்கலாம்'' என்றார் ஒரு இளைஞர். ''அந்தப் பொறுப்பை நீயே எடுத்துக்கொள்'' என்றார்கள் மற்றவர்கள். முதல்வரால் தேதி ஒதுக்க முடியவில்லை. பணிப் பளு! ஆனால், அந்த இளைஞர் விடாமல் அண்ணாவுக்கு அன்புத் தொல்லை கொடுத்தார். ''உன் அப்பாவைவிட நீ பிடிவாதக்காரனாக இருப்பாய் போலிருக்கிறதே'' என்ற அண்ணா, அந்த இளைஞரின் அன்புக்குக் கட்டுப்பட்டு தேதியைக் குறிப்பிட்டு, வருவதாக ஒப்புக்கொண்டார். நாற்பது வருடங்கள் கழித்து அந்தப் பிடிவாதக்கார இளைஞர், இன்று துணை முதல்வர்! ஆனால் இளமைத் துடிப்பில் இருந்த பிடிவாதம், நாள்பட... நாள்பட சகிப்புத் தன்மையோடு கூடிய பொறுமையாக மாறியது. பல்வேறு காலகட்டங்களில், ஏற்றங்கள் ஸ்டாலினைக் கை கழுவிப் போனதற்கும் இதுவே காரணமாக இருந்திருக்கலாம்.

எமர்ஜென்ஸி நேரம் அது. இந்திரா காந்திக்கும் தி.மு.க.வுக்கும் உறவு கசந்து போயிருந்தது. கோவையில் தி.மு.க மாநாடு. கல்லூரி இளைஞரான ஸ்டாலின், மத்திய அரசைக் கடுமையாக விமர்சித்துப் பேசினார். பின்னர் கலைஞர் தலைமையிலான தமிழக அரசு கலைக்கப்பட்டது. ஸ்டாலின் உட்பட தலைவர்கள் மிசாவில் கைதாயினர். சென்னை சிறைச்சாலையில் ஸ்டாலின் மீது விழவிருந்த அடிகளைத் தாங்கிக்கொண்டு உயிர்விட்டார் சிட்டிபாபு. மனத்தில் வடுவாகப் பதிந்து விட்ட இந்தத் தியாகத்தை இன்று நினைத்தாலும் ஸ்டாலினின் குரல் கரகரக்கும்; கண்ணில் நீர் கட்டும். உயர் படிப்பா, பொது வாழ்க்கையா என்று மதில் மேல் நின்றிருந்த ஸ்டாலினை அரசியல் களத்துக்குள் தள்ளி விட்ட துயர நிகழ்ச்சி அது.

எம்.ஜி.ஆர் ஆட்சிக் காலத்தில் தமிழ்நாடெங்கும் சுற்றியது தி.மு.க. இளைஞர் பட்டாளம். ஸ்டாலின், பரிதி,

சிவா என்று ஊருக்கு ஊர் போய் இளைஞர் அணியைக் கூட்டினர். திருச்சியில் நடந்த இளைஞர் அணிக் கூட்டத்தில் பரிதி முன்மொழிய, ஸ்டாலின் இளைஞர் அணிச் செயலாளரானது அவரது முதல் ஏற்றம்.

அதன் பின் ஆயிரம் விளக்கு சட்டமன்ற உறுப்பினராக இருந்து வெற்றி, தோல்விகளைச் சந்தித்தார். 1989ல் தி.மு.க. மீண்டும் ஆட்சிக்கு வந்தபோது, அவர் அமைச்சராக்கப்பட்டிருக்க வேண்டும். பின்னர் அதை ஈடுகட்டும் விதமாக 1996ல் மேயர் பொறுப்பு வந்தது. பத்து மேம்பாலங்களை சென்னையில் கட்டி முடித்தார். 2001ல் மீண்டும் மேயர், சட்டமன்ற உறுப்பினர். ஆனால் ஜெயலலிதா, சட்டமன்ற உறுப்பினர் ஒருவர், மற்றொரு பதவியான மேயர் பொறுப்பை வகிக்கக்கூடாதென்று ஸ்டாலினிடம் இருந்து அந்தப் பொறுப்பைப் பறித்துவிட்டார்.

இடைக் காலத்தில் ஸ்டாலினின் தனிப்பட்ட இமேஜ் விமர்சனத்துக்கு உள்ளாயிற்று. அவரை 'தாதா' போல சித்திரித்த காலம் உண்டு. ஆனால், அதற்கு நேர்மாறானவர் ஸ்டாலின். எப்போதும் பின்னணியில் இருப்பதையே விரும்பியவர். பழகுவதற்கு இனியவர். ஆனால், ஒன்றிரண்டு முறை அவரோடு பழகியவர்கள் இதைப் புரிந்துகொள்ள முடியாது. கோபம் வந்தால் உடனே காட்டி விட்டாலும் அதை மனத்தில் வைத்துக் கொள்ளாதவர்.



1989ல் ஜெயலலிதா விவகாரம் சட்டசபையைக் கலக்கியபோது தமது இருக்கையிலேயே அமர்ந்து அடக்கம் காத்தவர் ஸ்டாலின். 'ஸ்டாலின் தமது தைரியத்தை வெளிப்படுத்தும் வகையில் செயல்பட வேண்டும். மிகவும் அடங்கி இருக்கிறார்' என்று சொல்பவர்கள் உண்டு.

உதாரணமாக '2001ல் கலைஞர் கைதின் போது அவர் தலைமறைவாகிப் போகாமல் தைரியமாக அறிவாலயத்தில் அமர்ந்து செயல்பட்டிருக்க வேண்டும்' என்று ஒரு விமர்சனம் உண்டு. நண்பர்களைச் சடாரென்று கைவிட்டு விடுவார் ஸ்டாலின் என்ற குற்றச்சாட்டும் உண்டு. ஸ்டாலினுக்கு மிக நெருக்கமாக இருந்து, பின்னர் தற்கொலை செய்துகொண்ட அண்ணாநகர் ரமேஷ், 'தனக்கு ஸ்டாலின் கை கொடுக்கவில்லை' என்று வருத்தப்பட்டதாகவும் சொல்வார்கள்.

தந்தை கலைஞரைப் போல் ஸ்டாலினும் படிப்பதிலும் எழுதுவதிலும் ஆர்வம் மிக்கவரா என்றால், இதில் கொஞ்சம் தாமதமாகவே விழித்துக் கொண்டிருக்கிறார். ஸ்டாலின் முரசொலி நிர்வாகியாக இருந்து உடன்பிறப்புகளுக்குக் கடிதங்கள் எழுதியதுண்டு. அப்பாவின் நிர்வாக அனுபவம், ஸ்டாலினுக்கு உண்டா என்ற கேள்வியை எழுப்பினால், அதற்கான பதில், ''அந்த வகை



நண்பர்களைச் சடாரென்று கைவிட்டு விடுவார் என்ற குற்றச்சாட்டும் உண்டு

யில் அவர் முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறார்'' என்பதுதான்.

2006ல் ஸ்டாலின் உள்ளாட்சித் துறை அமைச்சரான பின்பு அதிகாரிகளுடன் நடந்த கலந்தாய்வுக் கூட்டங்களில் தம் கருத்துக்களைச் சொல்லாமல் அமைதியாகக் கவனித்தபடி இருந்ததை நினைவு கூர்கிறார் கோட்டை அதிகாரி ஒருவர். ''இப்போது நிலைமை மாறியிருக்கிறது. தமது கருத்துக்களைச் சொல்லி அதைச் செயல்படுத்தும் வகையில் அதிகாரிகளைக் கையாள்கிறார் ஸ்டாலின்'' என்கிறார் அதே அதிகாரி.



இப்போது எல்லோர் மனத்திலும் தொக்கி நிற்கும் ஒரு கேள்வி, ஸ்டாலின் தமது செயல்பாடுகளால் தமிழக வரலாற்றில் இடம்பெறுவாரா என்பதுதான். விமர்சனங்களும், பாராட்டுகளும் கலந்த சாதனை கலைஞருடையது. ஸ்டாலினுக்கோ பல சவால்கள் காத்திருக்கின்றன. கூட்டணிக் கட்சியான காங்கிரஸை அவர் சமாளிக்க வேண்டும். ஜெயலலிதா, விஜயகாந்த் போன்ற வலுவான அரசியல் எதிரிகளைக் களத்தில் சந்திக்கும் ஆபத்துகளும் இருக்கின்றன. ஆனால் கலைஞரின் எழுபதாண்டு காலப் பொதுவாழ்க்கையை ஸ்டாலின் கூர்ந்து கவனித்துச் செயல்பட்டால், சிக்கலான சவால்களை வெற்றிகரமாகச் சமாளிக்கலாம்.

- ப்ரியன்

யூத் ஏரியா

''**ஊ**ர் உலகத்துல மாம்பழம் விளையறதில்லையா? அது என்ன உங்க ஊர் மாம்பழத்துக்கு மட்டும் ஸ்பெஷல் மரியாதை?'' என்று கேட்டதுதான் தாமதம். **சேலம் அயோத்தியா பட்டணம் ஸ்ரீ கோட்டை மாரியம்மன் பாலிடெக்னிக் கல்லூரி** இளசுகள் ''மாம்பழமாம் மாம்பழம் மல்கோவா மாம்பழம் சேலத்து மாம்பழம்''னு ஆளாளுக்குப் பாடி ஆட ஆரம்பித்துவிட்டார்கள். அத்தோட போச்சா... ''ஜூஸர் இன்றி, ஸ்ட்ரா இன்றி தோ மினிட் நூடுல்ஸ் மாதிரி இரண்டு நிமிடத்தில் ஆன் த ஸ்பாட்டிலேயே இயற்கையான மாம்பழ ஜூஸ் தயாரிப்பது எங்கள் வித்தியாசமான ரெஸிபி'' என்றார்கள்.

''எப்படி?'' என நாம் ஆர்வமாக, ''மாம்பழ சீஸன்ல கடைசி அயிட்டமாக வர்றது நீலன் மாம்பழம். நல்லா உருண்டு திரண்ட மாம்பழத்தை இரண்டு உள்ளங்கைகளுக்கும் இடையில் வைத்து அழுத்தி அழுத்தி உருட்டிட்டே வந்தால் இரண்டு நிமிடத்தில் பழம் கொள கொளன்னு ஆகி விடும். மாம்பழத்தின் தலைப் பக்கம் சின்ன ஓட்டை போட்டு வாயை வெச்சு உறிஞ்சுனோம்னு வெச்சுக்குங்க... அவ்வளவுதான்... பத்து நிமிஷத்துல ஐந்து மாம்பழம் காலியாயிடும்'' என்று சொல்லி புல்லரிக்க வைத்தார்கள்.

எங்கேடி வாழைப் பழத்தைக் காணோம்? இது மாம்பழ சீசன்டி





நெகிழ்வான விஷயம்?

''**எ**ங்கேயோ சின்னச் சின்ன கிராமங்களில் பார்டர் மார்க் வாங்கி பாஸ் பண்ணின எங்களை அள்ளிக்கொண்டு வந்து அடிப்படை ஆங்கில அறிவை ஏ பி ஸி டியில்

இருந்து ஆரம்பித்து எங்க மண்டையில் புகுத்தி தனிக் கவனம், ஓயாத கவுன்சிலிங். நகரத்துக் கல்லூரிகளுக்கு இணையான வசதி வாய்ப்புகளுடன் தொழிற் கல்வி தந்து வேலை வாய்ப்பையும் தந்து வெளியே அனுப்பும் இந்தக் கல்லூரியின் நிறுவனர்களும், முதல்வரும் நன்றிக்குரியவர்கள். (கேட்கும் போதே மூச்சு முட்டுது... கொஞ்சம் கேப் விடுங்க!)





தோ மினிட் ஜூஸ்!

மறக்க முடியாத நிகழ்வு

''சேலத்தையே மூன்று மாதத்துக்கு ஒரு முறை கண்ணால் பார்த்தால் அதிகம்னு இருக்கிற எங்களை கல்விச் சுற்றுலாவாக, விக்ரம் சாராபாய் விண்வெளி ஆராய்ச்சி நிலையத்துக்கு அழைச்சிட்டுப் போனது டாக்டர் அப்துல் கலாமின் ஒவ்வொரு நினைவுகளையும் பார்த்து கேட்டு மகிழ்ந்து கொண்டது. கோவளம் பீச்சில் எங்களுடன் எங்கள் முதல்வர் மோகன் லார் நடனம் ஆடியது...''

''ஃபீலிங் பிலாஸபி போதும். உங்க காலேஜ் டிக்ஷனரில இருந்து ஒரு சேப்டர் சொல்லுங்க'' என்றோம்.

அபக்கு: எல்லாம் தெரியும். ஆனால் ஒண்ணுமே தெரியாதவர்கள் மாதிரி ஆக்டிங்.

ஆர்.கே: ஆர்வக் கோளாறு அதிகமாகி படிப்பு படிப்புனு பில்ட்அப் கொடுப்பவர்.

டைப்ரைட்டர்: நான்-ஸ்டாப்பாக லொட லொடன்னு பேசும் பார்ட்டி.

பவர்கட்: அடிக்கடி கல்லூரிக்கு கட் அடிப்பது

''போதும்! தெரியாம கேட்டுட்டோம்... ஆளை விடுங்க'' என்றபடி ஓடினோம்.

சந்திப்பு, தொகுப்பு : **ஆர்.பாலா**

கிளி மாதிரி பொண்ணு.

● கவிச்சுடர் இளங்கதிரவன், கோயம்புத்தூர்

எது காலத்தின் கட்டாயம்?

காலம், நமக்கு நாமே போட்டுக் கொண்ட ஒரு கட்டாயக் கோலம்... 'அவன்' வைத்த நமக்கு வாய்த்த புள்ளியில் போட்டால் கோலம். விலகிப் போனால் அலங்கோலம்!

● அ. ஷண்முகசுந்தரம், பெங்களூர்

ஸ்ருதி மாதா, லயம் பிதா என்றால் பாவம் என்ன உறவு?

மனைவி! மனைவி வந்த பிறகு மாதா - பிதாவை மறப்பது அகம்பாவம்.

● ஜி.ஆர்.ராகவன், காகிதபுரம்


நீங்கள் உண்டு என்கிற ஆஸ்திகரா, அல்லது இல்லை என்கிற நாஸ்திகரா?

உண்டு இல்லை என சிரிக்க வைக்கும் ஹாஸ்திகன்!

● மு.மதிவாணன், அரூர்

எது நம்பிக்கை... எது மூட நம்பிக்கை?

அதிர்ஷ்டம் கதவைத் தட்டும் என்று காத்திருப்பது நம்பிக்கை. எங்கே அதிர்ஷ்டம் தட்டிவிட்டுப் போய்விடுமோ என்ற அவநம்பிக்கையில் கதவை மூடாமல் திறந்தே வைப்பது மூடா-நம்பிக்கை. அப்புறம் அதிர்ஷ்டம் திருடனுக்குத்தான்!



● சரண்யா, சென்னை

புது கார், புது மனைவி... ஒப்பிடுக!

புது காருக்கு நாம் ஓனர்; புது மனைவிக்கு டிரைவர்!

● ஆர்.ராஜலட்சுமி, ஹுப்ளி

தாய்க்குப் பின் தாரம்... தந்தைக்குப் பின்...?

அவர் விட்டுச் சென்ற தரம்.

● பி. இராஜேந்திரன், லோயர் அணைக்கட்டு

மாமனார் வீட்டோடு தங்கி இருக்கும் மாப்பிள்ளை... மாப்பிள்ளை வீட்டோடு தங்கி இருக்கும் மாமனார்... இருவரில் யார் கில்லாடி?

தான் மாமனார் ஆகும் வரையில் தன் மாமனார் வீட்டில் தங்கிவிட்டு, மாமனார் மண்டையைப் போட்ட பின் தன் மாப்பிள்ளை வீட்டில் போய் அவன் மாமனார் ஆகும் வரையில் தங்கும், மாமனாரான மாப்பிள்ளை கில்லாடி நம்பர் ஒன்.

● ஆர்.கோபாலன், மேற்கு மாம்பலம்

பெண்ணின் அழகை 'கிளி மாதிரி' என்று சொல்லிப் புகழ்கிறோம்... கிளி மாதிரி மூக்கு உள்ள பெண்ணை எவன் கட்டிப்பான் ஸார்?

சொன்னதையே திருப்பித் திருப்பிச் சொல்லும் சம்சாரம் பேச்சுக்குத் தலையாட்டுற நாம என்ன மாதிரி அழகு!

● பவானி கிருஷ்ணா, பெங்களூர்

'மனைவி பேச்சைக் கேட்டு நடந்தால் வாழ்க்கை மகிழ்ச்சியாக இருக்கும்'



● வி.ஜி.சத்தியநாராயணன்,
நங்கநல்லூர்

என்று நீதிபதி மார்க்கண்டேய கட்ஜு கூறியுள்ளாரே...?

மனைவி என்றும் பதினாறாக இருந்தால் நாம் மார்க்கண்டேயராக மகிழ்ச்சியாக இருக்கலாம்...!

● ரா.பிரசன்னா, மதுரை

மீண்டும் குழந்தையாய் மாறுவதற்கான வாய்ப்புகள் உண்டா ஸார்?

உண்டு. கிழமாகும்வரை உயிரோடு காத்திருங்கள்!

என்னதான் செல்லமாக இருந்தாலும் கணவனை மனைவி 'வாடா','போடா' என்று கூப்பிடுவது சரியா..?

பேரைச் சொல்லிக் கூப்பிட்டால் கணவனுக்கு ஆயுசு கம்மி என்பதால் 'வாடா-போடா' என்று உயிரை வாங்குகிறாள் போலிருக்கிறது.

● எம்.அசோக்ராஜா, திருச்சி

எது இன்ப அதிர்ச்சி?

காதலியிடமிருந்து vibratory modeல் வரும் 'ஐ லவ் யூ' மெஸேஜ்! ○



கல்கி



2009 ஜூன் 14
விரோதி வைகாசி 31
மலர் : 67
இதழ் : 46

தமிழ்த்திரு
நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா - *பாரதியார்*

முதல் துணை முதல்வர் to முதல்தர துணை முதல்வர்


தமிழகத்தின் முதல் துணை முதலமைச்சராகப் பதவியேற்றுள்ள மு.க.ஸ்டாலினுக்கு மகிழ்ச்சியுடன் வாழ்த்து கூறுகிறோம். தமது 86வது வயதிலும் சளைக்காமல் சலிக்காமல் முதல்வர் பதவியை வகித்து வரும் முதல்வர் கருணாநிதிக்கும் வாழ்த்துக்கள். இந்தப் பொறுப்புப் பகிர்வு மூலம் கிடைக்கக்கூடிய ஓரளவு ஓய்வே முதல்வருக்கு மிகச் சிறந்த பிறந்த நாள் பரிசு. அவரே ஒப்புக்கொண்டிருப்பது போல், இந்த நியமனம் காலம் தாழ்ந்தே நிகழ்ந்திருக்கிறது.

அன்பழகனை அமைச்சரவையின் இரண்டாம் நிலைப் பொறுப்பில் அமர்த்தி துணை முதல்வர் ஸ்டாலினை கூடுதல் பொறுப்புகளுடன் மூன்றாம் நிலையில் இருத்தியது முதல்வரின் நேர்மையான சிந்தனை.

தி.மு.க.வில் குடும்ப அரசியல் இருக்கவே செய்கிறது. ஆனால், முதல்வரின் மகனே ஆன போதிலும் அடிமட்டத் தொண்டராக தி.மு.க.வில் நுழைந்து, இளைஞர் அணியை வளர்த்தவர். ஹிந்தி எதிர்ப்புப் போராட்டம், அவசர நிலை எதிர்ப்பு போன்றவற்றில் பங்கேற்றுச் சிறை சென்றவர். மிஸா கைதியாக கொடுஞ்சிறைவாசம் அனுபவித்து, ஜனநாயக மீட்புக்குப் போராடியவர்.

புதிய பதவி என்பதைக் காட்டிலும் புதிய பொறுப்பு என்றே துணை முதல்வர் பதவியைக் கருதுவதாக ஸ்டாலின் கூறியிருப்பது நல்ல அறிகுறி. "நான் எந்த விஷயத்தையும் நன்மை - தீமைகளை எடை போட்டு ஆராய்கிறவன். அதனால் முடிவெடுக்க சற்று காலதாமதமாக லாமே தவிர, முடிவெடுக்கத் தயங்குபவன் அல்ல" என்று அவர் கூறியிருப்பதைப் பாராட்டலாம்.





வேலை வாய்ப்புகளைப் பெருக்கும் தொழில்களுக்கு முன்னுரிமை அளித்து ஊக்குவிக்கப் போவதாக அவர் கூறியிருப்பதும் வரவேற்கத்தக்கதே. விவசாயம் சார்ந்த வேலை வாய்ப்புகளில் கூடுதல் கவனம் செலுத்துவது தமிழகத்தின் விரைவான முன்னேற்றத்துக்கு உதவும்.

தற்போது தமிழக மக்கள் எதிர்கொள்ளும் இரு மிகப் பெரிய துன்பங்கள் விலைவாசி உயர்வும் லஞ்ச-ஊழலும்தான். இவை இரண்டுமே அவர்களது அன்றாட வாழ்வைப் பெரிதும் பாதிக்கின்றன. விலைவாசியைக் கட்டுப்படுத்தவும் லஞ்ச-ஊழலை ஒழிக்கவும் ஸ்டாலின் மனது வைத்தால் முடியும். பொருளாதார சீர்திருத்தங்கள், தொழில் மேம்பாடு, வேலை வாய்ப்பு போன்றவை குறித்து தக்க ஆலோசனைகள் தந்து, அரசை வழிநடத்த வல்லுனர்கள் இருக்கிறார்கள். மாநிலத்தின் முன்னேற்றத்தை மட்டுமே இலக்காகக் கொண்டு இவர்களது அறிவுரைகளைக் கேட்டுப் பெற்று, துணை முதல்வர் செயல்படலாம்.

பொருளாதார முன்னேற்றத்துக்கு லஞ்ச-ஊழலும் தாமதமும் அற்ற தொழில் சூழல் தேவை. லஞ்ச-ஊழல் நடைமுறைகளை ஒழித்துக்கட்ட ஸ்டாலின் முயற்சி மேற்கொண்டால், அதற்குச் சில வட்டாரங்களில் எதிர்ப்பு தோன்றக்கூடும். ஆனால், அதைப் பொருட்படுத்தாமல் அவர் துணிந்து இரும்புக்கரத்துடன் செயல்பட்டால் மக்களின் மதிப்பில் நிச்சயம் உயர்வார். மக்கள் ஆதரவு பெற்ற தலைவருக்கு எதிர்ப்பு தானே குறைந்து, அடங்கிவிடும். தி.மு.க.வின் கட்டுக்கோப்பைக் காப்பாற்றவும் இதுதான் வழி. இலவசங்கள், மானியங்கள் என்று வோட்டுப் பிடிக்கும் குறுக்கு வழிகள் மூலம் அரசுக்குள் கட்சி அரசியல் நுழைவதைத் தவிர்க்கவும் ஸ்டாலின் முயற்சி செய்ய வேண்டும். நல்ல ஊதியம் அளிப்பதன் மூலம் திறமையான அதிகாரிகளையும் தொழில்நுட்ப வல்லுனர்களையும் பெற்றுவிட முடியும். ஆனால், நேர்மையாளர்களைப் பணம் கொடுத்துப் பெற முடியாது. நமது நல்லுதாரணத்தினால் மட்டுமே அவர்களை உருவாக்க முடியும்.

துணை முதல்வர் அத்தகைய நல்லுதாரணமாக விளங்கட்டும். முதல் துணை முதல்வர் என்கிற நிலையிலிருந்து முதல்தர துணை முதல்வர் என்ற நிலைக்கு அவர் உயர்ந்தால், அவருடைய தந்தைக்கு மட்டுமல்ல, தமிழகத்துக்கே பெருமைதான். ○

தோரணை

சின்ன வயதில் வீட்டை விட்டு ஓடிப்போன அண்ணனைத் தேடி தம்பி சென்னைக்கு வந்து பிரச்னைகளுக்குள் சிக்கி, அண்ணனை மீண்டும் சொந்த ஊருக்கு அழைத்துச் செல்வதே 'தோரணை'யின் நாலு வரிக்கதை.

பிரகாஷ்ராஜும், கிஷோரும் நகரத்தின் எதிரெதிர் தாதாக்கள். விஷால் சென்னையில் வந்து இறங்கியவுடனே ஒரு கொலையை கிஷோர் செய்வதைப் பார்த்து போலீஸிடம் கொலையாளியை அடையாளம் காட்டுவதாகச் சொல்கிறார். அங்கிருந்து முளைக்கிறது பிரச்னை. இடையில் டிராஃபிக் சிக்னலில் பார்க்கும் ஸ்ரேயாவைத் துரத்தித் துரத்திக் காதலிக்கிறார், பஞ்ச் டயலாக் பேசுகிறார்... இறுதியில் அண்ணன் வேறு யாருமில்லை; கிஷோரேதான் என்கிறார்கள். இந்த விஷயத்தைப் படம் பார்க்கும் நாம் முதல் இரண்டொரு காட்சிகளிலேயே ஊகித்து விடுகிறோம்.



படத்தின் முன்பாதியில் சந்தானம், ஆர்த்தி கூட்டணி அடிக்கும் காமெடிகளே படத்தின் மிகப் பெரிய சரவெடி. 'நம்ம வீட்டு ரேஷன் கார்டுல இவன் எதுக்கு என்ட்ரியாகிறான்...', 'கழுதைன்னா உதைக்கறதும்...' என கதாபாத்திரங்கள் பேசும் வசனங்கள் நச். இயக்குநருக்கு வசனகர்த்தாவாக நிறையவே தகுதியிருக்கிறது.

'வா செல்லம்... வா வா செல்லம்' பாடல் மட்டும் உதித் நாராயணன் குரலில், கேட்கத் தூண்டுகிறது. ப்ரியனின் ஒளிப்பதிவு கண்களுக்கு ஒளி விருந்து.

அண்ணனுக்கும் தம்பிக்குமான உறவில் அழுத்தமான காட்சிகளே இல்லை. கதாநாயகனும், நாயகியும் சந்தித்துக் கொண்டாலே பாட்டு போட்டு நம்மைப் பதற வைப்பதால் படத்தின் வேகம் ஸ்லோமோஷனில் பின்னுக்கு நகர்கிறது.

கதைக்கு முக்கியத்துவம் கொடுத்து இயக்குநர் காட்சிகளை நகர்த்தியிருந்தால் 'தோரணை' ஒளிவீசியிருக்கும்.

– கிராபியென் ப்ளாக்



70 முதல் 7 வரை - II

9

அமுதசுரபி சமீப இதழில், தமது தகப்பனார் ''சுந்தா'' (எம்.ஆர்.எம். சுந்தரம்) அவர்களைப் பற்றி ரமாமணி சுந்தர் எழுதியிருக்கிறார். ரொம்ப சுவாரஸ்ய மான கட்டுரை. 'சுந்தா'வை நான் முதன் முதலில் சந்தித்தது ரசிகமணி டி.கே.சி. அவர்கள் இல்லத் தில். செண்பகாதேவி அருவியில் குளிப்பதற்காக மலை ஏறிப் போகும்போது, வழியில் ஜடாமுடி, சடை விழுந்த மீசை தாடியுடன் ஒரு ரிஷி தென் பட்டார். ''சிறுவர்காள்! இந்தக் கானக வழியில் எங்கு செல்வதாக உத்தேசமோ?'' என்று நாடக டயலாக் பேசினார். நான் திகைத்து நிற்க, என்னுடனிருந்த டி.கே.சி. அவர்களின் பேரன் தீப. நடராஜன், ''என்னவே! வேஷம் போட்டா ஆளைத் தெரியாதுன்னு நினைச்சீகளோ?'' என்று கூறிச் சிரித்தார். ஆலம் விழுதுகளாலான ஜடா முடியைக் கழற்றிப் போட்டார் ''சுந்தா'', வியப் பையும் சுலபத்தில் ஏமாந்து போனதால் ஏற்பட்ட வெட்கத்தையும் ஒளித்துக் கொண்டு நானும் சிரித்து வைத்தேன்.

பின்னாட்களில், ''கல்கி'' அவர்களின் வாழ்க்கை வரலாற்றை எழுதுமாறு நான் ''சுந்தா''வைக் கேட்டுக் கொண்டபோது அவர் அதைத் தமக்கு அளிக்கப்பட்ட மிகப் பெரிய கௌரவமாகக் கருதினார். மேம் போக்காக எழுத முற்படாமல் தீவிர ஆராய்ச்சியில் இறங்கினார். டாக்டர் பட்டத் துக்கு ஆய்வுக் கட்டுரை தயாரிப்பவர்கள் கூட அத்தனை சிரமப்படமாட்டார்கள். ''கல்கி'' எழு திய கதைகள் - கட்டுரைகள், ''கல்கி'' அவர் களைப் பற்றி எழுதப்பட்ட கட்டுரைகள்; நாளிதழ் செய்திகள் என்று தேடித் தேடிக் கண்டு பிடித்துப் படித்தார். ''கல்கி''யுடன் பழகியிருந்த எல்லோரையும் சந்தித்து பேட்டி எடுத்தார். பல ஊர்களுக்குப் போய் வந்தார். இவை தவிர, உலக மேதைகள் பற்றி ஆங்கிலத்தில் எழுதப்பட் டுள்ள ஒன்பது வாழ்க்கை வரலாற்று நூல்களை ஒன்றன் பின் ஒன்றாக விலை கொடுத்து வாங்கி வந்து படித்தார்! அப்புறம் ஒருநாள் என்னிடம்,



★ மதுரையை மீட்ட சுந்தரபாண்டியன் படத்தில்...

எழுத்து தெய்வம்; எழுதுகோல் தெய்வம்!

கல்கி ராஜேந்திரன்

''எப்படி எழுதுவது என்று தீர்மானித்து விட்டேன்; பெரும்பாலும் அப்பாவுடைய எழுத்துக்களைக் கொண்டே அவருடைய வாழ்க்கை வரலாற்றை உருவாக்கப் போகிறேன்'' என்றார். ''பொன்னியின் புதல்வர்'' கல்கி அவர்களின் வாழ்க்கை வரலாறாக மட்டுமின்றி, அவர் வாழ்ந்த காலத்திய தமிழகத்தின் சரித்திரத்தையும் தமிழின் வளர்ச்சியையும் சித்திரிப்பதாகத் திகழ்கிறது.

சுந்தாவிடம் ஓர் அபூர்வமான பழக்கம் இருந்தது. அகில இந்திய ரேடியோவில் முதல் தேதி சம்பளம் வாங்கியதும் அதை வீட்டுக்குக் கொண்டு வந்து, ஒரு பெட்டியில் வைத்து விடுவார். பெட்டி பூட்டப்படுவதே கிடையாது! குடும்பத்தில் யாருக்குப் பணத் தேவை ஏற்பட்டாலும் பெட்டியைத் திறந்து தேவையான பணத்தை எடுத்துச் செல்வார்கள். செலவு போக மிச்சமிருந்தால் மறுபடி அந்தப் பெட்டியிலேயே போட்டு விடுவார்கள்! கணக்கு வழக்கு என்பதே கிடையாது! இந்த நடைமுறையில் குடும்பத்தில் யாருமே அத்தியாவசியத் தேவைக்கு அதிகமாகச் செலவழிக்க மாட்டார்கள் என்று ''சுந்தா'' நம்பினார். அப்படியே நடந்தது. சேமிப்பு என்று அவர் நினைத்துப் பார்த்ததேயில்லை!

பணத்தாசை இல்லாதவராயினும் சுந்தாவுடைய தேவைக்கு அகில இந்திய ரேடியோவில் சம்பளம் கிடைத்தது; பணி ஓய்வுபெற்ற பிறகு பென்ஷனும் கிடைத்தது. இதற்கு நேர்மாறாக ''அகிலன்'', எழுத்தை மட்டுமே நம்பி வாழ முடியும் என்று நிரூபிக்கும் துணிவுடன் தாம் பார்த்து வந்த RMS (Railway Mail Sorting) உத்யோகத்தை உதறிவிட்டு வந்தார். கல்கியின் ஆரம்ப கால இதழ்களிலேயே அகிலனின் சிறுகதைகள் இடம்பெற்றன. கலைமகளில் அவருடைய தொடர்கதைகள் வெளிவந்தன. அவரை கல்கியில் தொடர்கதை எழுதச் சொல்லி வற்புறுத்தி அழைத்து வந்து சதாசிவத்தினிடம் அறிமுகம் செய்து வைத்தார் பகீரதன்.


அச்சமயம், ஆனந்த விகடன் நாவல் போட்டிக்காக ஒரு கதை எழுதிக் கொண்டிருந்தார் அகிலன். அந்நாளைய நிலவரப்படி முதல் பரிசு ரூ. 25,000/- என்பது எல்லோரையும் பிரமிப்பில் ஆழ்த்திய மிகப் பெரிய தொகை. அந்த நாவலை கல்கிக்குத்


* அகிலன்

தருமாறு கேட்டார் பகீரதன். ''பரிசுத் தொகை ரொம்பப் பெரிசாச்சே! உங்களால் அவ்வளவு தர முடியுமா?'' என்று கேட்டுத் தமது தயக்கத்தை வெளியிட்டார் அகிலன். ''முதல் பரிசு உங்களுக்குத்தான் கிடைக்கும் என்று என்ன உத்தரவாதம்?'' என்று அவரை மடக்கினார் பகீரதன். ''கல்கியில் உங்க கதை தொடராகப் பிரசுரமாகும் போது உங்களுக்குக் கிடைக்கும் பேரையும் புகழையும் நினைச்சுப் பாருங்க; எங்கியோ

எட்டாத உயரத்துக்குப் போயிடுவீங்க'' என்று ஆசை காட்டினார். அகிலன் சம்மதித்தார்.

பகீரதனின் கணிப்பு உண்மையாயிற்று. 'பாவை விளக்கு' பெரும் பரபரப்பையும் ஆர்வத்தையும் உருவாக்கி வாசகர்களிடம் அமோக வரவேற்பு பெற்றது. சதாசிவம் அதற்குச் செய்த விளம்பரமும் வாரா வாரம் கதைப் பகுதியை உயர்ந்த வழுவழுப்பான காகிதத்தில் அச்சிட்டு கல்கியில் இணைத்ததும் தொடர்கதை, வாசகர்களின் கவனத்தைக் கவர பெரிதும் உதவின. பின்னாட்களில் 'பாவை விளக்கு' திரைப்படமான போது, சிவாஜி கணேசனின் உன்னத நடிப்புக்காக சில காலம் ஓடியதே தவிர, பெரிய அளவில் வெற்றி பெறவில்லை. பின்னர் எம்.ஜி.ஆர். நடித்து வெளியான 'கயல் விழி'யும் கூட



பகீரதன்


"கல்கியில் உங்க கதை தொடராகப் பிரசுரமாகும்போது நினைச்சுப்

சுமாரான வரவேற்பைத்தான் பெற்றது (மதுரையை மீட்ட சுந்தரபாண்டியன்). திரைப்படங்களுக்குக் கதை-வசனம் எழுதி சம்பாதிக்கலாம் என்ற அகிலனின் எதிர்பார்ப்பு அடிவாங்கியது. ஆயினும், ''எழுத்து தெய்வம்; எழுதுகோல் தெய்வம்'' என்றும் அது தன்னைக் காக்கும் என்றும் தீர்மானமாக நம்பினார் அகிலன். வேங்கையின் மைந்தன்; கயல்விழி; வெற்றித் திருமகன் போன்ற சரித்திர நாவல்களைக் கல்கியில் எழுதி மிகப் பிரபலமடைந்தார்.

சரித்திர நாவல்கள் பக்கம் அவர் கவனத்தைத் திருப்பிய பெருமை எனக்குண்டு. ''கல்கி'' அவர்களைப் போலவே நீங்களும் கதையில் வரும் நிலைக்களன்களையெல்லாம் நேரில் சென்று பார்க்க வேண்டும்'' என்று அகிலனிடம் கூறி, அதற்கு சதாசிவத்தினிடம் சம்மதமும் பெற்றேன். சுற்றுப் பயணத்துக்கு காரும் செலவுக்குப் பணமும் கல்கி காரியாலயம் கொடுத்து உதவியது. அகிலனுடன் நானும் ஓவியர் வினுவும் சென்றோம். குடுமியாமலை, விராலிமலை, சித்தன்னவாசல், கொடும்பாளூர், பழையாறை, தஞ்சை, கங்கை கொண்ட சோழபுரம், ஹம்பி என்று பல இடங்களுக்கு பல முறை பயணம் செய்தோம். ஒரே கல்லில் இரண்டு மாங்காய் என்பது போல ஓவியர் வினு இந்தப் பயணங்களில் தீட்டிய வண்ண ஓவியங்களை கல்கி தீபாவளி மலரில் பயன்படுத்திக் கொண்டேன்.

இந்தப் பயணங்களின் போது அகிலன் அவ்வப்போது தமது கற்பனைக் குதிரையைத் தட்டிவிட்டுக் கதை சொல்வார். பல சந்தர்ப்பங்களில், ''அடடா, இந்த 'ஐடியா'வை 'கல்கி' சிவகாமியின் சபதத்தில் (அல்லது பொன்னியின் செல்வனில்) பயன்படுத்தியிருக்கிறாரே'' என்று நான் நினைவூட்டுவேன். ''ஸார்! என்ன அநியாயம் ஸார்! பின்னால் வர்றவங்களுக்குன்னு உங்க அப்பா எதையுமே விட்டு வைக்கலை, பார்த்தீங்களா!'' என்று அகிலன் நொந்து கொள்வார். ஆயினும் மனம் தளராமல் புதிய கோணங்களில் சிந்தித்து தமக்கே உரிய தனிப்பாணியில் கதையை வளர்த்துச் செல்வார்.

எழுத்தாளர்களை, ஓவியர்களை அடிக்கடி அவர்கள் வீட்டுக்கே போய் ஊக்குவிக்க வேண்டும் என்பது உதவி ஆசிரியர்களான எங்களுக்கு சதாசிவத்தின் வழிகாட்டல். எனவே, அகிலன் வீட்டுக்கு நான் வாரம் ஒருமுறையாவது நேரில் சென்று, அடுத்த இதழ் அத்தியாயத்தைப் பெற்று வருவேன். கூடவே அடுத்த வாரக் கதைப் பகுதி பற்றிப் பேசிவிட்டும் வருவேன். பல சமயம் நான் போகும் போது அவர் எழுதிக் கொண்டிருப்பார். எழுதியவரையில் படிக்கக் கொடுத்துவிட்டு, கடைசி ஒரிரு பக்கங்களை எழுதுவார். அகிலன் எழுதும் விதம் சற்று வேடிக்கையாக இருக்கும். பரீட்சை எழுதும் மாணவர்கள் பயன்படுத்தும் கிளிப் வைத்த மரப்பலகையில் தாளைச் செருகி எழுதுவார். ன, ண போன்ற எழுத்துக்களை சுழிக்காமல் கோடு



* சுந்தா

இழுத்து விட்டு, பிறகு சுழிகளைத் தனியே அவற்றில் சேர்ப்பார்! அப்படி ஒவ்வொரு சுழியாகச் சேர்க்கையில் அடுத்த வாக்கியத்தை நன்றாக யோசித்து எழுதுவார். அதனால் அடித்தல் திருத்தல் அதிகம் இராது. உரையாடல்களை எழுதும் போது, ''நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?'' என்ற கேள்வி அடிக்கடி இடம்பெறும்! கதாபாத்திரங்கள் இந்தக் கேள்வியை ஒருவரிடம் ஒருவர் எழுப்பி, அடுத்து வரும் வரிகளில் சந்தேக விளக்கம் பெறுவார்கள். அகிலனுடன் பேசிக் கொண்டிருக்கும்போது நான் வேண்டுமென்றே, ''நீங்கள் என்ன சொல்கிறீர்கள், அகிலன் ஸார்?'' என்று கேட்டு அவரைச் சிரிக்க வைத்ததுண்டு.

பி.வி.அகிலாண்டம் என்ற இயற்பெயர் கொண்ட அகிலன், கட்டை-குட்டையாக இருப்பார். ஆனால் முகம் ஒளி பொருந்தியதாக லட்சணமாக இருக்கும். குரலை உயர்த்திப் பேசவே மாட்டார். அடக்கத்தின் திரு உரு. நெஞ்சுறுதி மிக்கவர்.

அகிலன், யாரிடமும் கை கட்டி நில்லாமல், சுதந்திரமாக எழுத்தை மட்டுமே நம்பி பல காலம் வாழ்ந்தார். இதனால் ஏற்பட்ட பணப் பற்றாக்குறையையும் இதர சிரமங்களையும் வெளிக்காட்டாமலே இருந்து வந்தார். அவருடைய ஆசான் கி.வா. ஜகந்நாதன் நிலைமையை உணர்ந்து, பலத்த சிபாரிசு செய்து அவருக்கு அகில இந்திய ரேடியோவில் உத்தியோகம் வாங்கித் தந்தார்.

கல்கியில் அகிலன் எழுதிய 'வேங்கையின் மைந்தன்' சாகித்திய அகாதமி பரிசு பெற்றது. இருப்பினும் பல ஆண்டுகளுக்குப் பிறகு அவர் ஆனந்தவிகடனில் எழுதிய 'சித்திரப்பாவை'க்குத்தான் ஞான பீடப் பரிசு கிடைத்தது. ஒருவேளை விகடனில் இடம்பெற்றிருக்க வேண்டிய 'பாவை விளக்கை' கல்கி பத்திரிகை தட்டிப் பறித்ததால், ஞானபீடப் பரிசை விகடனில் இடம் பெற்ற 'சித்திரப்பாவை' தட்டிச் சென்றதோ!

உங்களுக்குக் கிடைக்கும் பேரையும் புகழையும் பாருங்க; எங்கியோ எட்டாத உயரத்துக்குப் போயிடுவீங்க"

(அடுத்த வாரம்: புனரபி ஜனனம்... புனரபி மரணம்)



பூஜை... ஷூட்டிங்... கல்யாணம்!

ஒரே நாளில் தமது முதல் படத்தின் படப்பிடிப்பையும், திருமணத்தையும் நடத்தி கோடம்பாக்கத்தைத் திரும்பிப் பார்க்க வைத்திருக்கிறார் அறிமுக இயக்குநர் சின்னப்பா கணேசன்...

பத்திரிகைத் துறையிலிருந்து சினிமாவுக்கு வர என்ன காரணம்?

''தொடர்ந்து பத்தாண்டுகளுக்கும் மேலாக பத்திரிகை மற்றும் தொலைக் காட்சிகளில் பணியாற்றியிருந்தாலும் ஏதோ ஒரு வெறுமை, மனத்தைக் குடைந்து கொண்டே இருந்தது. விரும்பியதை, எழுத நினைத்ததை, சொல்ல வந்ததை இப்படி எதையுமே மீடியாவில் சொல்ல சுதந்திரம் மறுக்கப்பட்டிருந்தது. ஒரு குறுகிய வட்டத் திலே சுழன்று கொண்டிருந்தேன். நீண்ட யோசனைக்குப் பிறகு என்னுடைய கிரியேட்டிவிட்டிக்கு சினிமாதான் சரி என்று முடிவெடுத்தேன். மறுநாளே என்னுடைய வேலையை உதறி விட்டு வெளியே வந்தேன், அப்போது எனக்கு வயது முப்பத்தெட்டு!''

உதவி இயக்குநர் வாழ்க்கை எப்படியிருந்தது?

''சினிமாவுக்குள் நுழைவதற்கு முன் பொருளாதாரம் பற்றிய திட்டமிடல் என்னிடமிருந்தது. என்னுடைய திட்டம் மூன்றாண்டுக்குள் உதவி இயக்குநர் ஆகிவிட வேண்டுமென்பது. என்னுடைய மாமா பிரபலத் தொலைக்காட்சியில் வேலை பார்த்து வந்தார். அவர் வீட்டில் தான் தங்கி, முயற்சியில் இருந்தேன். மூன்றாண்டுகளுக்கும் மேலாக அவருடைய குடும்பம்தான் என்னைக் கரிசனத்தோடு பார்த்துக்கொண்டது. பிறகு இயக்குநர் ஏ.வி.முகனிடம் உதவி இயக்குநரானேன், என்னுடைய முதல் படம் 'தீண்டத் தீண்ட'. எந்தப் படத்திலும் டைட்டில் கார்டில் பெயர் வந்ததேயில்லை.''

தயாரிப்பாளரான அனுபவம்?

''நண்பர்களின் கதை விவாதங்களின் போதும், படப்பிடிப்பு இடையேயும் நான் கற்றுக் கொண்டது சினிமாவில் எதைத் தவிர்க்கணும், எதைச் செய்யக்கூடாது என்பதைத்தான்! சினிமாவில் கே.எஸ். ரவிக்குமாரையும், ஹரியையும் எனக்குப் பிடிக்கும். காரணம் அவர்களுடைய திட்டமிடலும், குறிப்பிட்ட நாட்களுக்குள் படப்பிடிப்பை முடித்து தயாரிப்பாளர்களின் இயக்குநர்களாக அவர்கள் இருப்பதும் தான். அவர்களிடமிருந்து தயாரிப்புப் பணியை அறிந்து கொண்டேன். என்னுடைய ரோல் மாடல் மகேந்திரன் சார்தான். அவரைப் போல படம் செய்ய வேண்டும் என்பதுதான் என் கனவு. இது தொடக்கம். என்னுடைய நெருக்கமான நண்பர்களின் உதவியோடுதான் 'கணபதி கலைக் கூடத்தை'த் தொடங்கியிருக்கிறேன்.''



'அண்மைக்காலமாய்..' எந்த வகை சினிமா?

'' 'லிவிங் டு கெதர் ரிலேஷன்ஷிப்'பை மையமாகக் கொண்டு படத்தை எடுத்திருக்கிறேன். பெங்களூரில் நடந்த ஒரு உண்மைச் சம்பவத்தை மைய மாகக் கொண்டு படம் துவங்குகிறது. திருமணத்துக்கு முன்னரே சேர்ந்து தம்பதிகளாக வாழும் ஜோடிகளிடையே ஏற்படும் பிரச்னைகளும், இவர்களால் சமூகத்தில் ஏற்படும் கலாசாரச் சீரழிவுகளையும், வலியுடன் சொல்லியிருக்கிறேன். பழம்பெரும் இசையமைப்பாளரான டி.ஆர். பாப்பாவின் பேரன் ராம்கிஷோர், முதன் முறையாக நெகடிவ் ரோலில் அறிமுகமாகிறார்.''

படப்பிடிப்பு அன்றே திருமணம் எப்படி?

''என்னுடைய நண்பர் தமிழ்தாசன் நிறைய வரன்களைப் பற்றி என்னிடம் சொல்லிக் கொண்டேயிருப்பார். அப்படித்தான் அவர் இலங்கைவாழ் அகதிகள் பற்றி சில புகைப்படங்களை என்னிடம் காட்டினார். அதில் மைதிலியை எனக்குப் பிடித்திருந்தது. திரும்பித் தாயகம் செல்ல அவருக்கு விசாவும் பாஸ்போர்ட்டும் கிடைத்திருந்த சமயத்தில்தான், அவரைக் கண்டுபிடித்து கைப்பிடித்தேன், இப்போது அவரது தாயக வீடு தமிழகம்தான்!''

இயக்குநர் பேசிக்கொண்டே இருக்க, அவரது துணைவியாரின் முகத்தில் வெட்கப் புன்னகை. இவருடைய அம்மாவின் உடம்பில் யுத்தத்தில் பாய்ந்த குண்டின் சில பகுதிகள் உடம்போடே வாழ்ந்து கொண்டிருக்கின்றனவாம், அழியாத நினைவின் வடுவாக. இந்தப் புதுமணத் தம்பதிகளை வாழ்த்திவிட்டு வெளியே வந்தோம். அமைதியான அந்தத் தெருவில் குழந்தைகள் உற்சாகத்துடன் விளையாடிக் கொண்டிருந்தனர்...

- கிராபியென் ப்ளாக்



முதல் தம்பி ரகுவும், இரண்டாவது தம்பி ரவியும், கடைசித் தங்கை மீனாவும், தத்தம் குடும்பங்களோடு ராகவன் வீட்டுக்கு சனிக்கிழமை காலை பத்து மணிக்குள்ளாக நாக்பூரிலிருந்தும், லக்னோவிலிருந்தும், ஆக்ராவிலிருந்தும் முறையே வந்து சேர்ந்துவிட்டார்கள்.

ஞாயிற்றுக்கிழமை தந்தை சிவராமனின் முதல் வருடத் திதி.

டில்லியிலுள்ள மூத்தவன் ராகவனின் வீடு பெரியதாக இருந்ததால், எல்லா ஏற்பாடுகளையும் அவனே செய்து வைத்திருந்தான்.

ரகு கேட்டான்: ''அண்ணா, அரேன்ஜ்மென்டெல்லாம் எப்படி?''

ராகவன் கூறினான்: ''இங்கே நம்ம சடங்கெல்லாம் செய்துதர ஒரு சங்கம் இருக்கு. எல்லாத்தையும் அவங்களே ஏற்பாடு செய்திடுவாங்க - சமையல் உட்பட. நாம பணத்தை மட்டும் கொடுத்திட்டு,

கே.பி.பத்மநாபன்

வேட்டி கட்டி உட்கார்ந்துட்டா மட்டும் போதும்.''

''அட, இது நல்ல ஏற்பாடா இருக்குதே. கவலையே இல்ல'' - லக்னோ ரவி ஆச்சரியப்பட்டான்.

''டில்லி மாதிரி நகரங்களிலே இது ஒரு சவுகரியம். மத்தபடி யாருக்கு இந்தக் காலத்துல இதுக்கெல்லாம் ஓடியாடி அலைய முடியும்?'' மீனாவின் அங்கலாய்ப்பு.

''அதிர்ஷ்டவசமா அப்பாவோட முதல் திதி ஞாயிற்றுக்கிழமையா அமைஞ்சுடுத்து. இல்லேன்னா, லீவு போடற கஷ்டமெல்லாம் வேற சேர்ந்திருக்கும்'' ரகுவின் குரலில் சந்தோஷம்.

''ஆமாம். என்னோட கடையைக் கூட அதுக்காக ஒருநாள் மூடவேண்டி வந்திருக்கும்'' - மீனாவின் கணவன் வாய்திறந்தான்.

''அந்த மட்டுமாவது அப்பா புண்ணியம் பண்ணினார்'' என்று ஒத்து ஊதினாள் மீனா.

தங்களையெல்லாம் இந்த அளவுக்கு வளர்த்துவிட, அப்பா எவ்வளவு கஷ்டப்பட்டிருப்பார் என்பதை உணராமல் அவர்கள் அவரது திதி ஞாயிற்றுக்கிழமையில் வாய்த்ததற்கு, அவரது புண்ணியத்தை எடைபோட்டார்கள்.



மறுநாள்.

ராகவன், தம்பிகள் எல்லோருக்கும் ஒரே மாதிரியான வேட்டியும், பெண்களுக்கு ஒரே மாதிரியான புடைவையும் எடுத்து வைத்திருந்ததை எல்லோருக்கும் கொடுத்தான். எல்லோரும் குளித்து முடித்து அலங்கரித்து ஹாலில் வந்தமர்ந்தனர்.

முதல் நாள் இரவிலேயே சங்கத்துக் குழுவினர் எல்லா ஏற்பாடுகளையும்

காகம்



செய்து தயாராக இருந்தனர்.

சாஸ்திரிகள் ஹோமம் வளர்க்க, சமையலை இரண்டு பேர் கவனிக்க, சடங்குகள் நடந்துகொண்டிருந்தன.

சடங்குகள் அதுபாட்டுக்கு நடந்து கொண்டிருக்க, ஆண்கள் ஆபீஸ் கவலைகளையும், பெண்கள் புடைவை நகை கவலைகளையும் 'குசுகுசு'வென்று அலசிக் கொண்டிருந்தனர். சாஸ்திரிகள் கூப்பிடும்போது மட்டும் கூட ஒத்துப் பாடினர்.

சடங்குகளெல்லாம் முடிந்தபின்னர் மேல் மாடியில் காகத்துக்குச் சோறு வைத்துக் காத்திருந்தனர். ஒரு காக்கையைக் கூடக் காணவில்லை.

''டில்லியிலே எல்லாம் அரசியல் காக்காய்தான் அதிகம்'' என்ற ரகுவின் கமெண்ட்டுக்கு எல்லோரும் சிரித்தனர்.

''சங்கத்திலே காக்காய்களுக்கு ஏதும் ஏற்பாடு செய்யலியோ?'' என்று ரவி கிண்டலடித்தான்.

'கா, கா' என்று கூப்பிட நாணமுற்ற அவர்கள், தங்கள் குழந்தைகளைச் சத்தம் போடச் செய்தனர். உற்சாகமாகக் குழந்தைகளும் 'கா,கா' என்று கத்தியதுதான் மிச்சம்.

வெகுநேரம் ஆகியும் காகம் வராததால், சாஸ்திரிகளின் அறிவுரைப்படியும், பசியின் வேகத்திலும் எல்லோரும் கீழே வந்து, சங்க சமையல்காரர்கள் செய்திருந்த திவ்யமான சாப்பாட்டை ஒரு கை பார்த்தனர்.

சங்கத்தினருடன் வந்திருந்த பிராமணர்களுக்கும், மற்றவர்களுக்கும் அன்னதானம், வஸ்திரதானம் எனச் செய்து, சடங்குகள் திருப்தியாக இருந்தன என்றும் சொல்லி, பணத்தைக் கொடுத்தனுப்பிவிட்டு, அசதியில் ஒரு தூக்கம் போட ஆரம்பித்தார்கள் - அப்பாவின் நினைவேயின்றி.

அதே நாள்.

சென்னைக்கடுத்த 'கருணை இல்லத்தில்' கூடியிருந்த ஐம்பத்து நான்கு முதியவர்களிடையே இல்லத்தின் தலைவர் கூறிக் கொண்டிருந்தார்:

''கிட்டத்தட்ட ஐந்தாண்டுகளுக்கும் மேலாக நம் இல்லத்தில் சிறந்த நண்பராக, அன்பு மிகுந்தவராக வாழ்ந்திருந்த ஆத்ம நண்பர் திரு. சிவராமன் மறைந்து இன்று ஓராண்டு ஆகிறது. இன்று அவரது நினைவு நாளானதால், நாம் அனைவரும் ஐந்து நிமிட மவுன அஞ்சலி செலுத்தி, ஒரு வேளை மட்டும் உணவு உண்டு, அவரது ஆன்மா சாந்தியடையப் பிரார்த்தனை செய்வோம்.''

அனைத்து வயோதிகர்களும் அமைதியாக சிவராமனை நினைத்து மவுன அஞ்சலி செய்ய, அங்கே சில காகங்களும் மவுனமாக வந்தமர்ந்திருந்தன. ●

"இந்த ஆண்டுக்குரிய (2008) ஜோனாதன் மான் விருது பெறுபவர் இந்தியாவைச் சேர்ந்த டாக்டர் பினாயக் சென்'' என்று அறிவிக்கப்பட்டவுடன், பன்னாட்டுப் பிரமுகர்கள் பலமாகக் கை தட்டி மகிழ்ச்சியை வெளிப்படுத்துகிறார்கள். ஆனால், அந்தக் கைதட்டல் ஒலி பினாயக் சென்னின் காதுகளை எட்டவில்லை. அந்தச் சமயத்தில் டாக்டர் சென் இந்தியாவில், சத்திஸ்கர் மாநிலத்தில் ராய்ப்பூர் மத்திய சிறையில் அடைக்கப்பட்டிருந்தார்.

லாரது அத்துமீறல்களும் அடிக்கடி நடைபெறும். மாவோயிஸ்ட்களை ஒடுக்க, அரசாங்கமே, ஆயுதம் தாங்கிய மக்கள் படையை உருவாக்கியது. தீவிரவாதத்தை ஒடுக்க, இப்படி ஒரு ஆயுதப் படையைப் பயன்படுத்தும் உத்தியையும், ஆதிவாசிகள் மீது நடத்தப்பட்ட போலீஸ் அத்துமீறல்களையும் மக்கள் சிவில் உரிமைக் கழகத்தின் துணைத் தலைவர் என்ற முறையில் கடுமையாக எதிர்த்தார் பினாயக் சென். 2007 மே மாதம் அப்பாவி ஆதிவாசிகளை

"நான் வன்முறைக்கு எதிரானவன்!"



யார் இந்த டாக்டர் பினாயக் சென்?

மே.வங்காளத்தைச் சேர்ந்த பினாயக் சென் வேலூர் சி.எம்.சி மருத்துவக் கல்லூரியில் படித்தவர். மிகச் சிறப்பான மருத்துவ சேவைக்காக சி.எம்.சி மருத்துவக் கல்லூரியின் முன்னாள் மாணவர்களுக்கு வழங்கப்படும் 'பால் ஹாரிசன்' விருதினைப் பெற்றவர். மத்தியப் பிரதேசத்தின் கிராமப்புற ஏழை மக்கள், சுரங்கத் தொழிலாளர்கள் ஆகியோருக்கு மருத்துவ சேவை அளிப்பதில் பெரும் கவனம் செலுத்தினார். ஆதிவாசி மக்களுக்கு அவர் அளித்த மருத்துவ சேவை, பல தரப்பினரது கவனத்தை ஈர்த்து, பாராட்டினைப் பெற்றது.

சரி! சிக்கல் எங்கே ஆரம்பித்தது?

சத்திஸ்கர் மாநில அரசுக்குப் பெரும் தலைவலி மாவோயிஸ்ட் பிரச்னை. மாவோயிஸ்ட்கள் தாக்குதல் நடத்துவதும், அவர்களை ஒடுக்க போலீஸ் நடவடிக்கை எடுப்பதும் அங்கே வாடிக்கை. சந்தேகத்தின் பேரில் ஆதிவாசி மக்களைப் பிடித்து அடித்து விசாரிப்பதும், அப்போது போலீ

போலீஸ் ஈவு இரக்கமில்லாமல் கொன்றதையும் அவர் கண்டித்தார்.

அது மட்டுமில்லாமல், மருத்துவச் சிகிச்சை அளிப்பதாகக் கூறி, ராய்ப்பூர் சிறையில் இருக்கும் நக்சலைட் தலைவரான நாராயண் சான்யலுக்கும் இன்னொரு நக்சலைட் தலைவருக்கும் இடையில் கடிதப் போக்குவரத்துக்கு உதவியதாகவும் சென் மீது போலீஸ் குற்றம் சாட்டியது.

பினாயக் சென்னின் வீட்டைச் சோதனையிட்டதில், நக்சலைட் தலைவர்

உரிமைக்கு ஒரு குரல்

ஜெயிலிலிருந்து சென்னுக்கு எழுதிய கடிதம் உள்ளிட்ட முக்கிய ஆவணங்கள் சிக்கியதாக போலீஸ் சொல்ல, ''அவர்கள் கைப்பற்றியதாகச் சொல்லும் கடிதம், நாராயண் சான்யல் தன் உடல் நலம் குறித்தும், தன் கேஸ் பற்றியும் எனக்கு எழுதிய கடிதம், ஜெயில் அதிகாரியின் அனுமதி முத்திரை பெற்ற அந்தக் கடிதத்தில் ரகசியம் எதுவுமில்லை'' என்கிறார் சென்.

சென்ற ஆண்டு டாக்டர் சென்னின் ஜாமீன் மனுவைத் தள்ளுபடி செய்த அதே சுப்ரீம் கோர்ட், இப்போது அவரை ஜாமீனில் விடும்படி உத்தரவிட்டு இருப்பது, அகில உலக அளவில் மனித உரிமை ஆர்வலர்களை நிம்மதிப் பெருமூச்சு விட வைத்திருக்கிறது; சத்திஸ்கர் ஆதிவாசி மக்களை சந்தோஷத்தில் ஆழ்த்தி இருக்கிறது.



அவரை விடுதலை செய்யக் கோரி நோபல் பரிசு பெற்ற இருபத்தொரு பேர் கையெழுத்திட்ட ஒரு மனுவும் இந்திய அரசுக்கும், சத்திஸ்கர் அரசுக்கும் அனுப்பப்பட்டும் எந்தப் பலனுமில்லை.

''நான் வன்முறைக்கு எதிரானவன்; அது மாவோயிஸ்டுகளாக இருந்தாலும் சரி; போலீஸ் அல்லது போலீஸ் உருவாக்கிய ஆயுதமேந்திய மக்கள் படையானாலும் சரி; வன்முறை ஒழிந்து, அமைதி திரும்ப வேண்டும்'' என்கிறார் டாக்டர் பினாயக் சென்.



✱ சுதா ராமலிங்கம்

''டாக்டர் பினாயக் சென், அவரது மனைவி இலினா சென் இருவரையும் நன்கு அறிவேன். கடந்த இருபது ஆண்டுகளுக்கும் மேலாக மிகவும் எளிமையாக தங்கள் வாழ்க்கையை அமைத்துக்கொண்டு, ஏழை மக்களுக்கும், ஆதிவாசி மக்களுக்கும் மருத்துவ சேவை செய்து வருகிறார்கள். அவர்களின் சேவையை உலக நாடுகள் பாராட்டி கௌரவிக்கின்றன. ஆனால், நம் அரசாங்கமோ பொய் வழக்கு போட்டு சிறையில் அடைக்கிறது.

இது மற்ற மனித உரிமை ஆர்வலர்களை மிரட்டவும், ஒடுக்கவும் சத்திஸ்கர் அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்பதில் துளியும் சந்தேகமில்லை'' என்கிறார் மக்கள் சிவில் உரிமைக் கழகத்தின் துணைத் தலைவரான தமிழ்நாட்டைச் சேர்ந்த வக்கீல் சுதா ராமலிங்கம்

– எஸ். சந்திரமௌலி

கல்கி 14.6.2009



தலைமுறையினரிடையே அதிகளவில் காணப்படும் சர்க்கரை நோய் பற்றி கவலைப்பட்டுப் பேசுகிறார் பிரபல நீரிழிவு நோய் நிபுணர் டாக்டர் ஹரிஹரன் :

"Sedentary life style என ஆங்கிலத்தில் ஒரு தொடர் உண்டு. அதாவது சோம்பேறித்தனமான வாழ்க்கை முறை. காலாற நடக்க சோம்பேறித்தனம், உடற்பயிற்சி செய்ய சோம்பேறித்தனம் என எதற்கும் எல்லாவற்றுக்கும் சோம்பல்படும் மனோபாவம்

உனக்கு 60 எனக்கு 30!



''பல வருடங்களுக்கு முந்தைய மருத்துவப் புத்தகங்களில் சர்க்கரை நோய்க்கென ஆறு அல்லது ஏழு பக்கங்களே ஒதுக்கப்பட்டிருக்கும். ஆனால் இன்றைய காலகட்டத்தில் எல்லாமே தலைகீழாக மாறிவிட்டது. 25, 30 வயதுக்குள்ளாகவே சர்க்கரை நோய், மாரடைப்பு என எல்லாமாக கைகோத்துக் கொண்டு விடுகின்றன'' என இளைய

தான் எல்லாவித நோய்களுக்கும் ஆணிவேர். சிறு வயதிலேயே ரத்தக் கொதிப்பு, சர்க்கரை நோய் போன்றவை சேர்ந்து விடுவதால் இளம் வயதிலேயே உடல் உறுப்புகளுக்கு வயதாகிவிடுகிறது. அறுபது வயது தந்தைக்கு இருக்கக்கூடிய அதே உடல் அசதி, சரியான வாழ்க்கை முறையைப் பின்பற்றாததால் 25, 30 வயதிலேயே மகனுக்கும் வந்துவிடுகிறது.

பெரும்பாலான இளைஞர்கள், படிப்புக்கும் பணிக்கும் தரும் முக்கியத்துவத்தை உடற்பயிற்சிக்குத் தருவதில்லை! பதினைந்து வயதிலேயே டூ-வீலர் கிடைத்து விடுவதால் பக்கத்துத் தெருவுக்குக் கூட நடப்பதில்லை! போதாக்குறைக்கு பிட்ஸா, பர்கர், வீக் எண்ட் பார்ட்டி வித் பியர் என்று நோயை வரவேற்கும் வாழ்க்கை முறை! ஆராதிக்க வேண்டிய நம் உடலை நாமே கெடுத்துக் கொண்டு இருக்கிறோம்.



ஜில் ஜில் இம்சை அரசி!

தினந்தோறும் BIG 92.7 FM ரேடியோ கேட்கும் ரசிகர்களுக்கு இம்சை அரசியைக் (Ophelia) கட்டாயம் தெரிந்திருக்கும். எதையுமே எல்லாவற்றையுமே நகைச்சுவை உணர்வோடு அலசி, ஒட்டுமொத்த இளைஞர்களையும் இம்சிக்காமல் ரசிக்கும்படி 'ஜில் ஜில் நேரத்தை' நடத்தும் இம்சை அரசியை இவ்வருடத்தின் சிறந்த ரேடியோ ஜாக்கி என Indian Radio Forum தேர்ந்தெடுத்துள்ளது. கலக்குங்க இம்சை அரசி, ஸாரி ரேடியோ அரசி.

- நளினி சம்பத்குமார்

இவற்றையெல்லாம் தவிர்த்தால் மட்டும் போதாது. உடலை நாணேற்றிய வில் போல் 'ணங்'கென்று பலமாக வைத்துக்கொள்ள அனைத்து உறுப்புகளுக்கும் பயிற்சி தரணும். சைக்ளிங், வாக்கிங், ஸ்விம்மிங் என்று முறை வைத்துக்கொண்டு செய்யலாம்.





புத்தியை அம்பு போல் ஷார்ப் பாக்க தியானம் பழகலாம், நல்ல நகைச்சுவை உணர்வுள்ள நண்பர்கள் சூழலில் பழகி, விவாதிக்கணும். படிப்பு, வேலை தவிர வேறு ஏதேனும் உருப்படியான ஒன்றில் பற்று இருக்கணும்.''

- நளினி சம்பத்குமார்

பர...பர...
புலி வேட்டை!

மரபின்மைந்தன் முத்தையா

ஆந்திரப் பயணங்களில் சிவாஜி, முத்துமாணிக்கத்துடன் எப்போதும் இருப்பவர் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த கடம் நாராயணரெட்டி. கோன்ட் எனப்படும் ஆதிவாசிகள் சமூகத்தில் இவருக்கு அபாரமான செல்வாக்கு இருந்தது. ஒரு கிராமத்துக்குள் இவர் நுழைந்தால் அங்கிருக்கும் அத்தனை மலைவாசிகளும் தரையோடு தரையாக விழுந்து வணங்குவார்கள். பிற்காலத்தில் அதே கோன்ட் சமூகத்தைச் சேர்ந்த தீவிரவாதிகளால் அவர் கொல்லப்பட்டது காலத்தின் கோலம்.

ஆந்திராவிலும் மற்ற வேட்டைகளிலும் முத்துமாணிக்கத்துடன் ஆர்வமாய்க் கலந்து கொள்பவர்கள், லங்கப்பூர் அரசர்களான கஜசிம்மராஜா, ஜெயசிம்மராஜா. இளையவரான ஜெயசிம்மராஜா மாநில அளவிலான டென்னிஸ் வீரர்.

அது கோடைக்காலம். ஆந்திராவுக்கே உரிய அனல் வெயில் வீசியது. 112-114 டிகிரி வெயில் கொளுத்திக் கொண்டிருந்த போது, மாளிகையிலேயே இருப்பதைவிட வனத்துக்குள் சென்று தங்குவது என்று முடிவானது. இரவு நேரங்களிலும் சூடு தணியாத நிலையில் ஐஸ்கட்டிகளில் துண்டை நனைத்து மேலே போட்டுக் கொள்வார்கள். பூமியில் 3-4 அடிவரை குழிவெட்டி ஐஸ் கட்டிகளைப் போட்டு மறுபடியும் மூடி வைப்பார்கள். இப்படிச் செய்வதால் பத்து நாட்கள் ஐஸ்கட்டியை உருகாமல் பாதுகாக்க முடியும். தங்கும் அறையில் உடைமைகளைப் போட்டு விட்டு வெட்ட வெளியிலேயே படுத்து உறங்கினார்கள்.

தூங்கியும் தூங்காமல் விடியலை எதிர் பார்த்து இரவைக் கழித்தார்கள். அப்படி ஆர்வத்துடன் காத்திருந்தமைக்கு ஒரு காரணமும் இருந்தது. மறுநாள் புலி வேட்டைக்கு நாள் குறித்திருந்தபடியால் ஆதிவாசிகளான கோன்ட் சமூகத்தினர், முந்தைய நாளிலேயே வனத்துக்குள் ஆங்காங்கே சில எருமை மாடுகளைக் கட்டி வைத்திருந்தார்கள்.

அதிகாலை ஐந்து மணியளவில் அங்கே வந்த கோன்ட்டுகள் அந்த மாடுகளைப் பார்த்து வருவதற்காக காட்டுக்குள் போய் வருவதாகச் சொன்னதும் நண்பர் கிருஷ்ணா ரெட்டி தடுத்தும் கேளாமல் முத்து மாணிக்கக் கவுண்டர் அவசர அவசரமாக ஆடை மாற்றி ஒரு ரைபிளையும் எடுத்துக் கொண்டு அவர்களுடன் புறப் பட்டார். தடுத்துப் பார்த்த கிருஷ்ணா



சிவாஜி த சுப்ரீம் பாஸ்



9

ரெட்டி தானும் சேர்ந்து கொண்டார்.

வனப்பகுதியில் ஜீப்பை நிறுத்திவிட்டு இருள் விலகாத அந்த அதிகாலைப் பொழுதில் மிகுந்த எச்சரிக்கையோடு ஒவ்வொரு புதரையும் ஆதிவாசிகள் கவனமாகப் பார்த்தபடியே இவர்களை அழைத்துச் சென்றனர். அரை கிலோமீட்டர் தொலைவு சென்றதும் முதலில் போன கோன்ட் சைகை காட்டி விட்டு கீழே அமர்ந்துவிட்டார். அனைவரும் அமர்ந்து கொண்டு அவர் காட்டிய திசையையே உன்னிப்பாகக் கவனித்தனர். முதல் நாள் இரவு அவர்கள் ஓர் எருமையைக் கட்டி வைத்திருந்த இடம் அது என்று புரிந்தது. தரையில் அமர்ந்தவாறே பத்தடிகள் நகர்ந்து சென்ற கோன்ட்டுகள் மீண்டும் ஓரிடத்தில் அசையாதிருந்தனர். அவர்கள் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்த புதரிலிருந்து ஏதோ ஓர் உருவம் எழுந்ததுபோல் இருந்தது. மிகப்பெரிய வரிப்புலி அது. வரிப்புலிக்கும் இவர்களுக்குமிடையே இருந்தது இருபத்தைந்து அடி தூரம்தான்.

சுதாரித்துக் கொண்ட முத்துமாணிக்கம் தம் ரைபிளை எடுத்துக் குறிபார்த்ததும் பக்கத்தில் இருந்த கோன்ட் தடுத்து விட்டான். முதல் நாள் கட்டப்பட்டிருந்த எருமையை அந்தப் புலி அடித்துத் தின்று கொண்டிருந்தது. நல்ல வாய்ப்பை நழுவ விட்டோம் என்ற வருத்தம் முத்துமாணிக்கத்துக்கு இருந்தது. மாலையில் கலைப்பு வேட்டையின்போது இந்தப் புலியைச் சுட்டுவிடலாம் என்று கோன்ட் சொன்னதை ஏற்க மனம் ஒப்பவில்லை.

மாலையில் சுமார் நான்கு மணியளவில் கலைப்பு வேட்டை துவங்கியது. வனத்தின் ஓர் எல்லையில் ஆட்கள் வரிசையாக நின்று கொண்டு தகர டப்பாக்களையும் தாரை தப்பட்டைகளையும் தட்டி பெரும் ஓசை எழுப்பியவாறு மெல்ல நகர்வார்கள். புதர்களில் மறைந்திருக்கும் விலங்குகள் வெளியே வந்து வேறு மறைவிடங்களைத் தேடும். அப்படி வெளியே வருகிற விலங்குகளை வேட்டைக்காக மெச்சானில் வேட்டைக்காரர்கள் காத்திருக்கும் பக்கமாக வரும் விதமாய்

வெளியேற்றுவதற்கே கலைப்பு வேட்டை என்று பெயர்.

இதில் கைதேர்ந்தவர்களான அந்த கோன்ட்டுகள் மிக மெதுவாக விலங்குகளை வெளியே விரட்டிக் கொண்டிருந்தார்கள். பத்து நிமிடங்களிலேயே விலங்குகள் வெளியே வரத் தொடங்கின. ஒரு கட்டத்தில் கலைப்பு வேட்டைக்காரர்களின் சத்தம் நின்றது. 250 மீட்டர் தொலைவில் மெதுவாக நடந்து வந்தது ஒரு பெரிய புலி. காலையில் பார்த்த அதே புலி. சத்தங்கள் எல்லாம் அடங்கி



விட்டன. எல்லோரும் ஆளுக்கொரு மரத்தில் ஏறிக் கொள்ளத் தொடங்கினார்கள். முதல் மெச்சானுக்கருகே புலி வந்தது. சிவாஜி துப்பாக்கியை நீட்டிக் குறிபார்த்தார். புதர்கள் மண்டியிருந்ததால் சரியாகக் குறி கிடைக்கவில்லை. பிறகு சற்று வேகமாக நடக்கத் தொடங்கிய புலி, தொலைவில் இருந்த ஒரு பள்ளத்தில் இறங்க முற்பட்டது. இனியும் விட்டால் புலி ஓடிவிடும் என்ற நிலையில் தன்னுடைய ரைபிளில் சுட்டார் முத்துமாணிக்கம்.

அடிபட்ட வேகத்தில் எகிறிய புலி பள்ளத்துக்குள் பாய்ந்தது. இந்த ரைபிளில் ஒரு நேரத்தில் ஐந்து தோட்டாக்கள் மட்டுமே நிரப்ப முடியும். ரைபிளைச் சரி செய்தவர் அதன் லிவர் லாக்கைச் சரியாகப் பொருத்தாததால் விசையை அழுத்தி குண்டு வெடித்த அதிர்ச்சியில் திறந்து கொண்டு மற்ற நான்கு தோட்டாக்களும் மண்ணில் விழுந்தன. எதிரில் உள்ள பள்ளத்தில் அடிபட்ட புலி. இவரிடம் வேறு துப்பாக்கியும் இல்லை. அருகிலிருந்தவர்கள் அதிர்ச்சி அடைந்தார்கள். ஓரிரு நிமிடங்கள்தான். அந்தக் காடே அதிரும்படியாக புலியிடமிருந்து எழுந்தது பெரியதோர் உறுமல். உடனிருந்தவர்கள் தடுத்தும் கேளாமல் துணிந்து கீழே இறங்கிய முத்துமாணிக்கம், தோட்டாக்களை எடுத்து ரைபிளில் நிரப்பிக் கொண்டார்.

புலியைக் குறி பார்த்தபோது பெரும் உறுமலுடன் தன் கால்களால் தரையை வாரியபடி பாய முயன்றது. அங்கே பெரும் புழுதிப் படலம் உருவானது.

ஓரிரு நிமிடங்கள்தான். அந்தக் காடே அதிரும் படியாக புலியிடமிருந்து எழுந்தது பெரியதோர் உறுமல்.

புலி இருக்குமிடமே தெரியாத அந்தச் சூழலில் எதிர்த் திசையிலிருந்து கேட்டது ஒரு வேட்டுச் சத்தம். பிர்லாவின் பாதுகாப்பு அலுவலர் தன்னுடைய போர்த் துப்பாக்கியால் எதிர்த் திசையிலிருந்து சுட்டிருந்தார். உடனே முத்துமாணிக்கம் புலியின் தலையில் சுடவும், அப்படியே விழுந்து விட்டது. அனைவரும் மெச்சானிலிருந்து இறங்கி வந்து பார்த்தனர். பெரிய ஆண் புலி ஒன்றை வேட்டையாடி வீழ்த்திய சந்தோஷத்தை ஆடிப்பாடிக் கொண்டாடினர்.

(தொடரும்)

அருள்வாக்கு

வாக்குச் சக்தி



மிருகங்களின் உலகில் காலேஜ் இல்லை, லைப்ரரி இல்லை, பிரிண்டிங் பிரஸ் இல்லை. அவற்றுக்கு வாக்கு கிடையாது. ஆனால், இவையெல்லாம் இல்லாததால் அவை மனிதனைவிடக் கஷ்ட நிலையில் இருக்கின்றனவா? அப்படித் தோன்ற வில்லை. நமக்கு இருக்குமளவுக்கு அவற்றுக்கு வியாதி இல்லை; அவை சொத்துக்களைச் சேர்த்துக் கொண்டு தவிக்கிறதில்லை; நேற்று என்ன செய்தோம்; நாளைக்கு என்ன செய்வோம் என்ற விசாரம் அவற்றுக்கு இல்லை. அதற்கும் எப்படியோ ஆகாரம் கிடைக்கிறது. ஏதோ விதத்தில் வாழ்ந்து பிழைத்துப் போகிறது. ஒன்றை யொன்று அடித்துச் சாப்பிட்டாலும் எல்லா விலங்கினங் களும் விருத்தியாகிக் கொண்டேதானிருக்கின்றன.

மனிதப் பிரபஞ்சத்துக்கே வந்தாலும்கூட காலேஜும் லைப்ரரியும், பிரிண்டிங் பிரஸ்ஸும் இல்லாத ஆதிவாசி களைப் பார்த்தால் அவர்கள் நம்மைவிட நிம்மதியாகவும் நல்லவர்களாகவும் இருப்பதாகவே தெரிகிறது. ஆப்பிரிக்கக் காடுகளிலும், அமெரிக்காவில் செவ்விந்தியக் காடுகளிலும் காலேஜும், லைப்ரரியும் இல்லாதது போலவே கோர்ட்டு களையும் காணோம். அதாவது எழுத்தறிவற்ற காட்டுக் குடிகள், நாகரிகமடைந்த நம் போல் இவ்வளவு குற்றம் செய்வதில்லை. நாகரிகமும், அதிக புத்தியும் படைத்த நாம் செய்யத் தகாத செயல் களில் - அகாரியங்களில் - நூதனக் கற்பனையுடன் விருத்தி யடைந்துகொண்டே வருகிறோம். மனிதனுக்கு மட்டும் 'ஸ்பெஷ'லாக ஸ்வாமி தந்திருக்கும் வாக்குச் சக்தி அனுக்கிரகமா, சாபமா என்றே புரியவில்லை.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய
ஸ்வாமிகள்

புத்தகம்... பேனா... துப்பாக்கி!

ரசித்து சிரிக்க...

வகுப்பு தொடங்கும் நேரம். அவசர அவசரமாக உள்ளே வந்தார் பேராசிரியர்.

'குட் மார்னிங் ஸ்டூடண்ட்ஸ்'

'குட் மார்னிங் ஸார்'

'ஓ...ஸாரி. நீங்க ஃபர்ஸ்ட் இயர் ஸ்டூடண்ட்ஸா...நான் கிளாஸ் மாறி வந்திட்டேன். ஸாரி...'

வந்த வேகத்தில் திரும்பினார்.

www.comedy-zone.net

திகைக்க...

தமிழ்நாட்டிலுள்ள கல்லூரிகளில் கையில் செல்ஃபோன் வைத்திருப்பதே குற்றம் என்கிறார்கள். ஆனால் அமெரிக்காவின் டெக்ஸாஸ் மாகாணத்தில் கல்லூரி வளாகத்துக்குள் மாணவர்கள் கைத்துப்பாக்கியே வைத்திருக்கலாமென்று சட்டம் போட்டிருக்கிறார்கள்.

மாணவர்களுக்கு கல்லூரி வளாகத்துக்குள்ளேயே பாதுகாப்பு வேண்டியிருப்பதால் இச்சட்டத்துக்கு ஏக வரவேற்பு. இரண்டு வருடங்களுக்கு முன்பு விர்ஜினியா டெக் பல்கலைக்கழகத்தில் ஒரு மாணவன் நடத்திய அதிரடித் தாக்குதல்தான் இந்தச் சட்டம் இயற்றப்படுவதற்குக் காரணமாம். அப்படியென்றால் மாணவர்கள் யாரும் துப்பாக்கியோடு கல்லூரிக்குள் வரக்கூடாது என்றல்லவா சட்டம் போட வேண்டும்? பாதுகாப்புக்காக துப்பாக்கி வைத்திருப்பதாகச் சொல்பவர்கள் அதைத் தவறாகப் பயன்படுத்த மாட்டார்கள் என்பதற்கு என்ன நிச்சயம்?

அமெரிக்க மாணவர்கள் ரொம்ப நல்லவர்கள். வெளிநாடுகளிலிருந்து அங்கு படிக்கப் போகின்றவர்கள்தான் ஆபத்தானவர்கள் என்ற நினைப்புதானே இப்படியும்கூட சட்டம்போட வைக்கிறது? அனைத்துக்கும் காலமே பதில்சொல்லும்...

www.dallasnews.com

மனத்தில் பதிக்க...

கல்லூரி தொடங்கியாகிவிட்டது. முதலாண்டில் அடியெடுத்து வைக்கும் பல



ருக்கு ஒருபுறம் மகிழ்ச்சி. மற்றொரு பக்கம் வீட்டைப் பிரிந்து நெடுந்தூரம் வந்து ஹாஸ்டலில் தங்குவதில் வருத்தம். அதிலும் மாணவிகளுக்கோ பயமும் வந்து சேர்ந்துகொள்கிறது.

புதிய இடம்... புதிய நண்பர்கள்... புதிய சூழலில் மாணவிகள் எப்படி நடந்து கொள்ள வேண்டும்? சில டிப்ஸ்...

★ ஹாஸ்டலிலிருந்து ஷாப்பிங் செய்யக் கிளம்பும்போது தனியாகச் செல்ல வேண்டாம். உங்களின் தோழியரையும் உடன் அழைத்துச் செல்லுங்கள்.

★ குடும்பத்தை நினைவுபடுத்தும் புகைப்படங்களையோ அல்லது பரிசுப் பொருட்களையோ எப்போதும் உங்களின் பார்வையில் படும்படி வைத்திருங்கள். தனிமையை உணரும் நேரத்தில் அவை உங்களுக்கு உற்சாகமூட்டும்.

★ ஹாஸ்டலில் நடக்கும் சகல நிகழ்ச்சிகளிலும் முகம் காட்டுங்கள். விடுதிச் சூழல் விரைவில் பழக உதவுவதோடு அது உங்களுக்குத் தோழியர்களின் எண்ணிக்கையையும் அதிகப்படுத்தும்.


★ வீட்டில் எல்லாம் எனக்கேதான் என்று அடம்பிடிக்கலாம். ஆனால் விடுதியில் தங்கியிருக்கும்போது உங்களின் உணவுப்பொருட்களை, தின்பண்டங்களை தோழிகளோடு பகிர்ந்துகொள்ளுங்கள்.

★ விலையுயர்ந்த பொருட்களை எப்போதும் பாதுகாப்பான பெட்டியில் வைத்துப் பூட்டி வைத்திருங்கள்.

★ அறையை எப்போது, யார் சுத்தம் செய்ய வேண்டும் என்று திட்டமிட்டு ஒரு அட்டவணையைத் தயாரித்துவிடுங்கள்.

★ அறையில் இருப்பவர்களோடு என்னதான் நெருங்கிப் பழகினாலும் அவர்களது அந்தரங்க விஷயங்களில் அவசரப்பட்டு மூக்கை நுழைத்துவிட வேண்டாம்.

★ நீங்கள் தனித்திருக்கும் நேரத்தையே டைரி எழுதுவதற்குத் தேர்ந்தெடுங்கள். அது எவர் கண்ணிலும் படாதிருக்கட்டும்.



'வலை'யோடு விளையாடு

• ஸாந்த் •

★ அநாவசியமான பேச்சுகளைத் தவிர்த்துவிடுங்கள். உங்களின் ஆளுமைக்கு அது ஆரோக்கியமானதல்ல.

★ உடைகள் மற்றும் நகைகளை இரவல் கொடுப்பதை இயன்ற வரை தவிர்த்து விடுங்கள்.

★ அவசரத் தேவைகளுக்கென்று எப்போதும் சிறு தொகை உங்களின் கைகளில் இருக்கட்டும்.

★ காய்ச்சல், தலைவலி, ஜலதோஷம் போன்ற உடல் நலப் பிரச்னைகளைத் தவிர்த்திட முன்கூட்டியே மருந்துகளை வாங்கி வைத்திருங்கள். இரவு நேரங்களில் அலைச்சலைத் தவிர்க்கும்.

www.collegetips.com

20

பாரதிபாலன்

''எனக்கு உங்க உசுரு முக்கியம் எங்கூடத்தான் நீங்க இருக்கணும்னு இல்லை''

''உங்களை நாட்டாமக் காரய்யா கூட்டியாரச் சொன் னாங்க...''

கோவிந்துக்குத் திகைப்பு. நம்ப முடியாத திகைப்பு. தண்டல் காரர் முகத்தையே மாறி மாறிப் பார்த்தான். அவர் முகத்தில் இளநகை ஓடிற்று. எதற்காகக் கூப்பிடுகிறார்?

''வர்றீகளாய்யா?''

''ம்.''

''சாவடியிலெ இல்லெ. வூட்டுக்கு வாங்க.''

''வாரேன்.''

நாட்டாமைக்காரர் கூப்பிட்டுப் பேசு வதற்கு என்று சில ஆட்கள் உண்டு. சில ஆத்மாக்கள் உண்டு. ஐயாவைக் கூப்பிட் டுப் பேசுவார். கிழக்கே, மீசை மாயாண்டித் தேவர். அந்தப் பக்கம் சோமு பிள்ளை, கருப்பத்தேவர், சுப்பையா பண்டாரம். வடக்குத் தெருவிலும் கூட அவருக்கு அப்பேர்ப்பட்ட ஆட்கள் உண்டு. என்னை எதற்குக் கூப்பிடணும்?

நாட்டாமைக்காரர் வீட்டுக்குப் போகும் முச்சந்தியில் கூட்டம். கெஸ்தி போட வந்தவர்கள், வரப்புச் சண்டை, வாய்க்கால் சண்டை, வாய்ச் சண்டை என்று வந்தவர் கள் எல்லாம் முச்சந்தியில் நின்று கொண் டிருந்தனர். வீட்டு வாசலிலும் ஏழு எட்டுச் செருப்புகள். நாட்டாமைக்காரரைத் தேடி எத்தனையோ பேர் வருகிறார்கள்; போகி றார்கள். எல்லாரும் வீட்டுக்குள் உட்காரவா முடியும்? வீடு பெரிசுதான். ஆனாலும் வாசல்படியில் நிற்கிற கூட்டம் நிற்கத்தான் செய்யும். அவர் வீட்டுப் படியை மிதித்த தும் யோசனை ஒன்றும் தோன்றவில்லை. ஒரே படபடப்புதான்!

நாட்டாமைக்காரர் தரையில் சௌகர்ய மாக உட்கார்ந்து இருந்தார். அவர் முன் னால் எழுது மேஜை! கோவிந்துவைப் பார்த்ததும் புன்னகை பூத்தார்.

''ஐயா சௌக்கியமா இருக்காங் களா?''

''ம்.''

''காப்பி வாங்கியாரச் சொல்லட்டுமா?''

''வேண்டாம்.''

''தம்பி, எனக்கு ஒண்ணு சொல்லணும்னு தோணுது. ஊரைப் பிடிச்ச சனி ஒரு உசுரை ஒழிச்சுட்டது. ஒங்கய்யா அப்போ விழுந்தவருதேன். ஒங்க பாட்டுக்கு இருங்கன்னு சொல்லவா முடி யுது? சொன்னாலும் அவர் கேக்கவா முடி யும்? ஏதோ பாதாளத்திலெ எறங்கிட் டாப்புலெதேன் ஒக்காந்துட்டார். ஒங்கல வெச்சுத்தேன் அவர் சுவாசம் இருக்குனு நெனக்கிறேன். எனக்கு மேற்கொண்டு சொல்லத் தெரியலெ.''

அவன் அவரைப் பார்த்தான்.

''ஆத்திரத்துலெயும், ஒரு உணர்ச்சி யிலெயும் எம்புட்டோ காரியங்க நடக்குறது தான். ஒங்க வூட்டுலெ ஒண்ணு நடந்து போச்சு. ஊரே வைராக்கியமா இருக்குறாப் புலெ இருக்கு. இப்ப 'இப்படி....' ஒண்ணுனா, அது நல்லா இருக்குமான்னு தெரியலெ.''

''ம்.''

''ஒங்க மனசக் கொலைக்குறதாவோ கெடுக்கிறதாவோ எண்ணிப்பிடப்படாது!''

''நானே இது விசயமா ஒங்களைப் பாக்கணும்னுதேன் இருந்தேன்'' என்று முகத்தை உயர்த்தினான் கோவிந்து.

''நல்லது!''

''திடுதிப்புனு என்ன சொல்றதுனு தெரியலெ. எப்படி ஆரம்பிக்கிறதுனும் தெரியலெ. கொஞ்சம் அவகாசம் எடுத்துக்க லாமான்னு பாக்குறேன்.''

''ம். உலகத்துலெ இல்லாத



காற்று வரும் பருவம்!

சங்கதியான்னு தோணும். ஆனா இதப் புரிஞ்சுக்கிறது சிரமம்தான்.''

அவன் தலையைக் குனிந்து நிலத்தைப் பார்த்தான்.

சாயங்காலம் ஆறு மணி. வெயில் வெண்மஞ்சளாகச் சிதறிக் கிடந்தது. மரம், செடி, கொடிகள், பகம்புல் இவற்றில் பட்டு மிளிர்ந்தது. நாணல் புதரின் வழியே

அது கம்பி கம்பியாக நீண்டிருந்தது. தென்னந்தோப்பை நிழல் மூடியிருந்தது. நாணல் நிழலும், பசும்புல்லும் குளிர்ச்சியாக இருந்தது. உட்கார்ந்து இருந்த இடத்தில் நல்ல புல். பஞ்சவர்ணம் கையால் அதை வருடிக் கொண்டே இருந்தாள். பொன் வெயில் அவள் முகத்தில் தெளித்தது. அவள் காதோர முடியில் பட்டு மின்னியது. அவள் நகர்வில் முடியெல்லாம் பொன் மொட்டாய் துளிர்த்தன. நீலப் புடவையும், கறுப்பு ஜாக்கெட்டும் போட்டிருந்தாள். அப்படியே ஒரு போட்டோ எடுத்து சட்டம் போட்டு மாட்டி வைத்துக் கொள்ளலாம் போல இருந்தது.

''பஞ்சு அப்படியே உன்னை...''

''ம்! சொல்லுங்க வேற என்ன கேட்டார்?''

''எல்லாம் பூடகமாத்தேன் இருந்தது.''

''யார் சொன்னான்னு சொன்னார்?''

''அதக் கேக்கலெ.''

''கேக்க வேண்டியதுதானே?''

''அதத் தெரிஞ்சு என்னாவப் போவுது?''

பஞ்சு பார்வையைத் திருப்பினாள். மாந்தோப்பைப் பார்த்தாள். இருள் மேவி விட்டது. வட்ட வட்டமாய் பறவைகள் திரும்புகின்றன. ஆற்று நீரில் மீன் துள்ளல் கூடிற்று. உடப்புத் துறை, மரத் தடுப்பை மீறி ஒழுகும் நீரின் கூச்சல் கூடிற்று. அலையலையாய் நகரும் காற்றில் பச்சை வாசம். தாழம் புதரில் ஏதோ பூச்சி நகர்கிற சப்தம், அந்த நிசப்தத்தை உடைத்திற்று. மாட்டைக் கரையில் விட்டுவிட்டு, மதகில் ஒரு உருவம் குளித்துக் கொண்டிருந்தது. பின் பக்கம் தூரமாக அவருடைய ஆடு தெரிந்தது.

''ஒங்க வூட்டுக்குத் தெரிஞ்சு போச்சா?''

''இனித்தான் எல்லாம்!''

''அடக்கடவுளே!'' என்று நெஞ்சில் கை வைத்தாள்.

''எல்லாம் முழிச்சுக்கிட்டதுக.''

''ஆமா! நாம இப்படித் தூங்கிக்



கிட்டிருந்தா!''

''எனக்கென்னவோ பயமா இருக்கு!''

''நீ என்னைக்குத்தேன் பயப்படலெ?''

''ஊரைப் பத்தித் தெரியலெ உங்களுக்கு!''

''என்ன வேணா ஆகட்டும் பஞ்சு!''

அவள் தலையைக் கவிழ்ந்து கொண்டாள். பசும்புல்லைக் கிளறினாள். அவள் நெஞ்சு மேலும் கீழும் அலைந்திற்று. மனப்பயம் மட்டும் கூடிற்று. கோவிந்துவின் துணிவு அவளுக்குப் புரியவில்லை. ஏதோ ஒன்று நெஞ்சை அழுத்துவதுபோல இருந்தது.

''எனக்கென்னவோ வேண்டாம்னு தோணுது.''



"எது?"

"எல்லாம்தான்!"

"எல்லாம்தான்னா?"

"கெட்ட கனவா நெனச்சு மறந்திடுங் குற புளிச்சுப்போன வார்த்தைதான் ஞாப கம் வருது; நல்ல கனவா நினைச்சு, அந்தக் கனவுலெ இருந்துக்கிறேன்."

"பேத்தாத."

"எனக்கு ஒங்க உசுரு முக்கியம். எங் கூடத்தான் நீங்க இருக்கணும்னு இல்லை. நீங்க இருக்கணும். ஒங்களைப் பாத்து கிட்டே இருந்தாப் போதும். ஒளறலாத் தெரியும். ஆனா அதான் உண்மை. என் மனச சமாதானப்படுத்தவே முடியலெ. நான் சொல்றது அசிங்கமாத் தோணும். ஒங்கள நெனச்சுக்கிட்டே நாம் பாட்டுக்கு இருந்திடுவேன்."

"முட்டாள்தனமா இருக்கு!"

"நெசந்தான் சொல்றேன். எனக்கு முன் னாடி மாதிரி மனசுலெ வலு கிடையாது. இதோ இங்க வரக்கூட எனக்குத் திராணி இல்லாமப் போச்சு. ஒரு துணை யோடதேன் வந்திருக்கேன்."

"துணையா?"

"ம்! எங்கக்காவயும் கூட்டியாந் திருக்கு."

"எங்க?" என்று கோவிந்து பதறினான். அவள் தாடையை உயர்த்தி பக்கத்தில் இருக்கும் மாந்தோப்பை ஜாடை காட்டி னாள். கோவிந்து அந்த மாந்தோப்பைப் பார்த்தான். இருள் இறங்கிக் கொண் டிருந்தது. பட்சிகளும் பறவைகளும் கூடிக் கொண்டிருந்தன.

"தெரியுமா அதுக்கு?"

"நெஞ்ச முட்டிகிட்டே இருந்துச்சு! என்னமோ தெரியலெ. நேத்து தெரண் டிருச்சு. அம்புட்டும் கொட்டிட்டேன்!"

"ஓங்கக்கா என்னா சொல்லுது?"

"அது என்னா சொல்லும்?"

"ஒண்ணுமே சொல்லலெ?"

"அதுக்கு என்னாங்க தெரியும்? அதுக்கு தெரிஞ்சதைப் பேசும்."

"அதான் கேக்குறேன்?"

"குடியானவனுக்கு வப்பாட்டியாவாடீ இருக்கப் போறேன்னு அழுவுது."

கோவிந்துக்கு நிலையில் 'நங்'கென்று இடித்துக் கொண்டாற்போல் இருந்தது. அறியாமல் இடித்துக் கொண்டு, அந்த அதிர்ச்சியைச் சமாளிப்பது போல் சமாளித் தான். அவள் சொல்ல நினைத்தது என்னவோ? அதற்காக எளிமையாகச் சொல்கிறேன் என்று இத்தனை இழிவாகச் சொல்லியிருக்க வேண்டாம். அவளுக்குத் தெரிந்தது அவ்வளவுதான் என்று அவனால் விட்டுவிட முடியவில்லை. யார் எப்படி

வேணாலும் சொல்லட்டும். நான் உன்னை விட்டு மட்டும் அகலப் போவதில்லை என்பதுபோல் பார்த்தான். பஞ்சு பேசாமல் இருந்தாள்.

''யார் என்ன சொன்னாலும் சொல்லட்டும். நான் அதையும் பார்த்திடத்தான் போறேன்.''

''ம்'' என்று தலையை அசைத்தாள். அவளால் பேச முடியவில்லை. கண்ணை முட்டிக் கொண்டு ஒரு துளி நின்றது.

''நீ இல்லாம எனக்கு இந்த வாழ்க்கை ருசிக்காது.''

''இப்படி ஆசை ஆசையா இருக்கோமே. இப்படி அதே நெனப்பா இருக்கோமே... இதுக்கெல்லாம் ஏதாவது பிரயோசனமுண்டான்னுதேன் மனசு அரிக்குது.''

''சந்தேகமாக்கும்?''

''சந்தேகமில்லை. பயம்.''

''இப்படி வா'' என்று அவளை இழுத்தான். அவள் உடம்பெல்லாம் வெது வெது என்று சுட்டது. அவன் அதிர்ச்சியில் ''என்ன?'' என்று அலறினான். நெற்றியில் கை வைத்தான். தணலாகச் சுட்டது. இன்னும் அவளை இழுத்து அவன் அருகில் வைத்துக் கொண்டான். அவள் ஒரு கையை புல் தரையிலும் மறு கையை அவன் இடுப்பிலும் வைத்திருந்தாள். அவள் இடுப்பை இழுத்துப் பிடித்துக் கொண்டான். ''நான் இல்லாம ஒங்களால இருக்க முடியாதா?'' என்று ரகசியமாக அவன் காதருகில் கேட்டாள். அவன் அவள் முகத்தை இரண்டு கைகளிலும் ஏந்திக் கொண்டு, பார்த்தான். நன்றாக அஸ்தமித்து விட்டது. ''எனக்கு ரொம்ப ஆசை ஆசையாவும் நெறைவாவுந்தான் இருக்கு'' என்றான்.

''அன்னைக்கு ஒரு நா ஒண்ணு சொன்னீங்களே!''

''என்னான்னு?''

''இதே மாதிரிதான் ஒரு நாள்!''

அவன் பேசாமல் இருந்தான்.

''மறந்துடுச்சா?''

''சொல்லு பஞ்சு.''

பஞ்சு புன்சிரிப்புடன் தலையைக் கவிழ்த்துக் கொண்டாள்.

''மோட்டார் ரூம்லெ வச்சு; மறந்திடுச்சா?''

''ம்! அதச் சொல்றியா?''

அவளை இறுக்கிக் கொண்டான். அவன் பிடியில் இறுக்கத்தில் அவள் துவண்டாள். அவளுடைய பார்வை, பேச்சு, குரல் எல்லாமே குலைந்துவிட்டது. உணர்ச்சியில் அவள் மனம் தளும்பிற்று!

(காற்று வீசும்)

காதல் ரவுசு

சினிமாக்களில் வரும் காதல் தத்துவங்களுக்கு ரவுசு கண்ணாயிரத்தின் கமெண்ட்ஸ்:

காதல் ஒரு பூ மாதிரி ஒருமுறைதான் பூக்கும் : யாரோட காதுல வைக்க?

காதல் புனிதமானது: இப்போ ஏகப்பட்ட கணக்குகள் பாக்கறதால 'காதல் கணிதமானது!'

காதல் ஒரு வேதம்: ஓவரா போட்டுப் பிசையறதால இன்னைக்கு அது சாதம்.

காதலுக்கு அணைபோட முடியாது: ஏன் ஹைகோர்ட்டுல ஸ்டே வாங்கிடுச்சா?



காதலுக்குக் கண்ணில்லை: ஆனா பல்லிருக்கு... ஏமாந்தா கடிச்சிடும்

காதல் ஒரு கண்ணாடி மாதிரி: ஓ... அதான் பல காதலர்கள் அது மேல கல்யாணம்ங்கிற கல் விழாம பாத்துக்கிறாங்களா?

காதல் ரெண்டு மனசு சம்பந்தப்பட்ட விஷயம் : இது பழைய கதை... இப்பல்லாம் காதல் ரெண்டு பர்ஸ் சம்பந்தப்பட்ட விஷயம்.

- வீ. விஷ்ணுகுமார்

அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி – 2009



படைப்பாளிகளே, வாசக எழுத்தாளர்களே! நீங்கள் அனைவரும் ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் சிறுகதைப் போட்டி வந்தேவிட்டது!

பிரசுரத்துக்குத் தேர்வாகும் ஒவ்வொரு கதையும் ரூ.500 சன்மானம் பெறும்.

யார் வேண்டுமானாலும் எத்தனை கதைகள் வேண்டுமானாலும் எழுதலாம். என்றாலும் எழுதுபவர் முப்பத்தைந்து வயதுக்குட்பட்டவராகவோ அல்லது அறிமுக எழுத்தாளராகவோ இருந்தால் சிறப்புப் பரிசு உண்டு.

முதல் பரிசு - ரூ.10,000/-

இரண்டாம் பரிசு - ரூ.7,500/-

மூன்றாம் பரிசு - ரூ.5,000/-

விதிமுறைகள் :

* கல்கியில் நான்கு பக்கங்களுக்கு மிகாமல் இருப்பது நல்லது.
* சொந்தக் கற்பனைதான் என்பதற்கு உறுதி மொழிக் கடிதம் வேண்டும். அது இல்லாத கதைகள் பரிசீலிக்கப்பட மாட்டா.
* அறிமுக எழுத்தாளர் எனில், இதற்கு முன் எந்தப் பத்திரிகையிலும் எழுதியதில்லை; போட்டி முடிவு வெளியாகும் வரை எழுதுவதில்லை என்று உறுதிமொழி தரவேண்டும்.
* படைப்பாளி முப்பத்தைந்து வயதுக் குட்பட்டவராக இருந்தால், அதற்கான ஏதாவதொரு அத்தாட்சி (பத்தாம் வகுப்பு டி.சி. - ஜெராக்ஸ் போன்றவை. நகல் மட்டுமே அனுப்பவும்) கண்டிப்பாக இணைக்கப்பட வேண்டும்.
* முழு வெள்ளைத்தாளில் ஒரு பக்கத்தில் மட்டுமே எழுத வேண்டும்.
* தேர்வாகாத கதைகளைத் திரும்பப் பெற, போதிய தபால் தலைகள் ஒட்டிய அஞ்சல் உறை இணைக்கப்பட வேண்டும். பின்னால் தனியே அனுப்பிப் பயனில்லை.
* போட்டிக்கு அனுப்பும் கதையை, முடிவுகள் வெளியாகும் வரை வேறு இதழுக்கோ, இணையதளத்துக்கோ, போட்டிக்கோ அனுப்பக்கூடாது.
* பரிசுக்குரிய கதைகளை, நடுவர் குழு பரிசீலித்துத் தேர்ந்தெடுக்கும். சந்தேகம் எழும் விஷயங்களில் கல்கி ஆசிரியரின் தீர்ப்பே இறுதி.
* முடிவு வெளியாகும் வரை, எவ்விதக் கடிதப் போக்குவரத்தோ, தொலைபேசி விசாரிப்புகளோ கூடாது.
* 'அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி – 2009' என்று உறையின் மேல் தவறாமல் குறிப்பிட்டு, அனுப்ப வேண்டிய முகவரி :

ஆசிரியர், கல்கி,

கல்கி பில்டிங்ஸ், 47-NP, ஜவாஹர்லால்
நேரு சாலை, ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 032.

* கதைகள் வந்து சேரக் கடைசித் தேதி : ஜூன் 15.
* போட்டி முடிவும், முதல் பரிசுக் கதையும் ஆகஸ்ட் 2 ஆண்டு மலரில் வெளியாகும்.

படைப்பாளிகள், வாசக எழுத்தாளர்கள் அனைவரும் உற்சாகத்துடன் கலந்துகொண்டு சிறப்பிக்க அழைக்கிறோம்.


- ஆசிரியர்

சென்ற வாரம் பாடி லாங்வேஜ் பத்தி சொல்லிட்டிருந்தோம். இதோ இன்னும் சில விஷயங்கள். கவனிச்சுக்கங்க...

• அமைதியாக இருக்கப் பழகுங்கள். சிலர் எப்போதும் டேபிளில் கைகளால் தட்டி, குத்தித் தாளம் போடுவார்கள். கால்களை விடாமல் ஆட்டிக் கொண்டே யிருப்பார்கள். இது மன சஞ்சலத்தைக் குறிக்கும் சிக்னல்!

• கைகளை அழகாக, கான்ஃபிடன் டாகச் செயல்படுத்துங்கள். சிலரின் ஹாண்ட் மூவ்மென்ட் வெகு அழகாக இருக்கும். சிலரின் சொற்பொழிவுகளைக் கேட்கையில் அவர்களின் பேச்சை விட கைகளினால் செய்யும் மானரிஸங்கள் கேட்பவர்களைப் (பார்ப்பவர்களை!) பரவசப்படுத்தும்.

• பேசும்போதும் சரி; கேட்கும் போதும் சரி, நெருக்கமாகப் போகாதீர்கள். பர்ஸனல் ஸ்பேஸ் என்பது மிக முக்கியம். நீங்களும் நெருங்காதீர்கள். யாரையும் நெருங்கவும் விடாதீர்கள்.



உடையழகு... நடைபழகு...



அதிகமாகப் பேசுவதை விட்டு விட்டு மிக அதிகமாகக் கேட்கவும்



கன்னத்தில் கை வைத்தால்...

• காதுகளுக்கும் மிக முக்கிய மான ரோல். நமக்கு கடவுள் இரண்டு காதுகளைக் கொடுத்து வாய் மட்டும் ஒன்றைத்தான் கொடுத்திருக்கிறார். ஸோ அதிக மாகப் பேசுவதை விட்டுவிட்டு, மிக அதிகமாகக் கேட்கவும்.

• கண்களைக் கசக்கினால் சந்தேகம், நம்பிக்கையின்மை யைக் காண்பிக்கும். நகங் களைக் கடித்தால் நெர்வஸ், கைகளைப் பின்னால் கோத்திருந்தால் கோபம், பாக்கெட்டில் கை வைத்து நடந்தால் உற்சாகமின்மை, விரல் களைக் கோபுர வடிவத்தில் கோத்து வைத்திருந்தால் அதிகார தோரணை, கண்ணை மூடிக்கொண்டு மூக்கு நுனி யைக் கிள்ளினால் நெகட்டிவ் மதிப்பீடு, கன்னத்தில் கை வைத்தால் சிந்தனை, மோவாய்க் கட்டையைத் தேய்த்தால் முடிவுக்கு முயற்சித்தல், கணுக்கால்கள் சேர்ந்து கோத்திருந்தால் கவலை, பயம்... என பாடி லாங்வேஜின் லிஸ்ட் வெகு நீளம்!

• பின்பக்கமோ, முன்பக்கமோ லேசா கச் சாய்ந்தால் அது ஒரு அருமையான பாடி லாங்வேஜ்! பிறரின் பேச்சு, அட்வைஸ் உங்களுக்குப் பிடித்திருந்தால் சற்றே முன்னே சாயவும். 'நான் கான்ஃபிடன்டாக இருக்கிறேன், ரிலாக்ஸ்டா ஃபீல் பண்ணு கிறேன்' என்ற நிலையில் பின்னே சாயவும். இதிலும் கவனம் தேவை. ரொம்ப முன்பக்கமாக சாய்ந்தால் உங் களை, விடாப்பிடியாக தன் காரியத்தைச் சாதித்து கொள்ளுபவர் என்ற தோற் றத்தை ஏற்படுத்தும். அதேபோல பின்பக்கம் அதிகமாகச் சாய்ந்தால் கர்வமுள்ளவராகவும், கவனமில் லாதவராகவும் காண்பிக்கும்.

பலருக்கு தங்கள் பாடி லாங்வேஜினால் பிறருக்கு எந்த மாதிரி உணர்வுகளை வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறோம் என்றே தெரியாது. இந்த சீக்ரெட்டுகளை வெளியிட்டு விட்டோம். இனி ஹேப்பி இன்று முதல் ஹேப்பி...






குறும்படம்

'அப்பா! எங்க ஸ்கூல்ல கட்டுரைப் போட்டி, கவிதைப் போட்டி வச்சிருக்காங்கப்பா. எழுதிக் குடுங்கப்பா!' என்று கேட்கிற பிள்ளைகளை நாம் பார்த்திருப்போம். அப்பாவோ, அம்மாவோ, அல்லது வேறு யாரோ எழுதிக் கொடுத்ததை மனப்பாடம் செய்து அவர்கள் பரிசுகளையும் தட்டிக் கொண்டு வந்துவிடுவார்கள். இந்தச் சின்ன நிகழ்வுக்குப் பின்னால் இருக்கும் ஓர் உண்மை





யான திறமைசாலியைப் பற்றி யாரும் பெரிதாக நினைப்பதில்லை. இதை அடிப்படையாகக் கொண்டு பின்னப்பட்ட கதைதான் 'வேருக்கும் கிழே பூக்கள்' குறும்படம்.

அது ஒரு கிராமம். அதன் வீதிகளில் பள்ளிச் சீருடையில், தோளில் ஸ்கூல் பேக்கை மாட்டிக் கொண்டு ஓட்டமும் நடையுமாக வருகிறாள் சாந்தி. ஒரு குடிசை வீட்டு வாசலில் வந்து நிற்கிறாள். பயந்தபடி, தயக்கத்துடன் எட்டிப் பார்க்கிறாள். அலமாரியில் புத்தகங்கள் இருக்கின்றன. ஆனால், அவளுடைய தோழி சாந்தா வீட்டில் இல்லை. நோயாளி அம்மா மட்டும் படுக்கையில் படுத்திருக்கிறாள். இவள் விசாரிக்க, அவள் கொல்லைப் பக்கம் எங்கேயாவது இருப்பாள் என்று சொல்கிறாள் அம்மா.

சாந்தா மறுபடியும் தோழியைத் தேடி வீதிகளில் ஓடுகிறாள். அந்தக் காலை நேரத்திலேயே முழு போதையில் தள்ளாடியபடி வரும் சாந்தாவின் அப்பாவைப் பார்க்கிறாள். பயந்து, விலகி ஓடுகிறாள். கொஞ்ச தூரத்தில் சாந்தா பள்ளிச் சீருடையில் ஒரு கன்றுக் குட்டியை இழுத்து வருவதைப் பார்க்கிறாள்.

''இன்னைக்கு ஸ்கூல்ல ஒரு கவிதைப் போட்டி. குழந்தைத் தொழிலாளர்கள் பத்தி எழுதணும். நீதான் நல்லா கவிதை எழுதுவியே! ஒண்ணு எழுதிக் கொடேன்'' என்று சொல்லி, ஒரு நோட்டையும் பேனாவையும் கொடுக்கிறாள் சாந்தி. ''நீ வேன்லதானே போவே! நான் ஸ்கூல் வாசல்லேயே நின்னு வாங்கிக்கறேன்'' என்று சொல்லிவிட்டு அவசர அவசரமாகக் கிளம்புகிறாள். பிறகு நின்று திரும்பி, ''என்ன யூனிஃபார்ம்ல இருக்க?'' என்று கேட்க, ''என் கிட்ட இருந்த ரெண்டு பாவாடை சட்டையும் கிழிஞ்சு போச்சு'' என்கிறாள் சாந்தா.

சாந்தி போனதும், சாந்தா நோட்டைக் கக்கத்தில் இடுக்கிக் கொண்டு, கன்றுக் குட்டியை இழுத்தபடி வருகிறாள். எதிரில் அவளுடைய குடிகார அப்பா சகதியில் விழுவதைப் பார்த்துப் பதறிப் போகிறாள். அந்த வழியாக வரும் இரண்டு பேர் அவரைத் தூக்க உதவுகிறார்கள். சாந்தா அழுதபடி அப்பாவைத் தண்ணீர் ஊற்றிக் குளிப்பாட்டுகிறாள். ஓர் இடத்தில் உட்கார்ந்து கவிதை எழுதுகிறாள்.

'எனக்கு டாக்டராகணும்னு ஆசை! கலெக்டராகணும்னு ஆசை. ஐ.பி.எஸ். அதிகாரியாகணும்னு ஆசை...' என்று




விரிகிறது கவிதை. கவிதை எழுதி முடித்ததும் கீழே 'சாந்தி' என்று போடுவதற்கு பதிலாக 'சாந்தா' என்று போட்டுவிடுகிறாள். அவள் கண்ணில் இருந்து வழிகிற கண்ணீர்த் துளி சாந்தா என்கிற பெயரின்மேல் விழுகிறது.

வீட்டுக்கு வந்து அம்மாவின் மேல் ஒரு போர்வையை எடுத்துப் போர்த்திவிடுகிறாள். அடுப்பில் இருக்கும் பழைய சாதத்தை எடுத்து ஒரு தூக்குவாளியில் போட்டுக் கொள்கிறாள். வெளியே வேன் வந்து நிற்கும் சத்தம் கேட்கிறது. அம்மாவிடம் சொல்லிவிட்டு ஓடுகிறாள். ஏறிக் கொள்கிறாள். உள்ளே முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாமின் படம் ஒன்று ஒட்டப்பட்டிருக்கிறது. 'கனவு காணச் சொன்னியே கலாம் தாத்தா...' என்று மீண்டும் சாந்தாவின் கவிதைக் குரல் கேட்கிறது.

கொஞ்ச தூரத்தில் பள்ளிக்கூட வாசலில் பரபரப்பாக நின்றுகொண்டிருக்கிறாள் சாந்தி. வேனைப் பார்த்ததும் அவள் முகம் மலர்கிறது. ஆவலோடு கையை நீட்டி, சாந்தா கொடுத்த நோட்டை வாங்கிக் கொள்கிறாள். சாந்தா அமர்ந்திருக்கும் வேன் தீப்பெட்டி ஆபீஸை நோக்கி விரைகிறது.

இந்தக் குறும்படத்தின் இயக்குநர் ராஜா பக்கிரிசாமிக்கு சொந்த ஊர் கும்பகோணம். கணிதமேதை ராமானுஜன் வீட்டுக்கு எதிர்வீடு. ஆறு மணி நேரத்தில் இதைப் படமாக்கியிருக்கும் ராஜா, ''சின்ன வயசுல நான் பட்ட கஷ்டங்கள்

வேருக்கும் கீழே...



* ராஜா பக்கிரிசாமி

தான் இந்தப் படைப்பா வந்திருக்கு'' என்கிறார்.

சரி. ராஜா பக்கிரிசாமிக்கு திரைத்துறையில் அனுபவம் எப்படி? தற்போது ஒரு சினிமாவுக்கு புரொடக்ஷன் மேனேஜராக இருக்கிறார். அதற்கு முன்பு? ஒளி ஓவியர் தங்கர்பச்சானிடம் முதன் முதலில் 'அழகி' படத்தில் ராஜா பார்த்த வேலை என்ன தெரியுமா? ஆபீஸ் பாய்!

- பாலு சத்யா

'மத்திய அமைச்சரவையில் ஆந்திராவுக்கு ஐந்தே இடங்கள் தானா? அதிலும் கேபினட் அந்தஸ்தில் ஒருவர்தானா? காங்கிரஸை மீண்டும் ஆட்சியில் அமர்த்தியதற்கு இதுதான் பரிசா?' என்று ஆந்திரா காங்கிரஸ்காரர்கள் கொதித்துப் போயிருக்கிறார்கள். தமிழ்நாட்டிலிருந்து மொத்தம் ஒன்பது மந்திரிகள், அதிலும் தி.மு.க.வுக்கு ஏழு என்பதில் அவர்களுக்கு ரொம்பவே கடுப்பு.

(அந்தக் கோபத்தை கிருஷ்ணா தண்ணீரில் காட்டிடாதீங்க சுந்தரத் தெலுங்கர்களே!)



* சொந்தக் காலில் நிற்க கடன்...



* டான்ஸிங் கௌபாய்

மத்திய அமைச்சரவையில் இடம்பெற்றிருப்பவர் புரந்தேஸ்வரி. அவருடைய கணவர் வெங்கடேஸ்வர ராவ் ஆந்திராவில் எம்.எல்.ஏ. அவருக்குத் தம் அமைச்சரவையில் இடம் தர விரும்பிய முதலமைச்சர் ராஜசேகர ரெட்டி, கணவருக்கு மாநில அமைச்சரவையில் இடம்கொடுத்தால், மனைவிக்கு மத்திய அமைச்சரவையில் 'நோ' என்று கண்டிஷன் போட்டார். யோசித்து, கணக்கு போட்டுப் பார்த்த அரசியல் தம்பதி, மனைவியின் மத்திய அமைச்சர் பதவிதான் வெயிட்டானது என்று முடிவெடுத்து விட்டார்கள்.

(மத்தியில், மாநிலத்தை விட டப்பு அதிகம் பார்க்கலாமோ?)

மொத்தம் முப்பத்தைந்து பேர் கொண்ட ஆந்திர அமைச்சரவையில் ஆறு பேர் பெண்கள் என்பது பெரிய விஷயம்தான் என்றாலும், ஆந்திர சரித்திரத்திலேயே முதல் தடவையாக ஒரு பெண்மணியின் கையில் உள்துறையைக் கொடுத்திருப்பது சர்ச்சையைக் கிளப்பி இருக்கிறது. முந்தைய அமைச்சரவையில் சுரங்கத் துறை அமைச்சராக இருந்த சபிதா இந்திரா ரெட்டியை, இப்போது உள்துறைக்குப் போட்டிருக்கிறார் ரெட்டிகாரு. நக்சலைட் பிரச்னை அரசாங்கத்துக்கு ஓயாத தலைவலியைக் கொடுத்துக் கொண்டிருக்

கடன் வேணுமா கடன்?

கும்போது, இவரைப் போய் உள்துறை அமைச்சராகப் போட்டிருக்கிறாரே என்று கேள்வி எழுப்புகிறார்கள் அரசியல் நோக்கர்கள்.

(நக்சலைட் பிரச்னையை ஒடுக்கி சரித்திரம் படைப்பாரா? இல்லை முதல் பெண் உள்துறை அமைச்சர் என்ற பெருமையில் திருப்தியடைந்து விடுவாரா?)

ஆளும்கட்சியாக இருந்தால் கட்சிக்காரர்கள் சம்பாதிக்க நிறைய வழி உண்டு. எதிர்க்கட்சியாக இருந்தால்? இதோ வழி காட்டுகிறார் சந்திரபாபு நாயுடு. ''கட்சியைச் சேர்ந்த இளைஞர்களுக்கு என்.டி.ஆர். நினைவு அறக்கட்டளையிலிருந்து கடன் கொடுக்கிறேன்; பிசினஸ் செய்து சொந்தக் காலில் நில்லுங்கள்'' என்று சமீபத்திய கட்சி மகாநாட்டில் அறிவித்திருக்கிறார்.

(கடன் தள்ளுபடியெல்லாம் உண்டா பாபுகாரு?)

தொட்டபுரி, நீலம், சின்ன ரசம், பெத்த ரசம், தேசரி, ஹிமயத் பசந்த், கேசர், சோரா - இதெல்லாம் என்ன? ஹைதராபாத்தில் அண்மையில் கோலாகலமாக நடந்த 'மாம்பழக் கண்காட்சி' யில் இடம்பெற்ற 299 வகை மாம்பழங்களில் சிலவற்றின் பெயர்கள்தான். உ.பி., பீகார், ஒரிசா, அஸ்ஸாம், மகாராஷ்டிரா, தமிழ்நாடு ஆகிய மாம்பழ மாநிலங்களை உற்பத்தியில் முந்த வேண்டும் என்பதே ஆந்திராவின் லட்சியமாம்.

(எங்க ஊரு மாம்பழத்தின் சோகக் கதையைப் பார்த்தீங்களா?)

தெலுங்கு சினிமாவில் பட்டையைக் கிளப்பிக் கொண்டிருக்கிறார் லாரன்ஸ் ராகவேந்திரா. அவர் அடுத்து நடித்து, இயக்கப் போகும் படத்தில் அவருக்கு கௌபாய் வேஷம். அதனால் லாரன்ஸ் இப்போது குதிரை ஏற்றப் பயிற்சியில் பிஸி.


(படத்தில் மஞ்சள் பேண்ட், சிவப்புச் சட்டையில் குதிரையும் டூயட் பாடுமா?)

- பரத் ராம்



✱ கண்டிஷன்காரு











பறவைகளின் மொழி!

"இந்த ஓவியக் கண்காட்சிக்குப் பின்னால் ரங்கநாதன் இருக்கிறார். ரங்கநாதனுக்குப் பின்னால் ஒரு கதை இருக்கிறது" என்றார் பிரபல கராத்தே மாஸ்டர் ஷிஹான் ஹுசைனி. இவர் ஓவியக் கல்லூரியில் படித்துப் பட்டம் பெற்ற ஓவியரும், சிற்பியும் கூட. அவர் தமது ஓவியங்களின் கண்காட்சியை, சென்னை பெசன்ட் நகரில் உள்ள தம் கராத்தே பள்ளி வளாகத்தில் நடத்தினார். ஓவியக் கண்காட்சியைத் துவக்கி வைத்தவர் ஹுசைனியின் மாணவர், ஐம்பத்து இரண்டு வயதான ரங்கநாதன்.

"ரங்கநாதன் கராத்தேயில் பிளாக் பெல்ட் வாங்கியவர். கடந்த வருடம் நவம்பர் மாதம் அவருக்குத் திடீரென்று ஹார்ட் அட்டாக். பரிசோதித்த இதய நிபுணர், 'உடனடியாக இதய ஆபரேஷன் செய்யாவிட்டால் உயிருக்கு உத்தரவாதமில்லை' என்று சொல்லிவிட்டார். ஆபரேஷனுக்கு சுமார் ஒன்றரை லட்ச ரூபாய் தேவைப்பட்டது. அப்போதுதான் அவர் பெண்ணின் பிரசவத்துக்கு நிறைய செலவழித்

திருந்ததால் ஆபரேஷனுக்குத் தேவையான அளவு பணம் ரங்கநாதனிடம் இல்லை. என் கையில் அந்தச் சமயம் இருந்த பணம் வெறும் ஆறாயிரம் ரூபாய். நண்பர்கள், மாணவர்கள், அவர்களது பெற்றோர்கள் என்று அனைவருக்கும் உடனடியாக மொபைலில் கோரிக்கை அனுப்பினேன். சொன்னால் நம்ப மாட்டீர்கள். அடுத்த அரை மணி நேரத்தில் நாலு லட்ச ரூபாய் சேர்ந்துவிட்டது. நான் நெகிழ்ச்சியில் திக்குமுக்காடிப் போனேன். உடனடியாக ஆபரேஷன் நடந்தது. ரங்கநாதன் உயிர் பிழைத்துக் கொண்டார்.

அப்போதே, ஆபரேஷன் செலவு போக மீதியை உரியவர்களுக்குத் திருப்பிக் கொடுத்தேன். ஆபரேஷனுக்குச் செலவான பணத்தை ஆறு மாதத்துக்குள் திருப்பிக் கொடுத்துவிடுவதாகவும் வாக்களித்தேன். அதற்காக இரவு பகலாக ஏராளமான பறவைகளின் ஓவியங்களைத் தீட்டினேன். அவற்றில் முப்பது ஓவியங்களை இங்கே காட்சிக்கு வைத்திருக்கிறேன். ஒவ்வொரு ஓவியத்துக்கும் விலை ரூபாய் ஐந்தாயிரம். இதுவரை இருபத்தைந்து ஓவியங்கள் விற்பனையாகியுள்ளன'' என்றார்.



"வீட்டில் யாருக்கும் தெரியாமல் கொல்லைப்புறத்தில் சின்னஞ்சிறு பறவைகளை வளர்த்திருக்கிறேன்"

''என்ன திடீரென பறவைகளை வரைய ஆரம்பித்து விட்டீர்கள்? வழக்கமாக உங்கள் ஓவியக் கண்காட்சி என்றாலே ஏதாவது சர்ச்சை கிளம்பும். அது அரெஸ்ட்டில் கூட போய் முடியுமே?'' என்று கேட்டதும் புன்னகைத்தார்.

''என் ஓவிய மாணவ, மாணவிகள் சில ஆண்டுகளுக்கு முன்பு, ஆசிரியர் தினத்தில் பறவைகள் பற்றிய ஒரு அரிய கலைக் களஞ்சியத்தைப் பரிசளித்தார்கள். அதில் இடம் பெற்றிருந்த நூற்றுக்கணக்கான பறவைகளின் புகைப்படங்களிலிருந்து எனக்குப் பிடித்தவற்றை ஓவியங்களாகத் தீட்டினேன். தவிர, எனக்குச் சின்ன வயதிலிருந்தே பறவைகள் மீது அலாதியான ஆர்வம். பறவைகளைப் போல நமக்கும் இறக்கைகள் இருந்தால் ஜாலியாகப் பறந்து திரியலாமே என்று கற்பனை செய்தது உண்டு. வீட்டில் யாருக்கும் தெரியாமல் கொல்லைப்புறத்தில் சில சின்னஞ்சிறு பறவைகளை ஆசையுடன் வளர்த்திருக்கிறேன். அதோடு, என் அக்கா ரொம்ப அழகாக அன்னப் பறவைகளை வரைவாள். நான் எவ்வளவு முயற்சி செய்தாலும் அவளைப் போல வரைய வராது. அது கூட ஒரு காரணமாக இருக்கலாம்'' என்றார். காரணம் எதுவானாலும், அதன் மூலம் அவர் செய்து முடித்துள்ள காரியம் சிலிர்க்க வைப்பதுதான்.

- எஸ்.சந்திரமௌலி

"நான் ஜெயிப்பேனான்னு கவலையா இருக்கு!"

"நீங்க ஜெயிச்சிடுவீங்களோன்னு மக்கள் கவலையா இருக்காங்க தலைவரே!"



- தென்றல் சண்முகசுந்தரம்

எருமையும் குட்டிச்சுவரும்!



''தொழிலை நிறுத்திட்டு சினிமா எடுக்கணும்னு போனியே, பின்ன எப்படி ஜெயிலுக்கு வந்த?''

''கதையைத் திருடி சினிமா எடுத்தேன்... அதான்.''

- சொக்கம்பட்டி தேவதாசன்



''ஏங்க எருமை மாடு மாதிரி இடிச்சிட்டுப் போறீங்க?''

''ஸாரிங்க... நீங்க குட்டிச் சுவர் மாதிரி நிற்கறதை நான் கவனிக்கலை.''

- எஸ்.பொருநை பாலு



''என் கணவரிடம் எனக்கு மிகவும் பிடித்தது எது தெரியுமா?''

''தெரியாதுடி!''

''அவர் வைக்கும் வத்தக் குழம்பு தான்!''

- எம்.அசோக்ராஜா




''உன் பெண்டாட்டியை உனக்கு அடியோடு பிடிக்காதுன்றியே, ஏன்?''

''அடி கொடுக்காம இருந்தாதான் பிடிக்கும்!''

- வெ.சீதாராமன்

பொண்ணு கொடுங்கப்பா!



சேனல்

''விழி மூடி யோசித்தால் அங்கேயும் வந்தாய் பெண்ணே, பெண்ணே'' என்று உற்சாகமாகப் பாடியபடி வந்து கொண்டிருந்தார் ஜெகன். 'யார் சார் அந்தப் பொண்ணு?' என்று ஆர்வமாகக் கேட்டோம்.

லவ் டூ மேரேஜ்

''**சா**ர் நானும் ஒரு பொண்ணும் ரொம்ப வருஷமா லவ் பண்றோம். அவங்க பேரண்ட்ஸுக்கும் எங்க லவ் மேட்டர் தெரியும். இந்த லவ், மேரேஜ்ல முடியுமான்னு தெரியல.

எங்களை மாதிரி மீடியாவில் இருக்கறவங்களைப் பார்த்து ரசிப்பாங்க. ஆர்வமா வந்து பேசுவாங்க. ஆனா யாரும் வீடு வாடகைக்குத் தரமாட்டாங்க. கல்யாணத்துக்குப் பெண் கொடுக்க மாட்டாங்க. மீடியாவுல இருக்கறவங்கன்னாலே ஃப்ராடு, கேரக்டர் சரியில்லாதவங்கன்னு தப்பான எண்ணம் சொசைட்டில இருக்கு. இது ரொம்ப டேஞ்சரான எண்ணம். எல்லா ஃபீல்டுலயும் சரியில்லாதவங்க இருக்கற மாதிரி, மீடியாவுலயும் கொஞ்ச பேர் இருக்காங்க. என்னுடைய லவ் கூட மேரேஜுல முடியாம தள்ளிப் போறதுக்கு இது மாதிரியான தப்பான ஒபீனியன் கூட காரணமாக இருக்கலாம். இந்த மேட்டரைப் படிச்சு யார் மனசுலயாவது மீடியா மக்களைப் பற்றி நல்ல எண்ணம் வந்து, என் லவ் கல்யாணத்துல முடிஞ்சா நம்ம 'கல்கி'க்கு ரொம்ப தேங்க்ஸ் சொல்வேன்.''

கல் டூ சிலை...

''**நா**ன் பக்கா சென்னைவாசி. எனக்கு இன்ஸ்பிரேஷன் என்னை வளர்த்த பாட்டிதான். பாட்டி எனக்குக்

கொடுத்த அளவுக்கதிகமான சுதந்திரத்தால் சில தப்பான விஷயங்களைச் செய்தேன். நெகடிவ்வான அனுபவங்கள் கிடைத்த பிறகு என்னைத் திருத்திக்கிட்டேன்.

கல்லான என்னைச் சிலையாக மாற்றியது லயோலா காலேஜ் கேம்பஸ்தான். அங்கே நான் படித்த பி.ஏ. இங்கிலீஷ் லிட்ரேச்சர் எனக்கு மிகச் சிறந்த ஆங்கில அறிவையும், உலக இலக்கியங்களையும் அறிமுகம் செய்தது. எனக்கு அறிவைப் புகட்டியதைவிட நல்ல மனிதனாக மாற்றியதில் லயோலாவின் பங்கு அதிகம்.

நான் சோர்ந்து போகும்போதெல்லாம் என்னை ரீசார்ஜ் செய்வது நாடகங்கள்தான். மேஜிக் லாண்டர், ஆங்கில நாடக இயக்குநர் ராஜீவ் சார் இயக்கிய நாடகங்கள் போன்றவற்றில் நடித்தது, ஒரு நடிகனால் அதிக பட்சமாகத் தாமுடிந்த கிரியேட்டிவிட்டியை வெளிக் கொணர்ந்தது. விஷுவல் மீடியாவில் எதிர்காலத்தில் நடிகனாக எவ்வளவுதான் சாதித்தாலும் என்னுடைய ஆணிவேர் நாடகங்கள்தான்.''

டி.வி டு சினிமா

''**வ**ண்டு, சிண்டு, நண்டு'' என்ற கேரக்டரில் விஜய் டீ.வி.யில் நான் செய்த 'கடவுள் பாதி, மிருகம் பாதி', படங்களை ஆரோக்கியமாக விமர்சிக்கும் நிகழ்ச்சி. 'படங்களை விமர்சிக்கும் நான் எப்படி சினிமாவில் நடிக்கலாம் என்று பலர் கேட்கிறார்கள். அந்த நிகழ்ச்சியில் நான் நடிகன் மட்டுமே. உண்மையில் 'கடவுள் பாதி மிருகம் பாதி' நிகழ்ச்சிக்குக் கிடைத்த ரெஸ்பான்ஸுக்குப் பிறகுதான் எனக்கு நிறைய சினிமா வாய்ப்புகள் வந்தன.

சொசைட்டியில நடக்கும் விஷயங்களைப் பத்தி கருத்து சொல்ல நான் மிகப்பெரிய கலைஞன் இல்லை. ஆனா, என்னுடைய பாணியில் கமெண்ட் அடிக்கும்போது, ஒரு பத்து பேரையாவது அந்த பிரச்னையைப் பார்க்க வைக்க முடியும். காமெடி மூலமாக சின்னதா நல்லது செய்த திருப்தி.

நான் அடுத்த வடிவேலுவோ விவேக்கோ கிடையாது. காமெடியில் யாரும் யாருக்கு அடுத்தும் வர முடியாது. ஜெகனுக்குன்னு சில ப்ளஸ், மைனஸ் இருக்குது. இதைப் புரிஞ்சு முயற்சி செய்தா வெற்றி கிடைக்கும்.''

- ராகவ்குமார்



தீராத விளையாட்டு விட்டலன்

அருண் சரண்யா



''பாண்டுரங்கா, என் மகனுக்குத் திருமண ஏற்பாடு செய்யக்கூடாதா?'' என்று குறைபட்டுக் கொண்டாள் குணாபாய். (ஏதோ பாண்டுரங்கனின் சிலையைப் பார்த்து அவள் முறையிட்டதாக எண்ண வேண்டாம். நாமதேவரிடம் மட்டுமின்றி தனது பக்தையான அவரது தாயிடமும் பாண்டுரங்கன் நேரடியாகவே பேசியிருப்பதாக நாமதேவர் தம் அபங்கத்தில் குறிப்பிடுகிறார்.)


''அவ்வளவுதானே'' என்று தானே ஏற்பாடு செய்தான் பாண்டுரங்கன். அந்தத் திருமணத்தைக் காண கந்தர்வர்களும் தேவர்களும் கூட வந்திருந்தனர்.

எண்ணி எண்ணிப் பெருமைப்படக் கூடிய பாண்டுரங்க பொக்கிஷம் நாமதேவருக்குக் கிடைத்தாலும், அவர் வீட்டின் பொருளாதாரம் மந்தநிலையில் தான் இருந்தது.

நாமதேவரின் மனைவி ராதாபாய்க்கு பணக்காரத் தோழி ஒருத்தி இருந்தாள். தன்னிடம் ஒரு ரசவாதக் கல் இருப்பதாகவும், அதைக் கொண்டு எந்தப்



தொட்டதெல்லாம் தங்கம்



பாத்திரத்தைத் தொட்டாலும் அது தங்கமாக மாறிவிடும் என்றும் பெருமையடித்துக்கொண்டாள். அந்தக் கல்லை தனக்குக் கடன் கொடுக்கும்படி ராதாபாய் வேண்டிக் கொள்ள, 'ஒரே ஒருநாள் மட்டும்' என்ற நிபந்தனையுடன் அந்தச் சிறப்புக் கல்லை அளித்தாள் பணக்காரி.

ரசவாதக் கல்லை வீட்டுக்கு எடுத்து வந்த அடுத்த நிமிடமே தன் வீட்டிலுள்ள சில பாத்திரங்களை ராதாபாய் அந்தக் கல்லினால் தொட, அவை தங்கப் பாத்திரங்களாக மாறின. விவரம் அறிந்த நாமதேவர் வெகுவேகமாக அந்த ரசவாதக் கல்லை எடுத்துக்கொண்டு வெளியேறினார். பின்னாலேயே பதற்றத்துடன் விரைந்தாள் மனைவி (கடன் வாங்கிய கல்லாயிற்றே). சந்திரபாகா நதிக்கரையை அடைந்த நாமதேவர் அந்தக் கல்லை நதிக்குள் வீசினார்.

அடுத்த நாள் கல்லைக் கடன் கொடுத்தவளின் கணவன் நாமதேவரிடம் வந்தான். 'உடனடியாக என் கல்லைத் திருப்பிக் கொடு' என்று முழக்கமிட்டான். அவனை அழைத்துக்கொண்டு சந்திரபாகா நதிக்கரைக்குச் சென்றார் நாமதேவர். அங்கிருந்து ஒருபிடி மணலை எடுத்துக் கொடுத்தார். அந்த மணலே தங்கத் துகளாக மாறிவிட்டிருந்தது. 'கல்தான் வேண்டுமென்று கேட்பானோ?' என்று நாமதேவர் சந்தேகப்பட, வந்தவன் சாஷ்டாங்கமாக நாமதேவரின் கால்களில் விழுந்துவிட்டிருந்தான்.

வீட்டில் ஏழைமை தொடர்ந்தது. நாமதேவர் விட்டல பக்தியில் திளைத்திருக்க, ராதாபாய், ''இந்தத் துன்பத்துக்குக் காரணம் என் கணவர் வீட்டைக் கவனிக்காமல் இருப்பதுதான். அவர் வீட்டைக் கவனிக்காததற்குக் காரணம் விட்டலன். எனவே விட்டலா, எங்கள் குடும்பத்தின் வறுமையைப் போக்குவது உன் கடமை'' என வருத்தத்தோடு பிரார்த்தித்தாள்.

அடுத்த கணமே பாண்டுரங்கன் ஒரு வணிகன் போல் வேடம் தாங்கினான். தன் வாகனமான கருடனை எருதாக்கினான். அந்த எருதின் மீது பொற்காசுகள் அடங்கிய மூட்டை ஒன்றை வைத்தபடி நாமதேவர் வீட்டை அடைந்தான். ராதாபாய் வெளியே வந்து விவரம் கேட்டாள்.

''அம்மா, என் பெயர் கேசவசெட்டி. நாமதேவர் குறித்து வருந்தாதே. பாண்டுரங்கன் இந்தப் பொன்மூட்டையை உங்களுக்குக் கொடுக்கச் சொல்லியிருக்கிறான்'' என்றபடி அந்த மூட்டையை இறக்கி வைத்துவிட்டு வேகமாக வெளியேறினான்.

இது எதையும் அறியாமல் நாமதேவரின் தாய் குணாபாய் விட்டலனின் ஆலயத்தை அடைந்தாள். உள்ளே விட்டல தரிசன அமுதத்தைப் பருகியவாறு நாமதேவர் மயங்கி இருக்க, குணாபாய், பாண்டுரங்கனை சரமாரியாக நிந்திக்கத் தொடங்கினாள்.

''உன்னைக் கருணை மிகுந்தவன், தயாளன் என்று சாதுக்கள் பாராட்டுகிறார்கள். ஆனால் எங்களுக்கு நீ துன்பத்தைத்தான் தந்திருக்கிறாய். எனது பிள்ளைக்கு எங்களைவிட உன்னிடம்தான் விருப்பம் என்றாக்கிவிட்டாய். இது முறையா? எங்கள் வீட்டின் அவல நிலைக்கு நீதான்



"உண்மையில் நாமதேவன் உன் மகனல்ல. என் மகன்தான். உங்களோடு அவனுக்குள்ள தொடர்பு நிலையற்றது."

காரணம்.''

இப்படி அவள் வசைபாட, ''கோபம் கொள்ளாதே. நாமதேவனுக்கு நீதான் வேண்டுமென்றால் தாராளமாக அழைத்துக் கொண்டு போ. உண்மையில் நாமதேவன் உன் மகனல்ல. என் மகன்தான். உங்களோடு அவனுக்கு உள்ள தொடர்பு நிலையற்றது'' என்ற விட்டலன், தன் சன்னிதியில் தன்னிலையின்றிக் கிடந்த நாமதேவனை எழுப்பி குணா பாயின் கையில் ஒப்படைத்தான். இயந்திரம் போல வீடு வந்து சேர்ந்தார் நாமதேவர். கமகமவென்று உணவு வாசனை அவர் மூக்கை எட்டியது. குணாபாய் தன் மருமகளிடம் விவரம் கேட்க, அவள் வீட்டுக்கு வந்து பொன் மூட்டை அளித்த கேசவசெட்டியைப் பற்றி கூறினாள். குணாபாய் தான் முறையிடுவதற்கு முன்பாகவே பாண்டுரங்கன் இந்த உதவியைப் புரிந்திருக்கிறான் என்பதை உணர்ந்ததும் உருகினாள். நடந்ததை அறிந்த நாமதேவர் விட்டல பக்தியை மேலும் அதிகரித்துக் கொண்டார். தம் வாழ்நாள் முழுவதும் வீட்டுக்கு வரும் ஏழை மக்களுக்கு அன்ன தானம் அளித்தார்.

ஞானேஸ்வரரும் நாமதேவரும் சமகாலத்தில் வாழ்ந்தவர்கள். விட்டலபக்தியில் ஒருவருக்கொருவர் சளைத்தவர்கள் அல்ல. ஒருநாள் ஞானேஸ்வரர் நாமதேவரிடம், 'வா, நாம் வடதிசை சென்று பாண்டுரங்க பக்தி மார்க்கத்தைப் பரப்புவோம்' என்றார். நாமதேவருக்கு இந்த நோக்கம் மிகவும் விருப்பமாக இருந்தது. ஆனால் பண்டரிபுரத்தை விட்டு விலக அவர் மனம் ஒப்பவில்லை. நேரே விட்டலனின் சன்னிதியை அடைந்தார். 'பாண்டுரங்கா, நான் பண்டரிபுரத்தை விட்டுப் பிரிந்து செல்வது உனக்குச் சம்மதமா?' என்று கேட்டார். வேண்டாம் போகாதே எனும் பதிலை அவர் எதிர்பார்த்திருக்க, 'தாராளமாகச் சென்று வா' என்றான் விட்டலன். நாமதேவரின் பெருமை நாடெங்கும் அறியப்படவேண்டும் என்று பாண்டுரங்கனே ஆசைப்பட்டான்!

> **அபங்க அமுதம் - 9**
>
> 'ஜீவ தூ ப்ராண தூ
> ஆஹா தூ கா விட்டலா
> ஜனக தூ ஜனனீ தூ
> ஸோயரா தூ கா விட்டலா
> மாஜா குரு தூ குருமந்த்ரா தூ
> ஸர்வஸ்வ தூ மாஜே ம்ஹணே நாமா'
>
> **- பக்த நாமதேவர்**
>
> ''விட்டலா, நீயே எனது ஜீவன். நீயே எனது தந்தை. நீயே எனது தாய். நீயே என் உறவு. நீ என் குரு. அந்த குரு உபதேசித்த மந்திரமும் நீதான். எனக்கு எல்லாம் நீயே.''



படம் : **ஸ்ரீஹரி**
சித்திரம் : **வேதா**



துப்பாக்கிகளின் தாய்மொழி



துப்பாக்கியைக் கையில் வைத்திருக்கிறவன்
சொல்லிக் கொண்டிருக்கிறான்
சமாதானம் தன் தாய்மொழியென்று.

அவன் வார்த்தைகளுக்குள்ளே
மறைவிடங்கள் வைத்திருப்பான் போலும்.
கண்ணாடிகளிடம்
ஒப்பனைக்கு மீறிய அழகுகளை
எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறான்.

துப்பாக்கிகளுக்கு தேசம் கிடையாது.
மதம் சாதி கிடையாது
இனம் மொழி கிடையாது
அதன் இலக்கு துடிதுடித்து
இரத்தம் கசியும் மரணம் மட்டுமே.

நதியிடம் பேசுவதற்கு
இசங்கள் தேவையில்லை.

குழந்தையின் புன்னகையைப்
புரிந்துகொள்ள
உலகமயமாக்கல் தேவையில்லை.
பெண்ணின் காதலைப்
புரிய கடவுள் தேவையில்லை.

அமைதியின் குடிசைக்குச் செல்ல
துப்பாக்கியின் பாதைகள் தேவையில்லை.

கோசின்ரா

மேஷம் : செலவுகள் அதிகரிக்கும். வியாபாரத்தில் விறுவிறுப்பான போக்கு காணப்படும். தேர்வில் அதிக மதிப்பெண்கள் கிட்டும். இல்லற வாழ்வு நன்றாக இருக்கும். நீண்ட காலம் முடிவு பெறாத பிரச்னைகள் முடிவுக்கு வரும். சிலருக்கு வீடு மாற்றம் உண்டாகும்.

ரிஷபம் : உல்லாசமான பிரயாணம் செல்வீர்கள். தெய்விகப் பிரார்த்தனைகள் நிறைவேறும். சுபச்செலவு கைகூடும். விரும்பிய கல்வியைப் பயில்வீர்கள். முயற்சிக்கும் காரியம் வெற்றி அளிக்கும். பணப் பிரச்னை இருக்கும். வெளிநாடு செல்லும் யோகம் கிட்டும். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும்.

மிதுனம் : மன அமைதி ஏற்படும். கூடிய மட்டும் குடும்ப வாழ்வில் அனுசரணை தேவை. கடன் பிரச்னைகள் தீரும். உடல் ஆரோக்கியம் பூரண குணமாகும். கொடுக்கல் வாங்கலில் உஷார். யாருக்கும் ஜாமீன் போட வேண்டாம்.

கடகம் : ஏழரைச் சனி முடிவடையும் காலம். முயற்சிக்கும் காரியம் எதிலும் வெற்றி கிட்டும். பணவசதி பெருகும். ஆசைப்பட்டது எதுவும் கிட்டும். திருமணக் காரியம் முடிவாகும். உடல் நிலையில் முன்னேற்றம் ஏற்படும். நீண்ட கால வழக்கு வெற்றி அளிக்கும்.

சிம்மம் : வீண் செலவு அதிகரிக்கும். கூட்டாளிகளால் மன அமைதி இருக்காது. தோல்வி பயம் மன உளைச்சலை அதிகரிக்கும். எதிர்ப்புகள் நிறைந்து இருக்கும். பணத் தேவை அதிகரிக்கும். கடன் நிலுவைகள் வர தாமதமாகும். திருமண முயற்சி பலன் அளிக்கும்.

கன்னி : உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும். கடன் சுமை ஏற்படும். கொடுக்கல் வாங்கலில் எச்சரிக்கை தேவை. சுபகாரியப் பிரார்த்தனை நிறைவேறும். இடமாற்றம் ஏற்படும். எதிர்ப்புகள் அதிகரிக்கும். பூர்வீகச் சொத்து பாகப்பிரிவினை ஆகும். நண்பர்கள் இடம் மாறிப் போவார்கள்.

துலாம் : வேலையில் இடமாற்றம் ஏற்படும். சிலருக்கு வீடு மாற்றம் / தொழில் மாற்றம் செய்ய வேண்டி இருக்கும். இல்லற வாழ்வு நன்றாக இருக்கும். புதிய தொழில் முயற்சி பலன் அளிக்கும். செலவுகள் கட்டுக்குள் இருக்கும். பூர்வீகச் சொத்து வந்து சேரும். குழந்தைகள் பற்றின

நடக்குமென்பார்;

மனக்கவலை தீரும்.

விருச்சிகம் : நீண்ட தூரப் பிரயாணம் வந்து சேரும். பணக் கஷ்டம் இருக்காது. புதிய வீடு / மனை வாங்க நல்ல தருணம். செலவுகள் சுபமானதாக இருக்கும். கணவன் - மனைவி உறவு நன்றாக இருக்கும். உடல் நிலை பாதிக்காது. தெய்வ தரிசனம் கிட்டும். புண்ணிய ஸ்தலம் செல்வீர்கள். கடன் சுமை நீங்கும்.

தனுசு : பணவசதி பெருகும். திடீர்ப் பிரயாணம் செல்ல வேண்டி இருக்கும். உற்றார் உறவினர்கள் மூலம் அனுகூலம் ஏற்படும். செலவுகள் சுபமானதாக இருக்கும். கணவன் - மனைவிக்குள் விட்டுக் கொடுத்துப் போவது நற்பலனை அளிக்கும். யாரிடமும் வாக்குவாதம் தவிர்க்கவும். கொடுக்கல் வாங்கலில் கவனம் தேவை.

மகரம் : மன அமைதி ஏற்படும். முயற்சிக்கும் காரியம் பலிதமாகும். மன சஞ்சலம் தீரும். திருமணத் தடை விலகும். செலவுகள் கட்டுக்குள் இருக்கும். உடல் ஆரோக்கியம் சீராகும். பொருளாதாரக் கஷ்டம் விலகும். நீண்ட கால வழக்கு முடிவுக்கு வரும். வரவேண்டிய நிலுவைகள் வந்து சேரும்.

நடக்கும்!

கும்பம் : நல்ல காரியம் கை கூடி வரும். மன சஞ்சலம் தீரும். வியாபாரத்தில் நல்ல வருவாய் கிட்டும். நினைக்கும் காரியம் கை கூடும். கல்வி வளம் மேலோங்கும். தேர்வில் அதிக மதிப்பெண்கள் கிட்டும். செலவுகள் சுபமானதாக இருக்கும். வேலையில் நற்பெயர் உண்டாகும். கணவன் / மனைவி உறவு நன்றாக இருக்கும்.

மீனம் : பூர்வீகச் சொத்துகள் வந்து சேரும். வீடு மாற்றம் ஏற்படும். குழந்தைகள் மூலம் சுபச்செலவு உண்டாகும். குழந்தைகள் இடம்மாறிப் போவார்கள். மன பயம் விலகும். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். வழக்கு வெற்றி பெறும். வீடு / மனை வாங்க உகந்த காலம். வேலையில் உயர்வு ஏற்படும். பணக் கஷ்டம் இருக்காது.

காலேஜ் அட்மிஷன் கிடைச்சாச்சு. அடுத்து காதலி கிடைப்பாளா?



ப்ளாக் அண்ட் வொய்ட் கதைகள்-9



பட்டைத் தகடு அடித்த சுண்ணாம்பு வெண்மையில் மினுங்கியது அன்னசாகரத்து ஏரி. இரண்டு யானைகள் இணையாய்ச் செல்லும் அகலத்துக்கு கரை மேல் மண் தடம். ஆயிரம் பனை அகலத்துக்குப் பயிர் வளர்க்கிற தண்ணீர் வளம் கொண்டது சாகரத்து ஏரி. மண் தடத்தில் வேட்டை நாய் பிடித்தபடி, மண் அதிர நடந்து வந்தான் நெலிகத்தான்.

நெட்டைக் கரும் பூதங்களாய் ஏரிக்கரை பனைமரங்கள். பனைமரத்துக்குப் பக்கமிருந்த பாறை மீது உட்கார்ந்தான் நெலிகத்தான். இடமிருந்து வலமாய் ஓடிய பெண் கவுதாரியின் ஓட்டத்துக்காக வேட்டை நாய் சீற்றத்தோடு குரைத்தது.

ஈச்சமரப் புதருக்குள் ஓசை கேட்டதும் வேட்டை நாயை உய்யென்று அடக்கினான். ஓசை வந்த திக்கை உற்றுப் பார்த்தான். முடுக்கென்று தன் இடுப்பில் இருந்த குறுவாள் எடுத்து புதருக்குள் வீசினான். ஒரு முயல் வயிறு கிழிந்து உயிர் விட்டது. புதருக்குள் ஓடி, முயலோடு திரும்பியது வேட்டை நாய்!

குடையப்பட்ட கருங்கல் சிற்பத்தின் அழகோடு குமரிகள் எழுவர் மண்தடத்தில் வருவதைப் பார்த்தான் நெலிகத்தான். குமரிகளின் சிரிப்பில் எண்பது உயிர்கள்.

மண் சட்டி, தாழை மொக்கு, ஈச்சங் கூடையில் பச்சைக் கீரை, தாமிரச் செம்பில் செம்மறிப் பால் என்று குமரிகள் கொண்டு செல்வதை உற்று நோக்கி அறிந்தான் அவன். செத்த முயலின் கால் பிடித்துத் தூக்கி, குமரிகளைக் கும்பிட்டான். "முயல் வேண்டுமா பெண்களே! வரகுச் சோறு தருகிற பெண்ணுக்குக் கறி முயலையும், வேட்டை நாயையும் தருவேன். அறுத்துக் குழம்பு வைத்தால் கறிமணம் கோட்டை வரை வீசும்!"

முகம் தெரியாத அசலூரான் நெலிகத்தான். அவனைக் குறும்போடு பார்த்தார்கள் குமரிகள். "வேட்டை நாயைக் குழம்பு வைத்து உண்கிற பழக்கம் எங்களுக்கு இல்லை! ஆமாம், செத்த முயல் என்ன உன் சிற்றப்பனா? காலைத் தொட்டுக் கும்பிடுகிறாயே!" சொல்லிய குமரிகள்



மதகு முனி!

எழில்வரதன்

கொப்பளித்துச் சிரித்தார்கள்.

உரசிச் சென்றால் சிரசை வெட்டுகிற சீற்றம் கொண்டவன் நெலிகத்தான். குலுங்கிச் சிரித்தபடி சென்ற குமரிகள் மீது வேட்டை நாயை ஏவிவிட்டான். கெண்டைக் காலை கடிக்கிற உக்கிரத்தோடு ஓடிய வேட்டை நாய் அவர்களின் காலடியில் சறுக்கி விழுந்து தூசு பறக்கத் திரும்பி வந்தது. குமரி ஒருத்தி, மண் சட்டியில் நெருப்பு வைத்திருந்தாள். கொல்லி விறகு காட்டியதும் அச்சத்தில் சறுக்கி, வால் நடுங்கத் திரும்பியது நாய்.

''விடு உடும்பா! யாரோ மூட்டிய நெருப்பை, கடனுக்கு வாங்கிச் செல்கிற குமரிகள் மீது நமக்கெதற்குக் கோபம்? மூங்கிலை உரசி நெருப்பை வரவைக்கிற வித்தை கற்றுத் தருகிறேன் உனக்கு.'' நாயோடு பேசியபடி பாறையில் உட்கார்ந்தான். ''சாகக் கிடக்கிறேன் திம்மி! சட்டென்று வாயேன்!'' வாயோடு பேசினான். திம்மி என்ற குமரியை ஏழு பவுர்ணமியே, இரண்டு நட்சத்திர காலமாய் அறிவான் நெலிகத் தான். அவளைப் பார்த்துப் பேசுகிற நோக்கத்தில்தான் வந்திருந்தான் நெலிகத்தான்.

அவரைப் புதர் வாசமும், கல்லுருண்டை தேகமும், ஈச்சங் கள் போதையும் கொண்டவள் திம்மி. நெய் பூசி கொண்டையிட்டு, அகல் விளக்கு மை எடுத்து கண்ணுக்கு எழுதினாள். பாம்பு உரித்த சட்டை போன்ற சருகு உடை உடுத்தினாள். தாழம்பூ தலையில் வைத்து, எருதின் கொம்பில் செய்த கொண்டை ஊசி செருகிக் கொண்டாள். திம்மி செய்கிற அலங்காரத்தை மறைவில் நின்று பார்த்தாள் திம்மியின் தாய்.

அசலூரான் ஒருத்தனோடு உன் மகள் சிரிக்கப் பேசுகிறாள் என்று அண்டை அசலில் சொன்னது திம்மியின் தாய்க்குத்



தெரியும். வடக்கு நோக்கிப் பதுங்கி நடந்த மகளிடம் தாய் கேட்டாள் : ''எங்கே போகிறாய் திம்மி?''

தாழம்பூ பறிக்கப் போகிறேன் என்று பொய் எழுத்து சொல்லி நெலிகத்தானைப் பார்க்க வந்தாள். ''பனை நட்டிருந்தால் முற்றி பூ விட்டிருக்கும். ஏன் இத்தனை நேரம்?'' திம்மியைக் கண்ட சந்தோஷத்தில் கூவினான் நெலிகத்தான்.

எல்லைப் பிடாரி கோயில், ஊணான் புதருக்குள் மறைந்து கிடந்தது. பூசை காணாத கோயில். அதைச் சுற்றி குத்துக் குத்தாய் நடுகற்கள். ''நடுகல் எல்லாம் யாருக்கானது?'' நெலிகத்தான் கேட்டான். திம்மி சொடக்கென்று கண்ணீர் சொட்ட ஆரம்பித்தாள்.

''தனக்குத்தானே சிரம் அறுத்துப் பலியுண்டவர்களின் நடுகல். இதில் என் தந்தைக்கும் ஒன்று உண்டு'' திம்மி சொல்ல, திகைத்தான் நெலிகத்தான். ''என்ன கூகைத்தனம் இது?''

''கூகைத்தனம் அல்ல. தியாகம். என் தந்தை யாமள சாஸ்திரம் தெரிந்த மந்திர சாதகர். சாக்த வழிபாடு அறிந்தவர். ராசராச அதியமானுக்கு எதிராக ஒருமுறை போசள ராசன் படையெடுத்தான். நாடு சிறைப்பட்டால் மக்கள் மாண்டு போவார்கள். மன்னனுக்கு வெற்றி கிட்டவேண்டும் என்று தீயின் முன்னால் நின்று தன் சிரசைத் தானே அறுத்து சிரப்பலி கொடுத்தார் என் தந்தை. அவரோடு சேர்த்து மொத்தம் பதினாறு மக்கள்.'' திம்மி அழுதாள்.

''என்ன கொடுமை இது திம்மி? இதற்காகவா மக்கள் பிறந்தார்கள்? உள்ளாயம், நற்பசு, கொள்மாறு, குதிரைச் சாரிகை என்று எத்தனை வரிகள். அத்தனையும் கொடுத்து மன்னனைக் காப்பாற்ற போர் முனைக்கும் செல்ல வேண்டும். மன்னனைக் காக்கவா குடிமக்கள் இருக்கிறார்கள்?'' சீற்றத்தில் கூகை போல் அலறினான் நெலிகத்தான்.

''வீரனின் தியாகம் உனக்குப் புரியாது. உன்னைப் பற்றி யோசி. மகுடி ஊதி குமரி மயக்குகிற பொம்மாரக் கூத்தனோடு ஒருத்தி வாழலாமா என்று ஊர் சொல்கிறது. நீ பாணன் குலமா, வீரன் குலமா தெரியாது. ஆனால் வயிற்றுக்காக வாய் அடிப்பவன்!''

''பொறு திம்மி! தன் உயிரைத் தானே எடுக்கவும் ஒருத்தனுக்கு உரிமை கிடையாது. பெண்ணும், ஆணும் சேர்ந்தது தனி உலகம். அங்கே கடவுளோ, மன்னனோ, மக்களோ கிடையாது. உனக்கும் எனக்கும் நடுவில் வாழ்வைத் தவிர ஒன்றுமில்லை. நாம் கூடி வாழ வேண்டும் என்று நம்பி வந்தேன் திம்மி! அற்பத்திலும் அற்பமாய் என்னை நினைத்தாய் நீ!'' நெலிகத்தான் கண்ணீர் விட்டான்.

திம்மி பரிவாய் அவனைப் பார்த்தாள். ''ஊரானே! எனக்காகச் சொட்டுகிற கண்ணீரைக் கண்டால் பெருமையாக இருக்கிறது எனக்கு. நான் உனக்கானவள் ஊரானே! நீ நின்று கைகாட்டும் இடத்தில் நான் அடுப்பு வைத்து நெருப்பு மூட்டுவேன். அழாதே! என் தாய் தேடுவாள். வா போவோம்!''

ஒன்பது நாட்கள் ஓயாது சூறைக் காற்றும், வெடி மின்னலுமாய் அடித்துப் பெய்தது மழை. நெலிகத்தான் சேறு தெறிக்க ஏரிக்கரை மண் தடத்தில் நடந்து வந்தான். வருகிறேன் என்று சொன்ன திம்மி வரவேயில்லை. ஏமாற்றுக்காரி. பட்டப்பகலில் சூரியனும் இல்லை, கொட்டும் மழையில் ஒரு உயிரும் வெளியே



காதல் கவிதை

விழுந்த வேகத்தில்
சிதறப் போவதாய்ப்
பயத்தில் வீழ்ந்த
மழைத்துளி...
திகைத்துப் போனது
பூவின் இதழொன்று
தாங்கிப் பிடிக்கையில்!

பொதக்குடி 'வெற்றிமுரசு'

இல்லை. திம்மியை எப்படிப் பார்ப்பது என்று தெரியாமல் திகைத்து நின்றான் நெலிகத்தான்.

மண் தடத்தில் கத்தியபடி ஒரு கூட்டம் ஓடி வந்தது: ''அய்யோ தெய்வமே... இந்த ஊர் அழியப் போகிறது. ஏரிக்கரை உடைந்து ஊரே பிணக்காடாய் மாறப் போகிறது!''

ஒருத்தனைப் பிடித்த நெலிகத்தான், ''யானை போகிற அகலப் பாதை கொண்டது ஏரிக்கரை. இது எப்படி உடையும்?''

''தெற்குக் கரை சேதாரமாகி நீர் கசிகிறது இவனே! அங்கே பார். குதிரை மலையிலும், எத்ரா மலையிலும் ஓயாத மழை! ஜாலாற்றில் காட்டுத் தண்ணீர் கட்டுக் கடங்காமல் வருகிறது. ஒரு சாமத்துக்குள் தெற்குக் கரை உடையும்.''

''அப்படியென்றால் மதகைத் திறப்பதுதானே!''

''திறந்தோமே! மலைப்பாம்பு ஒன்று மதகுக் கண்ணை அடைத்துக்கொண்டிருக்கிறது. ஒரு சாமத்தில் ஊர் அழிவது நிச்சயம்!'' சேற்றில் சறுக்கி விழுந்தபடி ஊர் நோக்கி ஓடியது கூட்டம்.

கூட்டத்தில் திம்மி இருக்கிறாளா என்று நெலிகத்தான் பார்த்தான். அச்சத்தோடு அவள் தண்ணீர் பார்த்தபடி நின்றாள்.

நெலிகத்தான் அங்கிருந்த கூட்டத்தைப் பார்த்து கூவினான். ''மக்களே, கேளுங்கள்! நான் மதகில் சிக்கிய மலைப்பாம்பை வெட்டி எறிந்து மதகுக் கண் திறக்கிறேன். அதற்கு ஒரு கூலி வேண்டும் எனக்கு!''

''என்ன வேண்டும் கேள்?'' கூட்டம் மொத்தமும் கத்தியது.

''வெட்டுப்பட்ட பாம்பின் ரத்தம் மதகுக் கண் வழியாய்ச் சென்று பாய்கிற கழனியெல்லாம் எனக்குச் சொந்தம். இதைச் சரியென்பீர்களா?'' கூட்டம் திகைத்து நின்றது. கரை உடைந்தால் ஏழு காத தூரத்துக்குத் தண்ணீர் வந்து ஊர் அழியும். ஒரு உயிர் தப்பாது. வேறு வழியில்லை. அப்படியே ஆகட்டும் என்று கூட்டம் ஒப்புக் கொண்டது.

அடுத்து நெலிகத்தான் உரக்கப் பேசினான். ''இன்னொரு கூலியும் வேண்டும் மக்களே! இதோ இந்த வானத்து இடி மின்னல் சாட்சியாக இந்த திம்மியை என் மனைவி என்று நீங்கள் ஒப்புக் கொடுக்க வேண்டும். கொடுப்பீர்களா?''

கூட்டம் அமைதியாய் நின்றது. அப்பொழுது வானம் இடித்து ஒரு பனைமரத்தின் உச்சியில் விழுந்தது. பச்சைப் பனைமரம் பற்றி எரிவதைக் கண்ட பெண்கள் கூவென்று கத்த ஆரம்பித்தார்கள். பிள்ளைகள் கூக்குரல். இடிச் சத்த வெருட்டல். ''ஓ ஊரானே! உன் விருப்பப்படியே இடி மின்னல் சாட்சியாக திம்மி உன் மனைவி. ஒப்புக் கொள்கிறோம்! மதகைத் திற!'' கத்தியது கூட்டம்.

நெலிகத்தான் வேட்டை நாயை பனை மரத்தில் கட்டினான். ஈரத்தில் சுழன்ற கூந்தலைக் கொண்டை போட்டான். வாள் எடுத்து வாயில் கவ்விக் கொண்டு இடுப்பு

உடையை இறுக்கிக் கட்டினான். மதகு மேட்டில் நின்று ஏரியைப் பார்த்தான். கறுப்புத் தண்ணீர் பூதம் குப்புறப்படுத்திருந்தது.

''மகனே. வேணாம் மகனே. ஏரிக்குள் மதகு முனி இருக்கிறது. அது ரத்த வெறி கொண்டது. உன்னைக் கொன்று தின்றுவிடும்!'' ஒரு கிழவி நெலிகத்தானைக் கண்ணீரோடு தடுத்தாள். நெலிகத்தான் சிரிப்போடு திம்மியைப் பார்த்தான். கழுத்தில் தொங்கிய கல்மணியை அவளிடம் கொடுத்து, ''இன்றிலிருந்து நீ என் மனைவி. மலைப் பாம்பைத் துண்டாக்கி, ஊர் காப்பாற்றி வருகிறேன். நம் அடுப்பின் நெருப்பு நாளைக்கே எரியும்!'' சொல்லிவிட்டு ஏரி நீருக்குள் பறவை போலப் பாய்ந்தான்.



ஏரித் தண்ணீர் கொக்கரித்துத் தழும்பியது. மூழ்கிய நெலிகத்தான் மூழ்கியே போனான். திம்மி கண்ணீரோடு நீர்ப்பரப்பைப் பார்த்து நின்றாள். பனைமரம் பருமனுக்கு மலைப்பாம்பு ஒன்று முறுக்கியபடி தண்ணீருக்கு மேலே வருவதைக் கண்ட கூட்டம் ஓவென்று கத்தியது.

''மதகுக் கண்ணில் தண்ணீர் வருகிறது!'' ஒரு பெண் ஓவென்று கூவினாள். ஏழு காட்டாறு பருமனுக்கு மதகுக் கண்ணில் தண்ணீர் சீறிக்கொண்டு வந்தது. ரத்தச் சிவப்பாய், செங்குருதி காட்டாறு. தண்ணீருக்கு மேல் வந்த நெலிகத்தான், வாள் உயர்த்திக் காட்டி திசை அதிரச் சிரித்தான். திம்மி கண்ணீரோடு கத்தினாள்: ''ஊரான் மகனே! நீ சுத்த வீரன். நான் வீரன் மனைவி! கரையேறு மகனே! குதிரை கத்துகிறது. ஓடலாம்!''

அப்பொழுது அவள் கண் முன்பாகவே நெலிகத்தானைச் சுற்றி பெரிதாய் தண்ணீர்ச் சுழல் உருவாகி வாய் அகன்றது. சுழலின் மத்தியில் சிக்கிக்கொண்டான். அவனை உள்ளுக்குள் இழுத்துக் கொண்டது சுழல் வாய். அதன் பிறகு அவன் தண்ணீர்ப் பரப்புக்கு மேலும் வரவில்லை. மதகுக் கண்ணுக்கு வெளியேயும் வரவில்லை. மதகு முனி போல தண்ணீருக்குள்ளேயே அவன் காவல் தெய்வமாய் உட்கார்ந்து விட்டதாய் மக்கள் பேசிக் கொண்டார்கள்.

தகடூர் மாமன்னன் விடுகாதழகியனுக்குச் செய்தி போனது. ''ஆயிரம் பேரைக் காத்த மாவீரனுக்கு, 'மதகுப் பாட்டன்' என்று பட்டம் கொடுத்து, பாம்பின் ரத்தம் பாய்ந்த கழனி எல்லாம் அவன் சந்ததிக்கே சொந்தம் என்று பட்டயம் எழுதித் தருகிறேன். வீராதி வீரனான அவனுக்கு நடுகல் நட்டு வையுங்கள். அவன் கதையை எழுத்தில் எழுதி வையுங்கள்'' என்று கட்டளையிட்டான் அதியன் மகன். ஆனால் அதியன் கட்டளை கேட்கிற காதோடு திம்மி இல்லை. வேட்டை நாய் பிடித்துத் தெற்கே போனவள் திரும்பி வரவேயில்லை.

எழுநூறு ஆண்டுகளுக்கு முன் இருந்த அதியன் கோட்டையும், மதகுப் பாட்டன் நடுகல்லும் இன்று கண்ணுக்குத் தெரியாது, மண்ணுக்குள் மறைந்தே இருக்கிறது. வேட்டை நாயின் குரைப்பொலியும், மதகுப் பாட்டன் கனைப்போசையும், திம்மியின் சிரிப்போசையும் மழைக்காலத்தில் இன்றும் கேட்பதாய்ச் சிலர் சொல்வதுண்டு. மதகுப் பாட்டன் கதை போலவே அது அறிந்தும் அறியாத ரகசியப் புதிராய் இருக்கிறது. ●

உயிர் காக்க உதவுங்கள்!



மிகவும் எளிய குடும்பத்தைச் சேர்ந்த எனக்கு இறைவன் பெரிய சோதனையை கொடுத்துவிட்டான். எனக்கு இரண்டு பெண் குழந்தைகள் உள்ளனர். அவர்களுள் ஒரு வயதுடைய இளைய மகளான மீரா பர்ஹானா பிறவியிலேயே உட்செவி அமைப்பு இல்லாமல் பிறந்திருக்கிறாள். இதனால் காது கேட்க இயலாமல் போனது. இதன் காரணமாக பேசவும் முடியவில்லை. காது, மூக்கு, தொண்டை மருத்துவர் பத்மஸ்ரீ மோகன் காமேஷ்வரன் அவர்கள் என் மகளை பரிசோதித்து தலையில் காக்லியர் இம்பிளாண்டேஷன் அறுவை சிகிச்சை செய்தால் எல்லோரையும் போல கேட்கவும், பேசவும் முடியும் என கூறியுள்ளார். ஆஸ்திரேலியாவில் இருந்து தருவிக்கப்பட்டுத் தலையினுள் பொருத்த வேண்டிய உட்செவி கருவி மட்டுமே ரூ.**9,48,000/-** மதிப்பு வாய்ந்தது. அறுவை சிகிச்சை கட்டணம் உட்பட ரூ.**10,50,600** (ரூபாய் பத்து இலட்சத்து ஐம்பதாயிரத்து அறுநூறு) ஆகும் என மருத்துவமனையால் கணக்கிடப்பட்ட சான்றிதழ் வழங்கப் பட்டுள்ளது. எளிய வாழ்க்கை நடத்தி வரும் என்னால் இவ்வளவு பெருந்தொகை திரட்ட இயலவில்லை. ஆதலால் அறச்சிந்தை கொண்ட தங்களைப் போன்றோர்களின் நன்கொடைகளைக் கொண்டு இப்பெரிய செயலை செய்து முடிக்கத் துணிவு கொண்டிருக்கிறேன். தாங்கள் என் மகளின் எதிர்கால நல்வாழ்விற்கு உதவி புரிந்து வழங்கும் நன்கொடையை இறைவனின் கருணை மழையாக கருதுவேன். தாங்கள் வழங்கும் நன்கொடையை,

Madras ENT Research Foundation Charitable Trust

A/c.Meera Farhaana என்ற பெயரில் காசோலையாகவோ (செக்), வரைவோலையாகவோ (டி.டி) கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி உதவ வேண்டுகிறேன்.

Madras ENT Research Foundation (P) Ltd, Raja Annamalaipuram, Chennai - 600 028

- *M.சீனி அப்துல் ரகுமான்*



கடவுள் கேட்டுகிட்டே இருப்பார்

''ஊசி சாக்சு பல்கோ
அப்னே ஆஷ்மி
பல்கே ஆஸ்க்கோ ஜஹார்க்கி
ரஹே!
மேசே ரசே சாரே பா,
பல் துஜ்கிலோ ஆஜப்மே
ஜாச்சு அப்னே ஆஸ்பி கனே - ன்னு எங்கள் இனத்து கடவுள் வாழ்த்தைப் பாடி சாமி கும்பிட்டுத்தான் இந்த டிரெய்னிங் குக்கு வந்தோம்''ங்க என்று பொங்கி வழியும் உற்சாகத்தோடு பேசத் துவங்கினர் நரிக்குறவர்கள்.

பெண்கள் புடைவை யிலும் நைட்டியிலும் ஆண்கள் வேட்டி யிலும் மாறி இருந்தது ஆச்சரியமாக இருந் தது. ''அந்தப் பாட்டுக்கு என்னங்க அர்த் தம்?'' என்று கேட்டால், ''கடைசியா சொல்றோங்க'' என்றார் ஒருவர்.

''இனி 'பாசிமணி வாங்கலையோ'ன்னு கூட்டம் கூட்டமா கூவி விற்க மாட்டோம். ஃபேஷன் நகைங்க செய்யறதைப் பத்தி டிரெய்னிங் எடுக்கிறோம்'' என்கின்றனர் கோவையிலுள்ள ஆறுமுத்தாம்பாளையம் கிராமத்துக்கு வந்திருக்கும் நூற்றுக்கும் அதிகமான நரிக்குறவர்கள். ''இத்தனை பேரை ஒரே இடத்தில் சேர்ப்பதும் அவர்களுக்குப் புரியும்படி பயிற்சி அளிப்பதும் அவர்களின் உழைப் பாலேயே அவர்களின் வறுமையைத் துடைக்க வைத்து மற்றவர்களைப் போலவே மாற்றுவதும் 'வாழ்ந்து காட்டுவோம்' திட்டத்தின் ஸ்பெஷாலிட்டி'' என்கிறார் திட்ட மேலாளர் தேவகுமார்.

ஒரு நரிக்குறவப் பெண்மணியிடம் இது பற்றிப் பேசக் கூப்பிட்டதும் ''நால் டுல்ல ஊடுங்க்ரம் வகிதா நாக்டர் '' என்று தன் னோடு அமர்ந்து இருந்த கணவனிடம் சொல்ல, ''என்னப்பா சொல்றாங்க''ன்னு கேட்டால், ''போய்யா எனக்கு ரொம்ப வெக்கமா இருக்குன்னு சொல்றா சாமி'' என்றார்.

''ஒவ்வொரு கிராமத்திலும் நேரடியாகக் களப்பணியில் ஈடுபட்டு ஏழைகள் பலன் பெறும்படி இயங்கும் இத்திட்டம், உலக வங்கி உதவியோடு இந்தியாவிலேயே தமிழ்நாட்டுல மட்டும்தான் மிகச் சிறப்பா செயல்படுது. மாநில இயக்குனர் முருகானந் தம் ஐ.ஏ.எஸ். முயற்சியில் 1715 கிராமங்களில் இத் திட்டம் நுழைஞ்சிருக்கு. 1515 ஏழை இளைஞர்கள் பிரகாசமான வேலை வாய்ப்பைப் பெற்று முன்னுதாரணமா இருக் காங்க'' என்று திடமாகச்

> ''கடவுள்கிட்டே விசுவாசமா இருந்தா போதும். எல்லாத்தையும் அவர் பார்த்துப்பார்''





* சுந்தரேசன்



* தேவகுமார்



* முருகானந்தம்

சொன்னார் இணை திட்ட மேலாளர் சுந்தரேசன்.

''வேலை தரும் நிறுவனத்துக்கும் வேலை தேடும் இளைஞர்களுக்கும் நேரடித் தொடர்பு இந்தத் திட்டத்தில் உண்டு. இந்தக் காலத்துக்கு ஏத்த மாதிரி விதவிதமான வடிவங்களில் ஃபேஷன் நகைகள் செய்யும் பயிற்சி நரிக்குறவர்களுக்குக் கடினமில்லை. ஏன்னா இயல்பா அவங்களுக்கு அத்திறமை உண்டு. அதை வெளிப்படுத்த சரியான சந்தர்ப்பம் கொடுத்தா போதும். நரிக்குறவர்கள் சமூகத்தின் நெறிக்குறவர்களாக மாறிடுவாங்க'' என்றார்.

''கல்யாணச் செலவு, வரதட்சணை இதெல்லாம் இந்தச் சமூகத்துல ஆண்களோட செலவுதான். சென்னம்மா சாமி சிலையை வெள்ளியில செஞ்சு கும்பிடறதால யாரும் வெள்ளி நகை போட மாட்டோம். அந்தச் சாமிங்களுக்கு அடுத்து எம்.ஜி.ஆர்தான் எங்களுக்குத் தெரிஞ்ச சாமி''ன்னு டாகுமென்ட்ரி கணக்கா தகவல் தந்த நரிக்குறவரிடம் கேட்டோம், ''ஸார் அந்தக் கடவுள் வாழ்த்துக்கு என்ன அர்த்தம்?''

''நாம பேசற பேச்சு, செய்யற செயல் எல்லாத்திலேயும் நல்லது எது, கெட்டது எதுன்னு கடவுள் மேலேயும் கீழேயும் இருந்து கேட்டுக்கிட்டே இருக்கார். அவர்கிட்ட விசுவாசமா இருந்தா போதும். எல்லாத்தையும் அவரு பாத்துப்பார். கடவுளே நான் உங்கிட்ட நம்பிக்கையா இருக்கேன்னு அர்த்தம்'' என்றார். நாத்திகம் முளைக்காத நரிக்குறவர் மனமெல்லாம் அசாத்திய நம்பிக்கை விழுது விட்டிருந்தது. அவர்கள் வெற்றியைத் தொடும் தூரம் அருகிலேயே இருப்பதாகப் பட்டது.

செய்தி சித்திரம்:
ஆர்.பாலா

கிண்டல் காளி

வந்தோர்

முதல்வர் கலைஞர், மு.க.ஸ்டாலினுக்கு துணை முதல்வர் பதவி மற்றும் குடும்ப உறுப்பினர்களுக்கு, பதவிகளைப் பிரித்துக் கொடுத்துக் கொண்டிருக்க, குடும்ப உறுப்பினர்களோடு கூட இருந்தவர்களுக்கும் பதவி கொடுக்கிறார் என்று யாரோ புரளியைக் கிளப்ப, கோபாலபுரமே கூட்டத்தில் கும்மியடிக்கிறது.

கலைஞர்: இந்தாப்பா உதயநிதி... 2020ம் வருஷத்துலேர்ந்து அஞ்சு வருஷத்துக்கு தமிழ்நாட்டை நீ வெச்சுக்கோ.

கயல்விழி: தாத்தா எனக்கு எதுவுமில்லையா...?

கலைஞர்: இல்லாமலா? வெளிநாடு... உள்நாடு போக வர்றவங்களோட வாரியம் உனக்குத்தான்.

கனிமொழி: அப்பா... சங்கமம் மட்டும் போதாது. அதிகாரம் இருக்கிற பதவி ஏதாச்சும் கொடுங்க.

கலைஞர்: பதவி எதுவும் கைவசம் இல்லை. இனிமே புதுசா செஞ்சாத்தான் உண்டு. பதவிக்குப் பதிலா பட்டம் தர்றேன். 'பொற்றாமரைச் செல்வி', 'பூம்புனல்தாமரை' எது வேணுமோ எடுத்துக்கோ.

(அப்போது வாலி, வைரமுத்து ஆகியோர் ஆளுக்கொரு கவிதையோடு உள்ளே வருகிறார்கள்.)

வைரமுத்து: கலைஞனே நீ இளைஞனே. யுத்தம், சத்தம், முத்தம், ரத்தம் எல்லாம் நீ. பித்தம்... சுத்தம்...



கலைஞர்: போதும் வைரமுத்து... கொஞ்சம் வாலி வாசிக்கட்டும்.

வாலி: தமிழே... உன்னைச் சுமக்குது சக்கர வண்டி... நாங்கள் பிழைக்கிறோம் உன்னையே அண்டி.

கலைஞர்: வெரிகுட்... வெரிகுட்... பட்டம் தரட்டுமா வாலி...?

வாலி: வேணாம் தலைவா! வேணுங்கற அளவுக்கு இருக்குது.

கலைஞர்: அப்போ கடைத்தமிழ், இடைத்தமிழ், முத்தமிழ், முழுத் தமிழ் சங்கத்துக்கும்



வராதோர் வாரியம்!

– உத்தமபுத்திரன்

நீதான் நிரந்தரத் தலைவர். வைரமுத்து உனக்கென்ன வேண்டும்?

வைரமுத்து: வைரமுத்து முழு பாடல்கள் எழுதும் திரைப்படங்களுக்கு மட்டும் பத்து லட்சம் மானியம் என்று ஓர் அறிக்கை விடுங்கள் தலைவா! வாழும் என் வம்சம்.

தயாளு அம்மாள்: ஏங்க... எல்லோருக்கும் பதவி கொடுத்தீங்க... எங்க ரெண்டு பேருக்கும் என்ன கொடுத்தீங்க?

கலைஞர்: ஹா...ஹா... நாட்டை நான் ஆளுகிறேன். ஆளுகிற என்னையே ஆளுகிறவர்கள் நீங்கள் இருவரும் தானே... ஹா... ஹா...

ராஜாத்தி அம்மாள்: இப்படியே சொல்லிச் சொல்லியே சமாளிச்சிடுங்க.

கலைஞர்: அடுத்து யாரு...? என்ன வேணுமோ... கேளுங்க!

மு.க.முத்து: அப்பா... பாராளுமன்றத் தேர்தல்ல எனக்கு ஒரு தொகுதி கொடுங்க.

கலைஞர்: அதுக்கு அஞ்சு வருஷம் ஆகணுமே.

மு.க.முத்து: போன மாசம் அறிவிச்சாங்களே அந்தத் தேர்தல் முடிஞ்சு போச்சா... சொல்லவேயில்லை... சரி ஏதாச்சும் வாரியமாவது கொடுங்க.

கலைஞர்: வந்தோர்... வராதோர் வந்

தும் வராமல் போனோர் வாரியத்தை வெச்சுக்கோ.

மு.க.முத்து: ரொம்ப... ரொம்ப தேங்க்ஸ்...

கனிமொழி : அப்பா தமிழச்சி தங்கபாண்டியனை விட்டுட்டீங்களே... என்னோட பெஸ்ட் ஃபிரெண்ட், அவங்களுக்கு ஏதாச்சும்...

கலைஞர் : இந்தாம்மா... இந்த லிஸ்ட்டுல இருந்தா கொடு. *(அப்போது டி.ஆர்.பாலு 'தேமே' என்று உள்ளே வருகிறார்.)*



பாலு: (ஒப்பாரி பாடுகிறார்) கப்பலு வெச்சிருந்தேன் 'கப்'புன்னு கவுந்துருச்சு. சபாரி தைச்சிருந்தேன். 'டார்'னு கிழிஞ்சிடுச்சு. மத்தியிலும் போயிடுச்சு... மாநிலமும் போயிடுச்சு. ஒத்தையில நின்னுக்கிட்டு கடலையே வெறிக்கிறேனே.

கலைஞர்: இலங்கைத் தமிழர்களைக் காட்டிலும் உனக்காக நான் எவ்வளவோ போராடிப் பார்த்தேனே பாலு... முடியாமப் போயிடுச்சு. கவலைப்படாதே... அடுத்து ஸ்டாலின் பிரதமர் ஆயிட்டார்னா... பறக்கறது, தாவறது, தவ்வறது எல்லாத் துறையும் உனக்கே தரச் சொல்றேன்.

(அப்போது மு.க.அழகிரி உள்ளே வருகிறார்.)

அழகிரி: இங்க என்ன ஒரே கூட்டம்?

ஸ்டாலின்: அப்பா... எல்லாருக்கும் பதவி கொடுத்துட்டு இருக்கார்.

அழகிரி: அப்போ எனக்கு?

கலைஞர்: உனக்குத்தான் உரம், ரசாயன அமைச்சர் பதவி வாங்கிக் கொடுத்திருக்கேனே அப்புறம் என்ன?

அழகிரி: அது டெல்லியில... தமிழ் நாட்டுல எனக்கென்ன பதவி? அதைச் சொல்லுங்க...

கலைஞர்: தமிழ் நாட்டுலயும் உரம், ரசாயன அமைச்சர் பதவியை நீயே வெச்சுக்கோ போதுமா?

அழகிரி: இப்போதைக்குப் போதும். ஆனாலும் நான் கேட்ட பதவி எனக்குக் கிடைக்கலைங்கற வருத்தம் இருக்கு.

கலைஞர்: அப்படியா... என்ன பதவிப்பா அது?

அழகிரி: அமெரிக்க ஜனாதிபதி பதவி என்னாச்சு?

ஸ்டாலின்: (கலைஞர் காதில்) அப்பா... விஷயம் ரொம்பவே விபரீதமா போயிட்டு இருக்கு. உடனே கூட்டத்தைக் கலைங்க.

கலைஞர்: போகச் சொன்னா யாரும் அவ்வளவு சீக்கிரம் போக மாட்டாங்களே... சரி... இப்ப பாரு... இங்க பாருங்க... இலங்கைத் தமிழர் பிரச்னைக்காக... எப்ப வேணாலும் நாம ராஜினாமா செய்யலாம். அதனால எல்லாரும் ஒரு ராஜினாமா லெட்டர் எழுதிக் கொடுங்க...

(என்றதும் அனைவரும் பலமாகச் சிரித்தபடி இருக்க, ஷாக்காகிப் பார்க்கிறார் கலைஞர்)

நூல் அறிமுகம்

காமெடி எக்ஸ்பிரஸ்

மணக்கும் எறும்பு - இளங்கருவி அருள், அன்னை ராஜேஸ்வரி பதிப்பகம், 41, கல்யாண சுந்தரம் தெரு, பெரம்பூர், சென்னை - 11.

வாசிப்போரின் மனவெளியில் சிறு அசைவுகளைச் செய்ய விழையும் நாற்பது கவிதைகளின் தொகுப்பு. இயலாமை, இழப்பு, தவிப்பு போன்ற மென்சோக உணர்வுகளை வெளிப்படுத்தும் கவிதைகளின் இடையிடையே கீற்று போல் புன்னகை வெளிச்சமிடும் கவிதைகள் மணக்கின்றன, இவர் 'கவிதைகளைச் சுமந்து செல்லும் எறும்புகளைப்' போலவே.


திரைகடல் ஓடு, திரவியம் தேடு - இயகோகா சுப்பிரமணியம், குமரன் பதிப்பகம், 19, கண்ணதாசன் சாலை, தி.நகர், சென்னை-17. விலை ரூ. 100/-

புதிதாகத் தொழில் துவங்க விரும்புவோருக்கும், பன்னாட்டு நிறுவனங்களுடன் வணிகம் செய்ய முயல்வோருக்கும் பயனளிக்கும் நூல். அதற்கு வேண்டிய திறமைகளையும், செயல்பாட்டு முறைகளையும் எவ்வாறு வளர்த்துக் கொள்வது என விளக்குகிறது இந்நூல். வணிக, தொழில் துறையில் முதல் படியில் நிற்பவர்களுக்கு வழிகாட்டும் நூல்களில் இதுவும் ஒன்று.

சிரிப்பு வருது... சிரிப்பு வருது... உழைக்க உழைக்க சிரிப்பு வருது - கே. சத்தியநாராயணா, தமிழில்: அஞ்சனா தேவ், விகடன் பிரசுரம், 757, அண்ணா சாலை, சென்னை-02. விலை ரூ. 75.00


பணியிடங்களில் புதிய சவால்களை எதிர்கொள்ளும் இன்றைய காலகட்டத்தில், நகைச்சுவை நமது பணிகளுக்கு எவ்வளவு நன்மைகளைச் சேர்க்கிறது என விளக்கும் நூல். நூலில் எடுத்துக்காட்டியுள்ள மேற்கோள்களும் பல்வேறு அறிஞர்களின் பொன்மொழிகளும் சுவாரஸ்யமானவை. இந்த காமெடி எக்ஸ்பிரஸ் வெற்றிக்கு இட்டுச் செல்லும் ஒரு ஜாலி எக்ஸ்பிரஸ்தான்.







- நேயமுகில்



மாறிப்


போய்விட்டு வந்த அன்று மனது மிகவும் கனத்துப் போனது. ஏன் போனோம் என்று ஆகிப்போனது.

எதையெல்லாம் நினைத்துக் கொண்டு போய் வருவதைத் தவிர்த்திருந்தேனோ ,அவையெல்லாமும் அழிந்துதான் போயிருந்தன; பயந்தது போலவே!

மனசில் நின்றிருந்த பிம்பங்கள் வேறு. சின்ன வயதில் நான் ஓடியாடித் திரிந்த தெருக்கள். பார்த்துப் பார்த்து மகிழ்ந்த வீடுகள். நீந்தி நீந்திக் களைத்த ஆறு. மனத்தில் பதிந்து போயிருந்த படித்த பள்ளி. அதன் பின்னே தனித்து நின்ற குன்று கள். அதன் கீழே பரந்து பட்ட பொட்டல் வெளி. அங்கே பறந்து திரியும் அடிக்கடி கண்ணில் படும் பெரிய பெரிய கழுகுகள். எதுவுமே இல்லாமல் இப்படி எல்லாவற்றிலுமா ஒரு மாற்றம் ஏற்படும்? மனது நொந்து போனது.

என் ஊர் வத்தலக்குண்டு. அப்போது மதுரை மாவட்டம். இப்போது திண்டுக்கல்லின் கீழே வருகிறது. வெற்றிலைக் குண்டு என்றுதான் பெயர் எங்கள் ஊருக்கு. குண்டு குண்டான அகன்று உருண்ட வெற்றிலை விளையும் கொடிக்கால்கள் அப்போது அதிகம் அங்கே. அதனால் அந்தப் பெயர் என்பார்கள் பெரியோர்கள்.

கமலாம்பாள் சரித்திரம் நாவல் எழுதிய பி.ஆர்.இராஜமய்யர், பிறந்தது இந்த ஊர்தான். அக்ரஹாரத்தில் மூன்று தெருக்கள் உண்டு. ஒற்றைத் தெரு, நடுத்தெரு, கோயில் தெரு என்று. அதில் ஒற்றைத் தெருவில்தான் பி.ஆர்.ஆரின் வீடு உள்ளது.



உஷாதீபன்

'எழுத்து' ஆசிரியரும் மணிக்கொடி கால எழுத்தாளருமான ஜாம்பவான் சி.சு.செல்லப்பாதான் பி.ஆர். ஆருக்கு நூற்றாண்டு விழா கொண்டாடினார்.

சி.சு. செல்லப்பாவின் சிஷ்யகோடிகள் நாங்கள். இப்படிச் சொல்லிக்கொள்வதில் எங்களுக்கு ஒரு தனித்த பெருமை உண்டு. அவர் அந்த விழாவுக்காக, அதன் மேன்மைக்காகக் கடுமையாக உழைத்தார். அவர் இட்ட கட்டளையைச் சிரமேற்கொண்டு செய்தோம். நண்பர்களாகிய நாங்கள் நாலைந்து பேர் ஓடி ஓடிச் செய்தோம். ஆடிப் பாடிச் செய்தோம். அத்தனை சந்தோஷம் எங்களுக்கு.

கோயில் தெருவில் பெரிய அகம் என்று ஒரு வீடு உள்ளது. அதுதான்



போன தடங்கள்

சி.சு.செ.வின் வீடு. வாசல் திண்ணையில் சுற்றி வர நாங்கள் அமர்ந்துகொண்டு அவர் பேசுவதைக் கேட்போம். எங்களின் கத்துக் குட்டிக் கவிதைகளை எடுத்து விடுவோம். எழுதி நீட்டுவோம். அத்தனையும் திரும்பி விடும் அமைதியாய்.

சி.சு.செ. மாதிரி ஒரு உழைப்பாளியைப் பார்க்கவே முடியாது. தாம் எழுதி அச்சிட்ட புத்தகங்களைச் சுமந்து கொண்டு ஊர் ஊரா கச் சென்றவர். எழுத்து இதழ்களைப் பின்னிடுவது, தபாலில் அனுப்புவது ஆகிய பணிகளை அவரே முன்னின்று செய்வார்.

தியாகி சுப்ரமணிய சிவா அவர்களுக்கும் அந்த ஊர்தான். எழுத்தாளர் ஜோதிர்லதா கிரிஜாவின் ஊரும் வத்தலக்குண்டு தான். அவர்களைப் பற்றிச் சொல்லாமல் இருந்தால் அது பெரும் தவறு. காசுக்காக எழுதாமல், கருத்துக்காக எழுதுபவர் அவர். எழுத்துக்கு நல்ல நோக்கம் வேண்டும் என்பதில் தீர்மானமாக இருப்பவர். அவருடைய எந்தப் படைப்பும் பொழுதுபோக்குக்காக எழுதப்பட்டது என்று சொல்லவே முடியாது. அற்புதமான படைப்பாளி.

இத்தனை பெருமைகளையும் உள்ளடக்கிய அதே ஊரில்தான் இன்னொரு பெரிய தியாகியும் இருந்தார். அவர்தான் எங்கள் தந்தை. தமக்கு வாய்த்த ஹோட்டல் உத்தியோகம் தம் வாரிசுகளுக்கும் தொடர்ந்து விடக்கூடாது என்பதில் உறுதியாக நின்றவர். மிகக் குறைந்த வருமானத்தில் பிடிவாதமாக ஆறு பேரைப் படிக்க வைத்தவர். அரசாங்க வேலையைப் பிள்ளைகள் பிடிப்பது வரை விடப்போவதில்லை என்று இயங்கியவர். ஹோட்டலில் வேலை பார்த்து உயர்ந்த குடும்பம் என்றால் அது எங்கள் வீடுதான் என்று தலை நிமிர்ந்து சொல்லலாம்.

அப்பாவின் தியாகம் அளவிடற்கரியது. அதற்கு உறுதுணையாய் நின்றது அம்மா. அவளின் தியாகங்களையும்



* ஜோதிர்லதா கிரிஜா



* சி.சு. செல்லப்பா

இங்கே நினைவுகூராவிட்டால் நன்றி மறந்தவர் ஆவோம்.

அப்பா வேலை பார்த்த வெங்கடேஷ் கபே இன்று இல்லை. நாங்கள் குடியிருந்த ஏழரை ரூபாய் வாடகை வீடு இல்லை. எனக்கு இலவசமாக ட்யூஷன் சொல்லிக் கொடுத்த கணக்கு வாத்தியார் கிருஷ்ணசாமி இல்லை. அண்ணாவுக்கு எஸ்.எஸ்.எல்.சி. தேர்வுக்குப் பதினைந்து ரூபாய் கட்டணப் பணம் கொடுத்த மிராசுதார் இப்போது இல்லை. வீட்டுக்கு வீடு அசராமல் தண்ணி எடுத்து விடும் வைத்தி இல்லை.

> **என் மனமும் ஏன் இப்படி சுருங்கிப் போகிறது? நான் நீந்தி நீந்திக் களைத்த ஆறு எங்கே?**

பள்ளி வாசலில் ஈ மொய்க்கக் கிடக்கும் சீயான்... இலந்தைப் பழம் விற்கும் பாட்டி, ப்ப்பூபூ... என்று ஊதிக் கொண்டு வரும் கமர்கட் கம்பு மிட்டாய்க்காரன். காலணாவுக்கு ஒரு பாட்டில் கலர் சர்பத் தரும் மாரியம்மன் கோயில் எதிர்க்கடை, இப்படிச் சொல்லிக்கொண்டே போகலாம்.

படித்த பள்ளிக் கட்டடம் பல இடங்களில் சிதைந்திருந்தது. அதன் சுற்றுச்சூழல் பெரும் மாசு படிந்திருந்தது. பள்ளியைச் சுற்றியிருந்த விளையாட்டு மைதானம் ஏனிப்படி சுருங்கிச் சிறுத்துப் போனது?

என் மனமும் ஏனிப்படி சுருங்கிப் போகிறது? நான் நீந்தி நீந்திக் களித்த ஆறு எங்கே? குதிரைக் கல்லில் குதித்து, யானைக் கல்லுக்கு முங்கு நீச்சல் வந்து கரையோரமாய்க் குளித்துக் கொண்டிருந்த முத்துராணியின் காலைக் கிள்ளினோமே? அந்த இடம் எங்கே போனது?

அரசமரத்தடிப் பிள்ளையாருக்கு முன்னால் பசுவன் உட்கார்ந்திருக்க, சுற்றிவர ஆடி பதினெட்டுக்கு அவனுக்கு சித்ரான்னங்கள் படைக்கும் கோலாட்ட நிகழ்ச்சி நடைபெறுமே? "கோலேன்னாக் கோலே... கோலேன்னா கோலே..." அந்தக் கோயில் என்னவாயிற்று?

ஆறு இருந்தால்தானே இவையெல்லாம் வேண்டும்? ஆறே இல்லை. அதுவே குறுகிக் குறுகிக் கோடு போல் ஓரமாய் சாக்கடை நீராய் துர்நாற்றத்தோடு கொசுக்களின் பிறப்பிடமாய் அசுத்தத்தின் இருப்பிடமாய்... என்ன கொடுமை இது?

மனசு மிகவும் கனத்துப் போனது எனக்கு. சொந்த ஊர் போனால் மனநிம்மதி ஏற்படும். சந்தோஷம் மிளிரும். இது நேர்மாறாய் ஆகிப் போனதே?

மனத்தில் ஏற்கெனவே படிந்து போயிருந்த பிம்பங்கள் அழிந்து போய் விடுமோ? அழிந்து போயிற்றோ?

அவற்றினால் உள்ளத்தில் தேங்கிக் கிடந்த நன்னெறிகள் சிதிலமாகுமோ? ஆகாது. அதுதான் ஆதார ஸ்ருதி. அவைதான் உரம். அந்த உரத்தில் விளைந்ததுதான் என்னுள் படிந்திருக்கும் நன்னெறிகள். அவற்றுக்கு என்றுமே அழிவில்லை. நிச்சயம் அழிவில்லை. அதுதான் சத்தியம்! ●



எங்கே இருக்கிறாய் ரகுராமா?

''எனக்கு கல்யாணம் ஆனதுக்கப்புறம் நான் வாசிக்க ஆரம்பிச்சது கல்கி. என்னோட கணவர் வீட்ல கல்கி தான் எல்லாரும் வாசிக்கற பத்திரிகை. அதுல நானும் சேர்ந்துட்டேன். அதுக்கப் புறம்தான் எனக்குத் தெரிய வந்தது. என் கணவர் பத்திரிகைகளுக்கு சிறுகதை, துணுக்கு, ஜோக்ஸ் எழுதுவார்னு!'' எனச் சொல்லி புன்னகைக்கிறார் ரேணுகா நாராயணன்.

திருச்சி, மேலச்சிந்தாமணி, ஸ்டேட் பாங்கில் பணிபுரிகிறார் லால்குடி வெ.நாராயணன். மனைவி ரேணுகா. ஒரே மகன் அருண். தஞ்சை சாஸ்த்ராவில் எம்.சி.ஏ. இறுதி ஆண்டு மாணவர்.

''என்னோட அப்பாவுக்கு ரயில்வேயில் வேலை. நான் பிறந்ததுலேருந்து ஊர் ஊரா வசிக்கறது வாடிக்கையா போச்சு. ஸ்ரீரங்கம் தாத்தா வீட்ல கதைப் புத்தகங்கள் நெறைய. அலமாரியில் பூட்டி வெச்சுக்கு வாரு. தாத்தா தூங்கும் போது அலமாரி திறந்து கதை புக் எடுத்துப் படிச்சுட்டு, எதுவும் தெரியாத மாதிரி அது இருந்த எடத்துல திரும்பவும் வெச்சுடுவேன். என்னோட பன்னிரண்டு வயசுல மு.வ.வோட 'பெற்ற மனம்' நாவல் படிச்சிருக்கேன். அந்தப் படிப்பு தாகம்தான் என்னை எழுதத் தூண்டிச்சு.

லால்குடி ஸ்டேட் பாங்க்ல வேலை பார்த்தப்போ ரகுராமன் வந்து ஜாய்ன் பண்ணினான். என்னை விட நாலு வயசு கம்மி. நாங்க ரெண்டு பேரும் நட்பாயிட்டோம். அவனுக்கும் எழுதறதுல ஆர்வம் அதிகம். அப்ப கல்கியில சிறுகதைப் போட்டி அறிவிச்சாங்க. நானும் அவனும் சேர்ந்து ஒரு சிறுகதை எழுதி அனுப்பினோம். 'இலால்குடி ரகுநானக்' என்கிற புனைபெயர்ல. அந்தச் சிறுகதை ரொம்ப லேட்டா போய்ச் சேர்ந்திருக்கு. ஆசிரியர் கிட்டேயிருந்து ஒரு கடிதம் வந்தது: 'ரொம்ப சிக்கலான பிரச்னையை மையப் படுத்தின சிறுகதை. நல்லா வந்திருக்கு. போட்டி முடிவு தேதிக்குப் பின்னால வந்ததால போட்டியில பரிசீலிக்க முடியலை. இருந்தாலும் நல்ல சிறுகதை என்பதால் தனியாகப் பிரசுரிக்கிறோம்'னு.

அடுத்த வார கல்கி (1989) இதழில் அந்தச் சிறுகதை ஆறு பக்கங்களில் வந்தது. எங்க ரெண்டு பேருக்கும் சிறுகதைப் போட்டியில் முதல் பரிசு வாங்கின சந்தோஷம். 1991ல் ரகுராமன் ப்ரமோஷன்ல வெளியூர் போயிட்டான். கடைசியா ஹைதராபாத்தில் அவன் வேலை செய்த போது ஃபோன்ல பேசினேன். மூணு வருஷம் ஆகுது. இப்ப எங்க வேலை பண்றான்னு தகவல் இல்லை. எங்கிருக்கிறாய் ரகுராமா?'' ஏக்கத்துடன் வினவுகிறார் லால்குடி வெ.நாராயணன்.

- ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு

காதைக் கொடுங்க!

ராஜாவுக்கு செக்!

ஜெயந்தி நடராஜன், கிருஷ்ணசாமி ஆரூண் ஆகியோர் அமைச்சர் பதவியை எதிர்பார்த்து ஏமாற்றமடைந்தனர் என்று கட்சி வட்டாரங்கள் சொல்கின்றன. இவர்களில் ஜெயந்தி தான் மிக்க நம்பிக்கையுடன் காத்திருந்தார். இன்னமும்,



* அன்புமணி

கலாசாரம், நிலக்கரி, வீட்டு வசதி போன்ற துறைகள் கூடுதல் சுமையாக மற்ற அமைச்சர்களிடம் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் ஒன்றிரண்டு மாதங்களில், இவற்றில் ஏதேனும் ஒரு துறைக்கு தாம் அமைச்சராக்கப்படுவோம் என்று நம்புகிறார் ஜெயந்தி என்றும் தெரிகிறது. ஆனால் அவரை தமிழகக் காங்கிரஸ் தலைவராக்கலாமா என்ற யோசனையும் காங்கிரஸ் மேலிடத்தின் பரிசீலனையில் இருக்கிறது.

''ஸ்பெக்ட்ரம் விவகாரம் சென்ற முறை, பெரிய சர்ச்சையாகி விட்டதில், கூட்டணி நிர்ப்பந்தம் காரணமாக அதே இலாகாவைக் கொடுத்தாலும், ராஜாவுக்கு செக் வைப்பது போல காங்கிரஸ் (மஹாராஷ்டிரா) எம்.பி.க்களான குருதாஸ் காமத்தும், சச்சின் பைலட்டும் அவரின் கீழ்



* ராஜா

அத்துறை அமைச்சர்களாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்'' என்று காங்கிரஸ் நண்பர்கள் கிசுகிசுக்கிறார்கள். இவ்விருவரும் ராகுல் காந்திக்கு நெருக்கமானவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது! அதே போல் ஸ்டாலினின் சிபாரிசான காந்திச் செல்வன், சுகாதாரம் மற்றும் குடும்பநலத்துறை ராஜாங்க அமைச்சராகப் பொறுப்பேற்றாலும் அவருக்கு மேல், சக்திவாய்ந்த குலாம்நபி ஆசாத் கேபினட் அமைச்சராக அமர்த்தப்பட்டிருக்கிறார்.

''சேது சமுத்திரத் திட்டத்தை அரசியலாக்கக் கூடாது'' என்று கப்பல் துறையின் புதிய அமைச்சர் வாசன் தமது முதல் பத்திரிகையாளர் சந்திப்பிலேயே கேட்டுக் கொண்டார். ஆனால் உச்சநீதிமன்ற உத்தரவுப்படி போடப்பட்டிருக்கும் பச்சௌரி கமிட்டி அறிக்கையை அரசுக்கு சாதகமில்லாத

வகையில் திசைதிருப்ப, சில அரசியல் தலைவர்கள் முயற்சி செய்கிறார்கள் என்ற தகவல் தில்லியில் அடிபடுகிறது. ''இது தி.மு.க.வுக்குத்தானே கசப்பான செய்தி'' என்று சிண்டு முடிக்கிறார்கள் சிலர்.



* ஜெயந்தி நடராஜன்

தலைநகர் பத்திரிகையாளர்கள் அன்புமணி மீது சற்று கோபமாக

டெல்லி ஸ்பெஷல்

இருக்கிறார்கள். காரணம், மத்திய அரசின் சுகாதாரத் திட்டத்தின் கீழ் பத்திரிகையாளர்கள் மற்றும் அவர்கள் குடும்பத்தினர் மருத்துவச் சிகிச்சை எடுத்துக் கொள்ள முன்பு இருந்த வசதியைச் சுருக்கி, ''இனி குடும்பத்தினருக்குக் கிடையாது. பத்திரிகையாளருக்கு மட்டும்தான்'' என்று மாற்றி விட்டாராம். அவரது கோபத்துக்குக் காரணம் 'எய்ம்ஸ்' விவகாரத்தில் தில்லி மீடியா அவருக்கு எதிராகச் செயல்பட்டதுதானாம். இந்த வசதியை மீண்டும் பெற்றுத் தரும்படி செய்தி ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் ஜெகத்ரட்சகனிடம் பத்திரிகையாளர்கள் முறையிட்டிருக்கிறார்கள்.

- ஸ்ரீநி

பாலிடிக்ஸ் போட்டி - 4 முடிவு

கல்கி 10.5.2009 இதழில் அறிவித்த பாலிடிக்ஸ் போட்டி - 4ல் புகுந்து விளையாடி நிஜமுகங்களைச் சரியாகக் கண்டுபிடித்தவர்களில் குலுக்கல் மூலம் தலா ரூ.100/- பரிசு பெறும் பத்து பேர்:

1. அகிலா குமார், மதுரை, 2. எஸ்.சங்கர், திருப்பரங்குன்றம், 3. எஸ்.சாவித்ரி, சென்னை, 4. கோ.சண்முகசுந்தரம், ஈரோடு, 5. செல்வ ராஜன்.ஜி, விழுப்புரம், 6. எம்.மீனா, தஞ்சாவூர், 7. சிவ.இராமலிங்கம், தூத்துக்குடி, 8. க.சஞ்சய், சென்னை, 9. எ.எழிலரசி, செய்யார் 10. ஆர்.தியாகராஜன், திருச்சி.

சரியான விடைகள்:

1. ராம்விலாஸ் பாஸ்வான், 2. லாலு, 3. வைகோ, 4. நரேந்திரமோடி 5. மாயாவதி

மேலும் மல்லிகா சாராபாயைக் கண்டுபிடித்து அவருக்கு 'நறுக்' பாராட்டுக் குறளை அளித்து ரூ.1000/- தட்டிச் செல்பவர்:

வெ.பா.அரங்கன், சென்னை

பாராட்டுக் குறள்:

எவரையுமே சாராபாய்; உழைத்திடவும் சோராபாய்

மக்கள்சக்தி நின்றிடுமோ இவருக்கென ஆதரவாய்!



"தபாலாபீஸை மூடிட்டாங்களாம்... இனிமேல் திருத்துறைப்பூண்டி போய்த்தான் பென்ஷன் வாங்கணமாம்..."

தியாகி சுந்தரமூர்த்தி மெதுவாக நடந்தார். கட்டியிருந்த வேட்டி கால்களை இடறுவது போலத் தோன்றியது. தள்ளாமை புரிந்தது.

பென்ஷன் வாங்கப் போகும் போதெல்லாம் அவரது வயது குறித்த ஒரு சிந்தனையும் பழைய நினைவுகளும் உள்ளுக்குள் ஓடும். இப்போதும் ஓடியது.

இருபத்திரண்டு வருடங்களாக தியாகிகளுக்கான பென்ஷன் வாங்கி வருகிறார். முன்னூறு ரூபாயில் தொடங்கி இப்போது ஆயிரத்து நூறு ரூபாய். பாமினி கிராமத்தில் அவரும், பருத்தியூர் கிராமத்திலிருந்து அவரது நண்பர் ராமசாமியும் அந்த ஏரியாவில் பென்ஷன் வாசிகள்.

இருவருக்குமே சுதந்திரப் போராட்ட ரணங்கள் உண்டு. மகாத்மா காந்தியுடனான நேரடி அனுபவம் உண்டு. உப்பு சத்தியாகிரக நிகழ்வு உண்டு.

சுந்தரமூர்த்திக்கு பென்ஷன் தேவையில்லை. மாதம் நான்காயிரம் சம்பாதிக்கிற மகனும் அன்பான மருமகளும் போதுமானவை. ஆனாலும், ஆயிரத்து நூறு ரூபாயில் நிறைய பொதுக் காரியங்கள் செய்யலாம். அவரது மனத் திருப்திக்கான விஷயம் அது. அதன்பொருட்டே பென்ஷன் பயணம்.

வாய்க்கால் கரை தாண்டி நடக்கையில், குரல் கேட்டு நின்றார்.





திருவாரூர் பாபு

''தியாகி அய்யா...''

நிமிர்ந்து பார்த்தார்.

பக்கத்துத் தெரு செல்வி.

''என்னம்மா...?''

''புள்ளைக்குப் பள்ளிக்கூட ஃபீஸ் கட்டணும். வருஷாவருஷம் நீங்கதான் கட்டறீங்க...''

முன்னூறு ரூபாய்க்கு அழைப்பு வந்து விட்டது புரிந்தது.

சிரித்துத் தலையாட்டிவிட்டு நடந்தார்.

தபால் நிலையத்தை நெருங்கியவர் கண்கள் சுருக்கினார். பூட்டியிருந்தது. புறப் படும்போது மணி ஒன்பது. இப்போது ஒன்பதரை இருக்கும். ஏன் பூட்டிக் கிடக் கிறது? யோசித்தார்.

''என்ன சுந்தரமூர்த்தி?'' ராமசாமி குரல்.

நிமிர்ந்து அருகில் வந்தவரைப் பார்த் தார்.

''பாமினி தபாலாபீஸை மூடிட்டாங் களாம்... இனிமேல் திருத்துறைப்பூண்டி போய்த்தான் பென்ஷன் வாங்கணுமாம்...''

சுந்தரமூர்த்திக்குத் தூக்கி வாரிப்போட் டது.

''ஏன்?''

''வாடகைக்கும் வேலை பார்க்கிற ரெண்டு பேர் சம்பளத்துக்கும் வழியில்லை யாம். அதனால அரசாங்கம் இதுமாதிரி தபால் அலுவலகங்களை மூடச்சொல்லிட் டுதாம்...''

சுந்தரமூர்த்தி அவரையே பார்த்தார்.

ஊர் நோக்கி நடக்கும்போது அவருக் குள் பலவித எண்ணவோட்டங்கள்.

பென்ஷன்

சுதந்திரத்துக்காகப் போராடியதற்கான நினைவுகள் அனைத்தையும் பெருமையாக மனத்துக்குள் பூட்டி வைத்திருக்கிறார்.

காலை கண் விழித்ததிலிருந்து தூங்கும் வரை அந்த நினைவுகள்தான் அவருக்குள். ஆனால் இப்போது பென்ஷன் வாங்கும் தபாலாபீஸை வருமானம் இல்லையென்பதற்காகப் பூட்டியது அவரை அவமானப்படுத்துவது போல இருந்தது. தபாலாபீஸ் என்பது மக்களுக்கான சேவையாயிற்றே! இதுபோல் குக்கிராமத்தில் இயங்கும் தபால் நிலையங்கள் அரசாங்கத்தையும் மக்களையும் இணைக்கும் பாலமாயிற்றே. அதில் வருமானம் இரண்டாம்பட்சம் தானே?

வீட்டுக்கு வந்து ஈஸிசேரில் சாய்ந்த போது... வாசலில் சத்தம் கேட்டது.

சிலர் உள்ளே வந்தார்கள்.

''பெரியவரே அடுத்த வாரம் எலெக்ஷன் மறந்திடாதீங்க... நீங்க எல்லாம் நம்மாளுங்கதான். எங்களுக்குத்தான் வோட்டு போடுவீங்க தெரியும். ஆனாலும் கேட்கறது எங்க கடமை...'' என்றபடி கும்பிட்டார்கள்.

ஒருவன் மட்டும் அருகே வந்து... ''இத வச்சுக்குங்க... உங்க குடும்பத்துல உள்ள மூணு வோட்டும் நம்ம கட்சிக்குத்தான் விழணும்...'' என்றபடி ஒரு கவரைக் கையில் திணித்தான். அவர் வியப்பாகப் பார்த்துக் கொண்டிருக்கும்போதே நகர்ந்தார்கள்.

தியாகி யோசனையாக கவரைப் பிரித்தார்.



"அருகம்புல் உடம்புக்கு நல்லதுனு வைத்தியர் சொன்னதைத் தப்பா புரிஞ்சுக்கிட்டாரு மன்னர்!"

"எப்படி?"

"புல் தரையில படுத்துப் புரள்றாரே...!"

- எம்.வெங்கட்

பென்ஷன் என்பது அவரைப் பொறுத்தவரை ஒரு அங்கீகாரம். பெருமிதம். ஊரில் அவரை வேறுபடுத்திக் காட்டும் ஒரு சின்னம். அதற்காக மாதம் இரண்டு கிலோ மீட்டர் நடப்பது ஒரு சுகமான அனுபவம்.

அந்த அனுபவத்தைத் தரும் தபாலாபீஸை வருமானம் இல்லையென்று பூட்டிவிட்டு, 'திருத்துறைப்பூண்டிக்கு வா... பென்ஷன் தருகிறோம்' என்கிறார்களே...

எண்பத்து எட்டு வயதில் பத்து கிலோ மீட்டர் சென்று....

இனிமேல் பென்ஷன் வாங்கப் போவதில்லை என்கிற முடிவுக்கு வந்தார் சுந்தரமூர்த்தி.

உள்ளே மொடமொடவென ஒன்று இரண்டு... நான்கு ஐநூறு ரூபாய் நோட்டுக்கள்.

ரெண்டாயிரம்.

கிட்டத்தட்ட இரண்டு மாத பென்ஷன் பணம்.

அறுபத்திரண்டு கால சுதந்திர இந்தியாவில் வருமானம் இல்லையென்பதற்காக தபால் அலுவலகத்தை மூடிவிட்டு, வோட்டுக்காக தேடி வந்து இரண்டாயிரம் கொடுக்கிறார்களே...

அவரது மனம் அழுதது.

ரூபாய் நோட்டில் இருந்த காந்தி அவரைப் பார்த்துச் சிரித்தார். ●

கருணாநிதியிடம் கற்றுக்கொள்ள வேண்டியது என்ன?



✱ காட்டும் உதாரணம்

● ஜெ.மகேஷ் குமார், தூத்துக்குடி

? அமரர் கல்கி தமது கட்டுரைகள் பலவற்றில் இலங்கைத் தமிழர்களின் உரிமைகளைப் பற்றியும் எழுதியுள்ளார்; அவர்களுக்காகக் குரல்கொடுத்துள்ளார். ஆனால் கல்கி இதழ் இன்று தனி ஈழத்தை எதிர்ப்பதன் காரணம் என்ன?

! அமரர் கல்கி ஈழத் தமிழர்களின் உரிமைகளைத்தான் அங்கீகரித்து எழுதினார்; தனி நாடு கேட்டு அல்ல. அவர் வன்முறை ஆதரவாளரும் அல்ல. கல்கி இன்றும் அதே கொள்கையுடையதுதான்.



✱ தொடரும் கொள்கை

● பி.ஜெயப்பிரகாஷ், சர்க்கார்பதி ❑

? மம்தா பானர்ஜி பொறுப்பில் ரயில்வே துறை மேம்படுமா லார்?

! சமீபத்திய பீஹார் ரயில் எரிப்புச் சம்பவங்களுக்குப் பிறகு, ''ஸ்டேஷன் நிறுத்தங்களை ரத்து செய்த அதிகாரிகள் பேரில் நடவடிக்கை; தீ வைத்தவர்களுக்கு தண்டனை இடையாது'' என்று ஒருதலைப் பட்சமாக மம்தா அறிவித்ததைப் பார்க்க, ரயில்வே துறை முன்னிலும் மேம்படுமா என்பது சந்தேகத்துக்குரியதாகிறது.

● மஞ்சுதேவன், அயிரோலி

? கருணாநிதியிடம் வருங்கால அரசியல்வாதிகள் கற்றுக் கொள்ள வேண்டியது என்ன?

! அயராத உழைப்பு; தோல்விகளைக் கண்டு துவளாத மனம்; தமிழ்ப் பற்று.

● வெ.ராம்குமார், வேலூர்

? ''கடந்த மூன்றாண்டுகளாக கருணாநிதிக்கு நான் கொடுத்த குடைச்சல் கொஞ்சநஞ்சமல்ல'' என்கிறாரே ராமதாஸ்?

! தாம் செய்தது, மக்கள் நலன் கருதியும், எதிர்க்கட்சி என்பதாலும் ஆக்கபூர்வமான விமர்சனங்கள்தான் என்றார் முன்பு. இப்போது 'குடைச்சல்' என்கிறார். தேர்தல் தோல்வி மனுஷனை எப்படி மாற்றுகிறது பாருங்கள்!

● என்.காளிதாஸ், சிதம்பரம்.

? ம.தி.மு.க.வின் வாக்கு வங்கி குறையவில்லை என்று வைகோ கூறியுள்ளாரே?

! இப்படி நொண்டிச் சமாதானம் பேசுவதை விட்டுவிட்டு, தம்மிடம் என்ன குறை என்று ஆராய முற்பட்டால்,

நீங்கள் கேட்டவை - தராசு


ம.தி.மு.க.வின் எதிர்காலத்துக்கு நல்லது.

● **எஸ். ருக்மிணி, சேலம்-1.**

? **''நாடாளுமன்றத்தில் தாம் நுழைய ஆசைப்பட்டதே ஈழத்தின் விடிவுக்கான வாதங்களை எடுத்து வைக்கத்தான். அதற்குள் ஈழத்தையே பொசுக்கிவிட்டது ராஜபட்சய அரசு'' என்று தொல் திருமாவளவன் கவலைப்படுவது குறித்து...?**

! தனித்தமிழ் ஈழம் என்பதற்கான இயக்கத்தைத்தான் பொசுக்கியுள்ளது இலங்கை அரசு; தமிழர்களின் சம உரிமைகளுக்கும் மறுவாழ்வுக்கும் குரல்கொடுக்க, அஹிம்சைப் போர் நடத்த திருமாவுக்கு ஒரு தடையும் இல்லை!





● **சுப.நேசிகா, அறந்தாங்கி**

? **வோடஃபோன் விளம்பரத்தை ரசிப்பது உண்டா?**

! 'சே! திரும்பவும் அதே விளம்பரமா!' என்ற சலிப்பை முறியடிக்கும் வகையில், விதவிதமான குட்டி நிகழ்வுகளை நகைச்சுவையுடன் நயமாக வழங்கும் இந்த விளம்பரங்களை யார்தான் ரசிக்க மாட்டார்கள்! அங்கும் இங்கும் ஓடும் அந்த முட்டை உருவங்களின் கலாட்டா ச்சோ ச்வீட்!

● **கு. அருணாசலம், தென்காசி**

? **மாத வருமானம் ரூபாய் 500க்குக் குறைவாக உள்ளவர்கள் வேலைக்குப் போய் வர, இருபது ரூபாய்க்கு மாதாந்திர ரயில்வே பாஸ் தருவதாக அறிவித்துள்ளாரே மம்தா பானர்ஜி?**


! நூற்றியொரு கோடிக்கும் மேல் மக்கள் தொகை கொண்ட நமது நாட்டில், கடந்த மாதம்தான் சராசரி தனிநபர் வருமானம் ரூ.மூவாயிரம் என்கிற அளவைத் தொட்டிருக்கிறது. இதிலே ஐந்நூறுக்கும் குறைவான வருமானம் உள்ளோர் கோடிக்கணக்கில் இருப்பர். மம்தாவின் எண்ணம் கருணை காட்டுவதுதான். ஆனால், போலி வருமானச் சான்றிதழ்கள் பெருகுவதுதான் மிகப் பெரிய அபாயம்.


❑ ரூ. 150/- பரிசு பெறுபவர்:
பி.ஜெயப்பிரகாஷ், சர்க்கார்பதி

★ ரூ. 75/- பரிசு பெறுபவர்:
சுப.நேசிகா, அறந்தாங்கி

● **எம். சம்பத், வேலாயுதம்பாளையம்**

? **ராகுல் காந்தியால் காங்கிரஸைப் பழைய இடத்துக்குக் கொண்டுவர முடியுமா?**


★ பளிச்சிடும் பண்பாடு



! அதைவிடச் சிறந்த இடத்துக்குக் கொண்டு வர முடியும். உட்கட்சி ஜனநாயகத்துக்கு முதன்மையும் ஊழலற்ற ஆட்சிக்கு முக்கியத்துவமும் அளித்தால்.

● **வி.ஜி.சத்தியநாராயணன், சென்னை-61.**

? **ஆஸ்திரேலியாவில் இந்திய மாணவர்கள் தாக்கப்படுவது குறித்து?**


! அதைவிடவும் பெரிய வேதனை, ஆஸ்திரேலிய அரசு இந்த இனத் துவேஷத்தை ஒப்புக்கொண்டு கண்டனம் தெரிவிக்காமல் ஏதேதோ காரணங்களைக் கண்டுபிடித்துக் கூறி மழுப்புவதுதான். கவலைக்

சூரிய இச்சூழலில், ஆஸ்திரேலியப் பல்கலை வழங்கிய கௌரவ டாக்டர் பட்டத்தைப் பெற அமிதாப்பச்சன் மறுத்தது வரவேற்கப்பட வேண்டிய முடிவு.

● கே.ஏ.நமச்சிவாயம், பெங்களூரு

? ''நான் வோட்டுப் பொறுக்கி அல்ல. போராளியாக உருவாக்கப்பட்டவன். வன்னியர்கள் படையைத் தட்டி எழுப்பினால் வட மாவட்டங்களில் நடமாட முடியாத நிலை ஏற்படும்'' என்று காடு வெட்டி குரு கூறுவது எந்த வகைப் பேச்சு? நீங்கள் ஏற்கிறீர்களா?

! மக்களின் வோட்டுரிமையையே மதிக்காதவர் எப்படி ஜனநாயகவாதியாக இருக்க முடியும்? போராளியாகத் தம்மை அறிவித்துக் கொள்பவரால் ஜனநாயகத்தை எவ்வாறு மதிக்க முடியும்? காடு வெட்டியின் பேச்சு நமது ஜனநாயகத்தையே வெட்ட முயலும் பேச்சு. அதை எப்படி ஏற்க முடியும்?



● முளைக்கும் சந்தேகம்



● வெட்டும் பேச்சு!



● கே.தெய்வசிகாமணி, சென்னை-82

? வாரிசுகளுக்குப் பதவிகள் பற்றிய ஒரு பத்திரிகையாளர் கேள்விக்கு, ''ராஜாஜியின் மகனான நரசிம்மன் கூட எம்.பி.யாகப் பொறுப்பு வகித்தார்'' என்று முதல்வர் பதில் சொல்லியிருக்கிறாரே?

! பதவியில் இருந்த அல்லது இருக்கிற ஓர் அரசியல்வாதியின் மகனாகப் பிறந்ததால், அவருக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய பொறுப்பு அல்லது பதவி கிடைக்கக்கூடாது என்பதல்ல ஜனநாயகம். அது தகப்பனின் செல்வாக்கு காரணமாகவோ, அதிகார துஷ்பிரயோகத்தாலோ நேர்மையற்ற விதத்திலோ கிடைக்கக் கூடாது என்பதே ஜனநாயகம்.

● பா.அச்சுதன், வயலூர்

? எது பண்பாடு?

! கர்நாடக மாநிலத்திலிருந்து தேர்வான இரு காங்கிரஸ் மத்திய அமைச்சர்களின் வீடு தேடிச்சென்று, முதல்வர் யெதியூரப்பா வாழ்த்திய செயல்.

● மு.பெரியசாமி, விட்டுக்கட்டி


? ஐ.நா. சபையில், இலங்கை ராணுவத்தின் மனித உரிமை மீறல் குறித்து கொண்டுவரப்பட்ட தீர்மானத்தில், இந்தியா இலங்கைக்கு ஆதரவாக வோட்டளித்திருக்கிறதே?

! விடுதலைப் புலிகளின் பயங்கர வன்முறைக்கு எதிரான வோட்டு அது.

● மல்லிகா அன்பழகன், சென்னை-78

? மறைந்த மலையாள எழுத்தாளர் கமலா தாஸ் பற்றி?

! அவர் எழுத்தைக் காட்டிலும் அது ஏற்படுத்திய பரபரப்பு பெரியது! ●



● மறுப்பின் மகிமை

தவணைமுறை தற்கொலை

கோவை எக்ஸ்பிரஸ்ஸில் எப்போதும் விரும்புகிற ஜன்னலோர இருக்கையில் அப்பாவுடன் அமர்ந்திருந்தாள் சசி. அப்புறம் பேசுவதாக எஸ்.எம்.எஸ்ஸில் தகவல் அனுப்பியிருந்த சசி, சூழலின் நெருக்கடி அற்ற உற்சாகமான மனநிலையில் 'பாடம்' அ.நாராயணனோடு பேச தொடர்பு கொண்டாள். எதிர்முனையில் 'வந்தேமாதரம்' பாடலுக்குப் பின், ''என்னம்மா சசி உன்னை ஃபோன்ல கூட கான்டாக்ட் பண்ண முடியலை. புதுசா நானொரு பத்திரிகை ஆரம்பிக்க இருக்கேன். பாடம்னு பேரு. பிஸினஸ் இல்லை. அதுல உன்னை எதுக்காவது பயன்படுத்தலாமேன்னுதான் கூப்பிட்டேன்.''

''மது போதைக்கு எதிரான மக்கள் இயக்கத்தைத் துவக்கி அதை அறிவுசார்ந்த போராட்டமா தொடர்ந்து நடத்தும் உங்களுக்கு பத்திரிகை அவசியம்தான் ஸார்.''

''சரி, ஆஃபீஸுக்கு வாயேன் பேசலாம்.''

''ஆட்டைக் கடிச்சு, மாட்டைக் கடிச்சு மனுஷனைக் கடிச்ச மாதிரின்னு சொல்லுவாங்களே... அது மாதிரி என்னோட அப்பாவும் குடிக்கு அடிமையாகி இப்ப ட்ரீட்மெண்ட்டுக்குக் கோவை போய்க்கிட்டிருக்கோம்.''

''சென்னையிலே நிறைய தொண்டு நிறுவனங்கள் இருக்கேம்மா.''

''கோவையில நிறைய உறவுக்காரங்க இருக்காங்க. அப்பா சென்னைக்கு வரும்போது புது மனுஷனா வரணும்னு நினைக்கிறேன்.''

''சபாஷ் குடிகாரர்களை அவங்க குடும்பம்தான் அரவணைச்சு மீட்கணும்.''

''ஸார், நான் சென்னை வந்ததும் குடிக்கு எதிரா சோஷியல் வொர்க் பண்ணப் போறேன்.''

''சசி, சமூக சேவை என்று பிரித்துப் பேசுவது ஒரு கெட்ட வார்த்தை போன்றது. அது ஒவ்வொருத்தரின் தனிமனிதக் கடமை. அந்தக் கடமையை ஏதாவது ஒரு வழியில செஞ்சுதான் ஆகணும். டியூப்லைட் உபயம் அய்யாசாமின்னு டியூப்லைட் முழுக்க எழுதி பாதி வெளிச்சத்தைத் தனக்கான வெளிச்சமா மாத்திக்கிறதுதான் இப்ப சோஷியல் வொர்க்கில் ஃபேஷனா இருக்கு. உன்னை மாதிரி அனுபவபூர்வமான குடி ஆபத்தை உணர்ந்தவங்க சொல்லும், செயலும் ரொம்ப பவர்ஃபுல்மா... வெல்கம்.''

''இது அரசாங்கத்துக்கு எதிரான யுத்தம்தானே?''

''அந்தக் காலக் கதையில கூஜாவிலிருந்து பூதம் வெளியே வந்தது. இப்போ அரசாங்கமே ஒவ்வொரு பாட்டிலிலும் பூதத்தை அடைச்சு விற்கிற மரண வியாபாரியா ஆகிட்டாங்களே.''

9  சாராய சுனாமி

''துயர விருட்சத்தின் துவக்க விதைன்னு நான் ஒரு கதை கூட எழுதியிருக்கேன் ஸார்.''

''நெசம்தாம்மா. மது ஒரு சாதாரண வர்த்தகப் பொருள் இல்ல. Liquor is no ordinary commodity. அது குடி நோயைப் பரப்பி அடிமை யாக்கும் வேதி விஷப் பொருள். ஒண்ணு தெரியுமா சசி? அமெரிக்கா, ஐரோப்பா, பிரேசில் இங்கெல்லாம் 17 லிட்டரா இருந்த தனிமனித மது நுகர்வு 10 லிட்டரா குறைஞ்சு போச்சு. காந்தி தேசத்தில் ரெண்டு மடங்கு அதிகமாகியிருக்கு. ஒரு விஷ யத்தைச் சொல்லட்டுமா சசி... ரொம்ப போர் அடிக் கிறேனா?''

''சொல்லுங்க ஸார் இது நம்ம ஆணிவேரை ஆராய்ச்சி பண்ற விஷயம்.''



''சூப்பர்மா. 44% முதல் 67% வரையான சாலை விபத்து, மரணங் கள் குடியாலதான் நடக்கு துன்னு கண்டுபிடிச்சிருக் காங்க. சென்னையில் உள்ள சகாய் டிரஸ்ட் உலக சுகாதார நிறுவனத்தின் உதவியோட செஞ்ச ஆராய்ச்சியில எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்ட ஆண் களில் 70% நோயாளிகள் குடிப்பழக் கத்துக்கு அடிமையானவர்கள்ன்னும் தெரிஞ்சது. இப்ப என்னடான்னா +2 படிக்கிற 18 வயசுப் பசங்களும் பீர் குடிக்கிறாங்க. சட்டப்படி அவங்களுக்கு அரசு விற்கக் கூடாது. குடிச்சுட்டு வண்டி ஓட்டினா கேஸ் போடணும். டாஸ்மாக் கடை வாசல் முழுக்க டூ வீலர்தான் நிக்குது. குடிச்சுட்டு வந்து ஸ்டார்ட் பண்ணும்போது ஏன் அவங் களைப் பிடிக்கறதில்லை?''

''இதுக்கு எதுவும் பண்ண முடியாதா?''

''தகவல் அறியும் சட்டத்தின் அடிப்படையில் 28.2.2008 அன்று காவல் ஆணையருக்கு விண்ணப் பிச்சேன். எனக்கு 14.5.2008க்கு (ந.க.எண்: PG 1(3)/ 130/RTI/27209) என்ன தகவல் இந்த அரசு கொடுத்தது தெரியுமா?''

அமிர்தம் சூர்யா



* 'பாடம்' அ.நாராயணன்

"அரசாங்கமே ஒவ்வொரு பாட்டிலிலும் பூதத்தை அடைச்சு விற்கிற மரண வியாபாரியா ஆகிட்டாங்களே."

''என்ன ஸார் சஸ்பென்ஸ்?''

''கல்வி நிறுவனம் மற்றும் கோயில் அருகில் பொது ஜனம் புழங்குமிடத்தில் மதுபான வியாபாரம் எங்கும் நடக்கவில்லை. 21 வயதுக்கு மேற்பட்டவர்கள் மட்டுமே மதுபானம் வாங்கி அருந்துகிறார்கள். அவர்கள் டாஸ்மாக்கில் மது அருந்திவிட்டு வாகனத்தை ஓட்டிச் சென்றால் நடவடிக்கை எடுத்துதான் வருகிறோம். சிறுவர்கள் யாரும் பார்களில் வேலை செய்யவில்லை என்று அப்பட்டமான பொய்த் தகவல்களை அரசு தந்திருக்கிறது. என்ன செய்வது தொடர்ந்து போராடித்தானே ஆகணும்?''

''ஸார் மராட்டிய மாநிலத்தில் ஒரு பகுதியில் மதுக்கடை இருக்கலாமா கூடாதான்னு அப்பகுதி மக்கள்/ பெண்கள் முடிவு செய்யும் வழக்கம் இருக்காமே.''

''குன்றக்குடியில் கூட ஆதீனத்தின் முயற்சியால் மக்கள் விருப்பப்படி பல ஆண்டுகளுக்கு முன் சாராயக் கடையை அரசே மூடியது. இந்தப் புரட்சி, மக்களிடமிருந்துதான் பிறட வேண்டும். நாம கருவிகளாய் இருந்து அதை வளர்த்தெடுக்க வேண்டும். அவ்வளவுதான்.

ஃபேஷனுக்குக் குடிக்க ஆரம்பிச்சு, ஃபிரண்ட்டுக்கு கம்பெனி கொடுக்கறேன்னு மாதக் குடி, தினக் குடியா போயி எவ்வளவு குடிச்சாலும் போதை ஏறாத நிலையில 'நான் எப்பவும் ஸ்டெடி'ம்பான். படிப்படியா போதை ஏணி மேல ஏறிடுவான். அப்புறம் இறங்கணும்னு நெனைச்சாலும் முடியாம அது ஒருவழிப் பாதையா ஆகிடும். அவன் மனநலமும் பாதிச்சு இருக்கும். குடும்பமும் சீர்கெட்டு நிக்கும். இறங்க முடியாதபடி படிகளே இல்லாதபடி சாராய சுனாமி அத்தனையும் உடைச்சிருக்கும். ஆனால் பெருமையா இருக்கு... நீ அப்பாவை மருத்துவரீதியாகவும் மனரீதியாகவும் மாற்ற நெனைச்சு போய்க்கிட்டு இருக்கே... சபாஷ் ஜெயிச்சுடுவீங்கம்மா.''

''தேங்க்ஸ் சார்'' என்றாள் பெருமை பொங்க சசி.

(விரைவில் எக்ஸ்பிரஸ் கோவையைச் சென்றடையும்)



தற்கொலையின் 9வது தவணை:

இதயத் துடிப்பில் மாறுபாடு ஏற்பட்டு ரத்தக் குழாய் பாதிக்கப்பட்டு, இதயத் தசைகள் பழுதடைந்து இதயத்தின் செயல்திறன் குறைந்து எந்த நேரமும் நின்றுவிடும் அபாயம் ஏற்படும்.

சாதனை வேந்தன்!

ஜி. விசுவநாதன்!

இந்தப் பெயரைச் சொன்னதும் சட்டென நினைவுக்கு வரும் மூன்றெழுத்து, **'வி.ஐ.டி.'**

உயர்கல்வி, அரசியல், சுற்றுச்சூழல் பாதுகாப்பு, பெண்கள் மற்றும் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு உருவாக்குதல் போன்ற துறைகளில் சாதனை படைத்தமைக்காக அமெரிக்காவிலுள்ள 'வெஸ்ட் வெர்ஜினியா பல்கலைக்கழகம்' ஜி.விசுவநாதனுக்கு டாக்டர் பட்டம் வழங்கிக் கௌரவித்துள்ளது. இந்தப் பட்டத்தை வாங்கும் முதல் ஆசியர் இவர்தான்.

1984-ம் ஆண்டு 180 மாணவர்களுடன் வேலூரில் தொடங்கப்பட்ட 'வேலூர் இன்ஸ்டிடியூட் ஆஃப் டெக்னாலஜி' (VIT) இன்று பதினான்காயிரம் மாணவர்கள் பயிலும் பல்கலைக்கழகமாக (VIT University) உருவெடுத்துள்ளது.



* பட்டமளிப்பு விழாவில்...


இதனை நிறுவிய ஜி.விசுவநாதன் வேலூர் மாவட்டத்திலுள்ள குக்கிராமத்தில் பிறந்து, தமது விடாமுயற்சியாலும், திறமையாலும் பொருளாதாரத் துறையில் முதுகலைப் பட்டத்தையும், சட்டக் கல்வி பட்டத்தையும் பெற்றார். அரசியலிலும் ஈடுபட்டு நாடாளுமன்ற உறுப்பினர், அமைச்சர் பதவிகளில் அனைவரின் பாராட்டையும் பெறும் வகையில் சிறப்புடன் செயல்பட்டார்.

''பின்தங்கிய பகுதிகளில் வசிக்கும் இளைஞர்கள் மற்றும் பெண்களின் முன்னேற்றத்துக்காக வேலை வாய்ப்புத் தொழிற் பயிற்சி அளித்து, அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதே எனது நோக்கம்'' என்கிறார் 'வி.ஐ.டி. வேந்தர்' என அனைவராலும் அன்புடன் அழைக்கப்படும் ஜி.விசுவநாதன்.

டாக்டர் பட்டம் பெற்ற ஜி.விசுவநாதனுக்கு அமெரிக்காவிலுள்ள வாஷிங்டன் தமிழ்ச் சங்கமும், வடஅமெரிக்க தமிழ்ச் சங்கப் பேரவையும் பாராட்டு விழா நடத்தின.

- ராஜ்

அவள் தனக்குள் சிரித்துக் கொண்டாள். பிறகு, தன் பெயர் கோகிலம் என்றும், தானும் தன் தாயாரும் புரசவாக்கத்தில் தனியாகக் குடித்தனம் செய்வதாகவும், தனக்கு கார்ப்பொரேஷன் ஸ்கூலில் உபாத்தியாயினி வேலையென்றும், இன்று விடுமுறையாகை யால் சில சாமான்கள் வாங்குவதற்காகக் கடைத் தெருவுக்கு வந்ததாகவும், ஞாபக மறதியாய்ப் பணம் எடுக்காமல் வந்துவிட்டதாகவும் கூறினாள். தனக்கு இன்னும் கலியாணம் ஆகவில்லையென்றும், இதுவரை கலியாணம் செய்து கொள்ளும் எண்ணம்



மாந்தோப்பில் குயில்கள் கூவுவது
காணாந்தமாய் இருக்கும்

கிராமத்துக் கவிதைகள்!

அமரர் கல்கி

ஏற்படவில்லையென்றும் சொன்னாள். தனக்கு மெட்ராஸ்காரர்களையே பிடிப்பதில்லையென்றும், எங்கேயாவது கிராமந்தரத்துக்குப் போய் நிம்மதியாய் காலங்கழிக்க மாட்டோமா என்று எண்ணுவதுண்டு என்றும் கூறினாள்.

நேற்று வரையில் குலசேகரனுக்கு நகரத்துக்குக் கீழாகத் தோன்றிய மேலப்பாடி கிராமம், இப்போது சொர்க்கத்துக்கும் மேல் என்று தோன்றியது. தனது கிராமத்து சௌந்தர்யங்களைக் கவிதையுணர்ச்சி தோன்ற வர்ணிக்கத் துவங்கினான். காலை நேரத்தில் தெளிந்த நீர் நிறைந்த குளத்தில் எவ்வளவு அழகாக அல்லிகள் இதழ் விரியும் என்றும், துறவுகளிலிருந்து கரும்புத் தோட்டங்களுக்கு கவலை ஏற்றங்களில் நீர் பாய்ச்சும் தோற்றம் எவ்வளவு மனோகரமாய் இருக்குமென்றும் கிராமத்துக் கோயில் பிராகாரத்திலுள்ள பவழமல்லி மரத்திலிருந்து புஷ்பங்கள் உதிர்ந்திருக்கும் காட்சி எத்தகைய மோகனக் காட்சியாய் இருக்குமென்றும், கடும் வெயில் எரிக்கும் உச்சி வேளையிலும் குளிர்ந்து ஜில்லென்றிருக்கும் மாந்தோப்பில் குயில்கள் கூவுவது எவ்வளவு கர்ணானந்தமாய் இருக்குமென்றும், மேய்ச்சலுக்குச் சென்று மாடுகள் கழுத்தில் கட்டிய மணிகள் ஒலிக்க சாயங்கால வேளையில் திரும்பி வருவது எப்படி உள்ளத்தைப் பரவசப்படுத்து மென்றும் குலசேகரன் நாவில் ஜலம் ஊறும்படியாகச் சொல்லி வந்தான்.



''நீங்கள் சொல்லச் சொல்ல, இப்போதே புறப்பட்டு அங்கே வந்து விடலாமென்றும் தோன்றுகிறது'' என்றாள் மிஸ் கோகிலம்.

- 'குலசேகரன் அதிர்ஷ்டம்' நெடுங் கதையிலிருந்து

வட்டமேஜை

'என்னது, வாக்கிங் போனா, பிரஷர் வருமா? நல்லா கிளப்புறாங்கய்யா பீதிய!'

- சி.விஜயாம்பாள், கிருஷ்ணகிரி-1

நகைச்சுவைகள் ஒவ்வொன்றும் 'அஸ்கு-புஸ்கா-அஸ்கா!'

- கே.அருள்ராஜா, முனியங்குறிச்சி

தமிழ்நாயகி எழுதிய 'தீர்வு' சிறுகதை சிந்திக்க வைத்தது.

- ஜி.சுந்தரராஜன், ஸ்ரீரங்கம்

கம்ப்யூட்டர்கள் களவு போனாலும், கற்பிப்பதை விடாமல் செய்யும் சடகோபராமானுஜ தாசனை மனதாரப் பாராட்டலாம்!

- டி. வசந்தா, திண்டுக்கல் - 1

நேர்மையுடனும், தைரியமாகவும் பத்திரிகை தர்மத்தைக் கடைப்பிடித்து, நியாயமாகவும் தலையங்கம் எழுதுவதில் தலையாயது கல்கிதான்!

- ஆர். சியாமளா,
சென்னை - 28

சமூக அக்கறையோடு வெளிவரும் தவணை முறை தற்கொலை தொடர் அருமை! கல்கியின் பணிக்குப் பாராட்டுகள்!

- ஜெ.மகேஷ்குமார்,
கோவில்பட்டி

தர்மசக்தி தலைப்பிலான அருள்வாக்கு தேர்தல் பற்றி தெள்ளத்தெளிவாக எடுத்துச் சொன்னது.

- ரா.ராஜேஸ்வரி, சென்னை - 32

நுகர்வு வேட்கை தலைப்பில் உள்ளிருக்கும் அன்பைக்கூட வெளிப்படையாகக் காட்ட வேண்டிய கட்டாயச் சூழ்நிலையை விவரித்திருந்தார் ஷங்கரநாராயணன்!

- கவிஞர் அய்யாறு எஸ்.வாசுதேவன்,
சென்னை-14

'தீராத விளையாட்டுப் பிள்ளை'யாக விட்டலன் இருந்தாலும், படிப்பதற்கு ஆன்மிக விஷயங்கள் நிறையவே உள்ளன.

- ஆர்.ராஜாமணி, சென்னை - 88



அமைச்சரவை குருப் ஃபோட்டோ சூப்பர் சாரே! அதிலும் 'மிஸ்டர் கிளீனுக்கு' இடது, வலது பக்கங்களில் அமர்ந்துள்ளவர்களும் 'கிளீன்'தானே?

- எஸ்.பாலநிமலன், மதுரை - 3

காதலுக்காக வாசகர்களைக் கொண்டே பட்டிமன்றம் டைப்பில் விவாத மேடை அமைத்தது புதிது.

- எஸ்.அமிர்தா, சென்னை - 26

நிறை, குறைகளைச் சுட்டிக் காட்டிய 'சர்வம்' திரைப்பட விமர்சனம் புதுமை, இனிமை!

- ஏ.பி.எஸ்.ரவீந்திரன், வள்ளியூர்

வால்மீகி படம் பற்றிய தகவல்கள் படம் பார்க்க வேண்டும் என்ற ஆவலைத் தூண்டின. எப்போது வரும் என ஏங்க வைத்தன.

- என்.காளிதாஸ், சிதம்பரம்

'***கா***தைக் கொடுத்ததில்' சுவையான அரசியல் ரகசியங்கள் படிக்க ஆச்சர்யம் ப்ளஸ் ஆனந்தம்!

- பி.ராகவன், சென்னை - 44

ஒளிப்பதிவாளர் சித்தார்த்தைப் போலவே அவரது பேட்டியும் வெரி ஸ்மார்ட். ஹீரோ ஆக டிரை பண்ணலாமே!

- ஜி.எம்.மஞ்சரி, கிருஷ்ணகிரி

கிளப்பறாங்க பீதிய!



''டெஸ்ட் போட்டி இறந்துபோனால் நான் கவலைப்பட மாட்டேன்'' என்று மேற்கு இந்தியத் தீவுகள் கேப்டன் கிறிஸ் கெய்ல் சமீபத்தில் உதித்த அபாயகரமான சொற்கள் தான் கிரிக்கெட் உலகில் பரவலாக விவாதிக்கப்பட்டு வருகின்றன. இனி வெள்ளை உடை ஆட்டங்களுக்கு அழிவு காலம்தானா? ஐந்து நாளும் ரசிகர்களைத் தன் பிடிக்குள் வைத்திருக்கும் டெஸ்ட் போட்டிகளை இனி வீடியோ கேசட்டில்தான் பார்க்கமுடியுமா என்கிற கவலையும் விவாதமும் எழுந்துள்ளன.

ஐ.பி.எல்-லில் உங்களைக் கவர்ந்த இந்திய வீரர் யார் என்று சச்சினிடம் கேட்டதற்கு, ''இதுபோன்ற போட்டிகளில் ஒரு திறமையைக் கண்டுபிடிப்பது தவறானது. ஒருநாள் மற்றும் டெஸ்ட் போட்டிகள் மட்டுமே ஒரு வீரரை முழுமையாகப் பரிசோதிக்கக்கூடியவை'' என்று உறுதியாகச் சொன்னார் அவர். ஆனால் 20-20 போட்டிகளில் தென்படும் திறமைகளை இந்திய அணிக்குள் நுழைக்கும் ஏற்பாடுகளும் நடந்துகொண்டுதானிருக்கின்றன. யூசுப் பதான், ஓஜா, மிஸ்பா உல் ஹக் (பாகிஸ்தான்) என்று இதற்கு உதாரணங்கள் உண்டு.

டெஸ்ட் போட்டி ஒதுக்கப்படுவதாகத் தோற்றம் அளித்தாலும் 20-20 மீதான பிரியங்கள் எல்லாம் சில மாதங்களுக்குத்தான். 20-20 உலகக்கோப்பை முடிந்தபிறகு ஒரு ரசிகன் தானாக ஒருநாள் மற்றும் டெஸ்ட் போட்டிகளை ரசிக்க தன்னைத் தயார்ப்படுத்திக்கொள்வான். ஆஸ்திரேலியா, இங்கிலாந்து, இந்தியா போன்ற நாடுகளில் நடக்கும் டெஸ்ட் போட்டிகளுக்கு அரங்கு நிறைந்த வரவேற்பு கிடைப்பதுண்டு.




கெய்ல் போட்ட ஒரு பால்!

மோசமான பிட்ச்கள்தான் டெஸ்ட் போட்டிகளின் பெரிய எதிரி. ஐந்து நாட்கள் ஆட்டம் தொடர்ந்தும் டிரா ஆட்டங்கள்தான் டெஸ்ட் போட்டிகளுக்கு எதிரிகளைச் சம்பாதித்துக் கொடுக்கின்றன. இரு அணிகளும் முதல் இன்னிங்ஸில் 600 ரன்கள் அடித்தாடும்போது அங்கு ஐந்தாவது நாள் அர்த்தமற்றுப் போய் ஆட்டமும் பாழாகிவிடுகிறது. ஆஸ்திரேலிய நாட்டு கிரிக்கெட் பிட்ச்கள் அனைத்துமே பேட்ஸ்மேன், பௌலர் என இருவருக்கும் சாதகமாக இயங்கக்கூடியவை. அந்தக் கொடுப்பினை எல்லா நாட்டு பிட்ச்களிலும் இல்லை. இதனால்தான் கெய்ல் போன்ற வீரர்களுக்கு டெஸ்ட் போட்டிகள் மீது வெறுப்பு வந்துவிடுகிறது.

கொல்கத்தாவில் ஆஸ்திரேலியாவுக்கு எதிராக திராவிடும் லஷ்மணும் பெரிய மலையையே புரட்டிப் போட்டதும், சென்னை டெஸ்ட் போட்டியில் நான்காவது இன்னிங்ஸில் ஷேவாக்கும் சச்சினும் இங்கிலாந்துக்கு எதிராகத் துணிந்து ஆடியதும் டெஸ்ட் கிரிக்கெட்டின் மறக்க முடியாத தருணங்கள். கிரிக்கெட் நிலைக்கும் வரை டெஸ்ட் போட்டிகளும் உயிர்ப்புடன் இருக்கும்.

'இதென்ன சரியான இடத்துக்குத்தான் வந்திருக்கோமா?' - ரேடியோ ஒன் 94.3 எஃப்.எம் அலுவலகத்தில் நுழைந்ததும் இப்படி ஒரு சந்தேகத்தில் திகைத்து நின்றோம். காரணம், ஆறேழு பேர் கிரிக்கெட் விளையாடிக் கொண்டிருந்தனர். நாம் திரும்ப நினைக்கையில் சல்மான்கான் ரேஞ்சில் இருந்தவர், ''ஹலோ பாஸ் இது ரேடியோ ஒன் ஆஃபீஸ்தான். நான் நவ்நீத். ஸ்டேஷன் டைரக்டர் கம் புரோக்ராம் ஹெட்'' என்று தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டார். ''இப்படி அடிக்கடி ஏதாவது விளையாடினாதான் நம்ம பசங்களுக்குப் புத்துணர்ச்சி வருது. இங்கே கேரம், டேபிள் டென்னிஸ், ஃபுட்பால் விளையாடக் கூட வசதிகள் இருக்கு. எங்க 'ரேடியோ ஒன்' யூத்ஃபுல்லான புரோக்ராம் தர்றதால வொர்க் பண்றவங்களும் யூத்ஃபுல் மைண்டோட இருக்கணும்னு இதெல்லாம் செய்யறோம்'' என்றார்.



நான்-ஸ்டாப் நண்பர்கள்!

- அட்டகாச ஆர்.ஜே.க்கள்



* நவ்நீத்

மெயின்ஹாலில் நுழைந்ததும், ஏதோ நர்சரி பள்ளியில் இருப்பதுபோல சுவர்களின் இரண்டு பக்கமும், எதை, எதையோ கிறுக்கி அதற்குக் கீழ் கையெழுத்து போட்டிருந்தார்கள். சுவரின் மேற்பகுதியைக் கூட விட்டுவைக்கவில்லை. ''இதென்ன சின்னப்புள்ளத்தனமால்ல இருக்கு'' என்றோம். அதற்கு நவ்நீத், ''இது சின்னப் புள்ளைங்க பண்ண வேலையில்லை... ரொம்பப் பெரிய புள்ளைங்க பண்ண வேலைதான். பிரபல சினி ஸ்டார்ஸ் எங்க ஸ்டுடியோவுக்கு வந்து அவங்க ஒபீனியனை இப்படி எழுதி வெச்சிருக்காங்க. இதெல்லாம் பொன்னெழுத்துகளால் பொறிக்கப்பட வேண்டியவை'' என்றார்.

தங்களது குரலால் மட்டும் அறிமுகமாகி இருந்த ஜாக்கிகளின் திருமுகம் பார்க்க, ஆர்வத்துடன் பூத்துக்குள் நுழைந்தோம்.

''இது ரேடியோ ஒன் 94.3. நேரம் நான்கு மணி ஆகப்போகுது. இது டைம் பாஸ் வித் அருண்'' என்று நான்-ஸ்டாப்பாகப் பேசிக் கொண்டிருந்த அருண் பிரேக்கில் நம் பக்கம் வந்தார்.

''சார் என்னோட பேச்சுல இன்வால்வ் ஆகி ஒரு ஸ்கூல் படிக்கற பொண்ணு என்னை லவ் பண்றதா லெட்டரெல்லாம் போட்டிருச்சு. உங்களைப் பார்க்கணும் போல இருக்குன்னு ஃபோன் பண்ணினா. இதை இப்படியே விடக் கூடாதுன்னு நம்ம ரேடியோ ஒன் ஆஃபீஸுக்கு வரச் சொல்லி, 'இது லவ் பண்ற வயசில்லை, படிக்கிற வயசு'ன்னு அட்வைஸ் பண்ணி அந்தப் பொண்ணோட மனசை மாத்தி அனுப்பினேன். ரேடியோ ஜாக்கிக்கு இந்த மாதிரி பொறுப்புணர்ச்சியும் தேவை'' என்று அடக்கமாகப் பதிலளித்தார்.

நீங்க இவ்ளோ நல்லவரா? சொல்லவே

இல்ல... ரொம்ப ஃபீலிங்ஸா இருக்குங்க! (சும்மா உல்லுல்லாயி!)

''ஏய் ஏய் நீயே பேசிக்கிட்டிருந்தா எப்படி? தள்ளு... நான் ரெண்டு வார்த்தை பேசிக்கிறேன்'' என்று முன்னால் வந்தார் சுசி.

''ரேடியோ ஒன்னில் தினமும் காலை சுசி சபாவில் பேசுறேன். கிருஷ்ணன் என்பவர் ரொம்ப நாளா என்கிட்ட பேசுவார். வேறுபட்ட டாபிக்கில் நிறைய ஐடியாக்கள் சொல்வார். ஒரு நாள் கலர்ஸ் பத்திப் பேசிக்கிட்டிருந்தேன். கிருஷ்ணனும் பேசினார். ஒவ்வொரு கலரைப் பற்றியும் ஆச்சரியப்படும்படி அழகா விளக்கினார். எப்படி ஸார் உங்களால முடியுது என்றேன்.

'சுசி நான் கண் பார்வை இல்லாதவன். ஒவ்வொரு கலரைப் பற்றியும் நானாக கற்பனை செய்து வைத்திருக்கிறேன். அதைத்தான் உங்களிடம் சொன்னேன். அது சரியாக இருந்தது' என்றார். அவருக்குக் கண்பார்வையில்லாதது அப்போது தான் தெரிந்தது. ரேடியோ ஒன் நிகழ்ச்சி இளைஞர்களையும் தாண்டி அனைத்து ஆடியன்ஸுக்கும் ரீச் ஆகுதுன்னு நினைக்கிறப்ப ரொம்ப சந்தோஷமா இருக்கு'' என்றார்.

இதுதாங்க உண்மையான ஃபீலிங்!

- ராகவ்குமார்



* சுசி அண்ட் அருண்

அடுத்தடுத்த அதிரடிகள்

கல்கி 21.06.09 & 28.06.09 இதழ்களில்...

- திருவாரூர் நாகைக்கு என்ன தேவை?
- உப்பு தேசத்தில் ஓர் உலா...
- வருந்தாதே...வருத்தப்படுகிறேன்...
- எங்க ஊர் துபாய் ஆகுமா?
- அர்ச்சனை தட்டில் பேனா..!
- காசிக்கு இணையான ஸ்ரீவாஞ்சியம்!

இன்னும் சுவாரஸ்யத் தகவல்களுடன்...

சுறுசுறுன்னு தயாராகுது... விறுவிறுன்னு வாங்கிப் படிங்க..!

திருவாரூர் நாகை மாவட்ட ஸ்பெஷல்ஸ்

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / CC (S) DN / 144 / 09 -11 * Licensed to post without prepayment under PMG's Licence No. WPP TN / CC (S) DN / 70 / 09 - 11* Registered as a Newspaper in Srilanka.

BSA MOTORS

Introduces India's Largest Range of eScooters

MURUGAPPA GROUP





biking unplugged

Experience next-gen biking technology in our all new range of electric scooters. For the school going youngster, the next-gen girl, the college dude, the working woman, the housewife, for the entire family. These eScooters are not just economical and eco-friendly but fun to drive as well. With sleeker & sturdier designs, more powerful motors and longer lasting batteries these eScooters are unlike any others, made in India for India. So spin that throttle and start biking unplugged.

Just Call: 1800 209 4488, 092255 04488 or SMS "BSA" to 58677 and escape to the future. www.bsamotorsindia.com

ENNAI: **BSA MOTORS**, Land Marvel Building, MG Road, Besant Nagar Church Road, Shasthri Nagar, Opp Kovai Palamudhir nilayam, Besant Nagar – 600090. Phone: 044 42018964/9840126666. **T BUY CYCLES**, No. 220 GST Road, Near Valluvar Gurukulam, Tambaram – 600045. Phone: 044 22383833/9841038887/9841275741. **SASTHA MOTORS**, 150 Redhills Road, Barathi Nagar, Pudhur, pattur-600053. Phone: 044 64622111/9840071280. **THIRUVALLOOR: VIJAYALAKSHMI MOTORS**, 4/120, JN Road. 602001. Phone: 044 27665914/9600945612/9600945611/13/14/15. **THIRUNELVELI: KATESHWARA AUTO AGENCY**, No.18 South Bypass Road, Opp: Vijaya Garden, 627 103. Phone: 0462 2575778/0462 6450508/9442787878. **SALEM: SRI LAKSHMI MOTORS**, 128-C, Town station road, 636 001. e: 0427 2451105/9894752323. **COIMBATORE: SANKRITHI MOTORS**, No. 64, Sri Sai Complex, Old No 216, New No 147, Thadagam Road, Velanpipalayam, 641025. Phone: 97894 90989/92453 43881. **MAHALINGAM & CO**, 68, Dr.nanjappa road, 641018. Phone: 0422 2239802/9843884908. **ERODE: KRISHNA MOTORS**, 165 Perundurai Road, Palayapalayam, 638 011. Phone: 0424 2277049/9442294425. **YILADUTHURAI: SANA BIKE ZONE**, Door no:117 no:2 Gandhiji Road, 609001. Phone: 04364 223786/9364404362/9364604364. **NAGER COIL: MARIKAR MOTORS**, 28 College Road, Tower Junction, 001.Phone: 04652 223605/9994793012. **PONDICHERRY: YOGIRAM AGENCIES**, GRR Zone, Opp to Botonical Garden, 605001. Phone: 0413 2221727/9842337037/9677737037.